# நமது செட்டிநாடு

மலர் 11 ✿ மணம் 04 ✿ ஸ்ரீ விசுவாவசு ஆண்டு ✿ ஆவணி ✿ ஆகஸ்ட் 2025 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 11 ✿ Issue 04 ✿ August 2025 ✿ Rs.25



அருள்மிகு ஸ்ரீ பகச்சால மூர்த்தி ஐயனார், இலங்குடி

# செட்டிநாட்டரசர் முத்தையவேள்

## 121 ஆம் ஆண்டு பிறந்த நாள் (05.08.1905)



**செ**ட்டிநாட்டரசர் அண்ணாமலையார் – ராணி சீதை ஆச்சி தம்பதியர்
நாட்டிற்காய் நன்முத்தை ஈந்த நன்னாள்
ஆகத்து ஐந்து ஆயிரத்து தொள்ளாயிரத்தைந்து.
செகத்துக்கே சேவை செய்ய உதித்தார் முத்தையா சூரியனாய்.
கண்ணை இமைபோல் காத்துயர்ந்தார் தாய்மொழியை,
காவலனாய் போற்றி நின்றார் தமிழிசையை.
அரச குடும்ப விருந்தோம்பல் உயிர்மூச்சு
ஊரெங்கும் இதுவே பேச்சு
சென்னை திருச்சிதனில் பள்ளிக்கல்வி
மாநிலக்கல்லூரி வரலாறு, அரசியல் பட்டம் இருபதுகளில்.
முப்பதுகளில் சென்னைமாநகர முதல் மேயர்,
கல்வி, மருத்துவம், கலால் அமைச்சர்.
சட்டமன்றம்,மேலவையில் தொடர் பங்களிப்பு .
தொழில், வணிக அமைப்புகளில் முன்னோடித் தலைமை.
எழுபதுகளில் பத்மபூஷண் விருதாளர்.
சிதம்பரத்தில் மீனாட்சி பெயரிட்ட விதை
அண்ணாமலை பல்கலை விருட்சமானது.
நாற்பதுகளில் இரண்டாம் இணைவேந்தராய்
விரிவாக்கம் பல கண்டார்.
சட்டம், மருத்துவம் என புதியன புகுந்தன.
கல்வி, நுண்கலை கலாச்சாரம் துறைகள் சிறந்தன.
கடல்வாழ் உயிரியல், மொழியியல்
உயராய்வு ஓங்கி வளர்ந்தன.
ஈடில்லா மக்கள் பணிகளுக்காக எழுபதுகளில் பத்மபூஷண்
எண்பத்து நாலில் விண்ணுலக சேவைக்கு
மண்ணுலகை பிரிந்த மாமனிதர் முத்தையவேள்
எந்நாளும் நம் மனதில் வாழ்வார் நிலைத்து.
கவியாக்கம் தந்த அடியேன் இராமநாதன்
புவிவந்த நாளும் ஆகத்து ஐந்தே.
செவிமடுப்பேன் அரசர் வாழ்த்துரைக்கும்
வாசகர்தம் நல்வாழ்த்தை அடியேனும்.

– (அரு.இராமநாதன், சிதம்பரம்)

நமது செட்டிநாடு

மலர் 11 மணம் 04 ஆகஸ்ட் 2025
ஸ்ரீ விசுவாவசு ஆண்டு ஆவணி மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்

ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
இல.பழனியப்பன், கண்டரமாணிக்கம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்

புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,
தட்டச்சு: முரு.மலர்விழி

வடிவமைப்பு: பி.தாமோதரன்

விளம்பரம் தொடர்புக்கு: 99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com

செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள்
மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
கைப்பேசி: 78258 55838

கரு.மணிகண்டன், மக்கள் தொடர்பு அலுவலர்,
காரைக்குடி - 86818 28284

இதழ் சந்தா விவரம்
ஓராண்டு ரூ.300/- இரண்டாண்டு ரூ.500/-
ஐந்தாண்டு ரூ.1250/-

Cheque/ NEFT/ Gpay

Chettinad Print Media P Ltd,
A/C No: 6412480441
Indian Bank, Thousand Lights Branch,
Chennai - 600 006. IFSC : IDIB000T020,
(OR)
Chettinad Print Media P Ltd.
A/C No:57500000199320
HDFC Bank, R.K.Salai Branch,
Chennai - 600 004, IFSC : HDFC0001097

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.
விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில்
வெளியாகின்றன.

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com

வாட்ஸ்ஆப்: 9962243750



# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அவசியம்

21-ஆம் நூற்றாண்டின் முதல் இருபது வருடங்களில் தகவல் தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சி அன்றாட வாழ்க்கையின் எல்லா நிகழ்வுகளிலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக ரோபோக்கள், துரோன் தொழில்நுட்பம், இயக்குநர் இல்லா போர் விமானங்கள், கார், மெட்ரோ இரயில் என விரிவடைந்து இன்றைக்கு செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பிற துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலையில் தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சி பெற்று வருகிறது. பல்கலைக் கழகங்களில் செயற்கை நுண்ணறிவுப் பாடம் படிக்க மாணவர்கள் அதிக அளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். உலகின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப முன்னணி நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு ஆதிக்கத்தின் விளைவாக ஆட்குறைப்பு செய்வதில் ஈடுபட்டு வருகின்றன. மேலும், புதிதாக ஆட் சேர்க்கையும் தவிர்த்து வருகின்றன. அதிக அளவில் மென்பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ஒரு இந்திய மென்பொருள் நிறுவனம் மட்டும் 20% வரை ஆட்குறைப்பு செய்ய உள்ளதாக தகவல்கள் வருகிறது. இதனால் பல இந்திய மென்பொருள் வல்லுநர்கள் பணி இழப்புக்கு ஆளாக நேரிடும் எனவும் கணிக்கப்படுகிறது. பத்து தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் செய்யும் வேலையை ஒரு பணியாளரைக் கொண்டு செயற்கை நுண்ணறிவு உதவியுடன் விரைவாகவும், துல்லியமாகவும் செய்யலாம் என்ற நிலை உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இந்நிலையில், முன்னணி நிறுவனங்கள் மேலும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாம் எனத் தெரிகிறது. வருங்காலங்களில் எந்தப் படிப்பாக இருந்தாலும் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்ப அறிவியல் கூடுதல் தகுதியாக அமையும் நிலை ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்ல தற்போது தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் பணிபுரிவோர் தாங்கள் தொடர்ந்து பெரிய நிறுவனங்களில் பணிபுரிய செயற்கை தொழில்நுட்ப அறிவைக் கூடுதலாக பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இந்நிலையைக் கருத்தில் கொண்டு பள்ளி, கல்லூரிகளில் பயிலும் நம்மவர்கள் செயற்கை தொழில்நுட்பத்திலும் கவனம் செலுத்தி அதன் அடிப்படை அம்சங்களை அவசியம் தெரிந்து வைத்துக் கொள்வது, மேற்படிப்பிற்கும், வேலை வாய்ப்புக்கும் உதவிகரமாக இருக்கும். ♦

உ
திருச்சி ஸ்ரீ வளத்தி
சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
துவக்கம் 2005
வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி) லிட். ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
VALATHI 2005
பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை
எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு
ரூ. 1,00,000/- முதல் ரூ. 30,00,000/- வரை
அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை
பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!
இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.
0431-2760064
0431-7968005
TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,
94439 86143
"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் - கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143
"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1), அருணோதயா அபார்ட்மென்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029
எண். 1, முதல் தளம்,
பழைய சொக்கநாதர்-
-கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001.
Cell : 89034 90064
★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com www.valathichitfunds.com


## உள்ளே...


இலங்குடி குடமுழுக்கு ................................ 08

காசி - இராமேஸ்வரம் தீர்த்தங்களை பரிமாறிக்கொள்ள வழிபாட்டு ஒப்பந்தம் ....... 10

வாங்க... வாங்க... தாய்லாந்துக்கு வாங்க.... 12

நகரத்தார் திருப்பணிகள்............................. 14

திருமாலின் திவ்ய தேசங்கள் .................... 16

தொழில் தொடங்கலாம் வாங்க ................. 19

அருண் பதிப்பக உரிமையாளர் அருணாசலம் ... 22

இந்தியாவின் வளர்ச்சியில் இஸ்ரோவின் பங்கு.. 26

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு ....... 28

உணர்ச்சி மாடலிங் யுக்தி ......................... 32

ஏழிளந்தமிழ் - மூதுரை - உரை செம்மல் வ.சுப.மாணிக்கனார் ..................... 34

இராம காவியம் ......................................... 35

திருமந்திரச் சுவை .................................... 36

பூலாங்குறிச்சி - சுப்பு மெய்யப்பன் அவர்களுடன் ஒரு நேர்காணல் ................. 37

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன் ....... 40

நகரத்தார் சிகரத்தார் ................................. 42

பக்.. பக்.. பக்கும் ........................................ 44

பழ.பழனியப்பன் - எஸ்பி.முத்துராமன் கம்பன் கழக விருது ................................ 47

கலைமாமணி ஆறு. அழகப்பன் 89ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா .......... 47


Vees Star™
Diamonds & Jewelry
ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை
GIA
CERTIFIED
SOLITAIRE
CHENNAI: W-182, NORTH MAIN ROAD ANNA NAGAR WEST EXTN., TN-600 101.
SURAT: SURAT DIAMOND BOURSE DREAM CITY KHAJOD, GUJARAT - 395007.
www.vstardiamonds.com
CHENNAI - 044 4553 6003 1, 9383007477
MADURAI - 9884473330
KARAIKUDI - 9884803349
S. விஜயகுமார்
V. விசாலாட்சி
பள்ளத்தூர்


Innovative Homes & Developers Pvt. Ltd.
Creating Value & Lifestyles
SINCE 1999
25
YEARS OF EXCELLENCE
சொந்த நிலத்தில வீடா?
உங்கள் கனவில்லத்தை கட்ட
Innovative Homes தயார்.
Joint venture-ஆ? இல்ல contract-வீடா?
We do both, Flat development & Individual house construction!
Book your Flat Now!
K.K.Nagar
Chennai, S+5 floors.
Virugambakkam
Chennai, S+5 floors.
98410 12145
www.innovativehomes.in
7/11,1-A, Bharathi Nagar 2nd Street,T.Nagar, Chennai - 17
இன்னோவேடிவ்
அண்ணாமலை


SRM
SMILE RADIATE MESMERISE
DENTAL CLINIC
Madurai
23 years
உலகத்தர
இம்ப்ளாண்ட் தொழில்நுட்ப
வசதி கொண்ட மிகச்சிறந்த
பல்மருத்துவமனை
மதுரையில் !
Dr.R.மெய்யப்பன்
M.D.S, F.ISOI
Endodontist & Implantologist
ஒரே நாளில்
இம்ப்ளாண்ட் பற்கள்!
All on 4 இம்ப்ளாண்ட் பல்செட்
All on 6 இம்ப்ளாண்ட் பல்செட்
Zygoma இம்ப்ளாண்ட் (எலும்புதேய்ந்தவர்களுக்கு)
இம்ப்ளாண்ட் support கழற்றிமாட்டும் பல்செட்
SRM Dental ஹாஸ்பிட்டலில்,
நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய
அதிநவீன பல் சிகிச்சை!
நன்மைகள்: நிலையான மற்றும் நிரந்தர தீர்வு | இயற்கையான
தோற்றம் கொண்ட பற்கள் | உறுதியானது & வசதியானது.
நம்பிக்கையுடன் புன்னகைக்க தயாரா?
SRM DENTAL CLINIC
94432 52108
மதுரை
SRM Dental Clinic
Adjacent To Income Tax Office, B.B. Kulam, Madurai - 2.
Email : info@srmdentalclinic.com

# இலங்குடி குடமுழுக்கு



தேவகோட்டை இராமநாதன்



இலங்குடி:

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் முன்பு வாழ்ந்த பழைய 96 ஊர்களில் இலங்குடியும் ஒன்றாகும். இங்கு வாழ்ந்தவர்கள் தான் இடம்பெயர்ந்து பல ஊர்களுக்குச் சென்று உள்ளார்கள். இளையாத்தக்குடி - ஒக்கூர் நகரத்தார்களின் திருப்பணியால் ஊரின் மையத்தில் மிளிர்கின்ற ஊருணியும், பிள்ளையார் கோவிலும் இதற்கு முன்பு நகரத்தார்கள் இலங்குடியில் வாழ்ந்ததற்குச் சான்றாக உள்ளன.

கானகம் சுற்றிய வேடுவன் ஒருவன் மிகுந்த களைப்புடன் ஓய்விற்காகப் பாலை மரத்தடியில் அமர்ந்திருந்த போது அம்மரத்தைச் சுற்றி ஒரு கவலைக்கிழங்குக் கொடி ஒன்று படர்ந்து மேனோக்கிச் செல்வதைக் கண்டான்.

அக்கொடியின் வேர்ப் பகுதியிலிருக்கும் கவலைக் கிழங்கை பசியோடு இருந்த அவன் உண்ணக் கருதி வேர்ப்பகுதியைத் தோண்டும் பொழுது கடப்பாறையானது ஒரு கல்லில் மோதும் ஒலி கேட்டது. அப்போது அவ்விடத்தை அகழ்ந்து தோண்டிப் பார்த்த நல்வேளையில் அருள்மிகு பகச்சால மூர்த்தி ஐயனார் சிலை வெளிவந்தது.

பிறகு அங்கிருந்த முதியவர் கனவில் ஐயனார் தோன்றி கற்கோயில் உருவாக்க உத்தரவிட்டார். அதன்படி தனவணிகர்களாகிய நகரத்தாரின் பொருளுதவி கொண்டு இக்கோயில் அமைக்கப் பெற்றது.

பாலை மரத்தின் அடியில் இருந்த ஐயனார் சிலையை அவ்விடத்திலிருந்து எடுத்து வந்து நகரத்தார்கள் திருப்பணியால் கற்றளி ஆலயமாக அமைத்து அவ்வாலயக் கருவறையில் வைத்துச் சிறப்பித்தனர். இந்த ஆலயத்தின் கட்டுமான அமைப்பைப் பார்க்கும் போது 1800-களின் துவக்கத்தில், அதாவது 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருப்பணியை மேற்கொண்டு இருக்கலாம் எனத் தெரிய வருகிறது.

மேற்படி திருப்பணி செய்யப்பட்ட இந்த ஆலயத்திற்கு முன்பு நடந்த குடமுழுக்கு ஆண்டு விவரம் சரிவரத் தெரியவில்லை.

ஆனால், 1953-ல் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரால் சரிபார்த்து வெளியிடப்பெற்ற "நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு" எனும் நூலில் இலங்குடி ஆலயத்தின் திருப்பணி பற்றிய விவரம் குறிப்பிடப் பெற்றுள்ளது.

அந்நூலின்படி பழமை வாய்ந்த இக்கோவிலை தேவகோட்டை அரு.லெ.குடும்பத்தார்கள் அன்றைய மதிப்பில் ரூ. 35,000/- செலவிட்டுத் திருப்பணி ஆற்றியும், ரூ. 15,000/- செலவிட்டு "பிரமோதூத வருஷம், ஆனி மாதம், 23-ஆம் நாளன்று (07.07.1930) குடமுழுக்குச் செய்தனர்" என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளது. மேற்படி கும்பாபிஷேகம் காரைக்குடி ஆவி.ப.முரு.மு. முருகப்ப செட்டியார் அவர்களின் பெரும் முயற்சியால் நடைபெற்றுள்ளது.

காரைக்குடி வைரவன் கோவிலைச் சார்ந்த பி.அ. குடும்பத்தார்கள் பிள்ளையார் கோவிலும், ஊருணியும் அன்றைய மதிப்பில் ரூ.30,000/- செலவில் அமைத்துள்ளனர்.

இத்திருக்கோவிலுக்கு வந்து வழிபடுவோரின் நலம் கருதி தன் பொருளைக் கொண்டு காரைக்குடி ஆவி.ப.முரு.மு. முருகப்ப செட்டியார் அவர்களின் பெரும் முயற்சியால் 1924-ல் அன்றைய மதிப்பில் ரூ.25,000/- செலவில் நகர விடுதி ஒன்றை அமைத்துள்ளனர். இந்த விடுதி 29.01.2012-ஆம் ஆண்டு நடைபெற்ற குடமுழுக்கில் திருப்பணிக் குழுவினரால் சீர்திருத்தம் செய்யப் பெற்றுள்ளது.

மேற்படி நகர விடுதியில் 1930-ல் நடைபெற்ற குடமுழுக்கின் போது, மேற்படி நகர விடுதியில் வைத்து இத்திருக்கோவிலுக்குக் குடிமையாய் உள்ள நகரத்தார்களின் பொருளுதவியைக் கொண்டு காரைக்குடி ஆவி.ப.முரு.மு. முருகப்ப செட்டியார் அவர்களின் பெரும் முயற்சியால் பகச்சாலமூர்த்தி அய்யனாருக்கு வெள்ளி





அங்கி செய்யப் பெற்றது.

திருப்பத்தூர் – தேவகோட்டை பெரிய சாலையில் இருந்து திருக்கோவிலுக்குச் செல்வதற்கு அன்றைய மதிப்பில் ரூ.10,000/– செலவிட்டு கற்சாலை ஒன்றும் அமைத்துள்ளனர் என்றும், இத்திருக்கோவிலைக் குலதெய்வமாகக் கொண்ட இளையாத்தக்குடி – ஒக்கூர் பிரிவினரால் அன்றைய மதிப்பில் ரூ. 25,000/– செலவில் செம்பாறாங் கல்லினால் ஆன கற்கட்டு ஊருணி ஒன்றை இலங்குடி ஊரின் மையப் பகுதியில் உருவாக்கியுள்ளனர் என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளது. அதன் அருகில் பிள்ளையார் கோவில் ஒன்றும் ஒக்கூர் பிரிவினரால் உருவாக்கப் பெற்றுள்ளது.

இங்கு அமைந்துள்ள தண்டாயுதபாணியின் சிலை மிகவும் நேர்த்தியாக உள்ளது. பழநி முருகன் கோவிலில் உள்ளதைப் போன்ற அமைப்பில் உள்ளது. பினாங்கு தண்ணீர்மலை தண்டாயுதபாணியின் சிரசில் உள்ளது போல், சீனர்களின் குடுமி வடிவத்தைப் போன்று இந்த முருகனின் தலையின் பின்புறத்திலும் குடுமி அமைந்துள்ளது. நாள் முழுவதும் இந்தச் சிலையைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் எனும் அளவில் அழகுற அமைந்துள்ளது.

### பாலையடி:

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து இளையாத்தக்குடிக்கு வந்த நகரத்தார்கள் சில காலம் அங்கு வாழ்ந்த பிறகு, நகரத்தார்களில் பெரும்பகுதிக் குழுவினர் பல்வேறு ஊர்களுக்குப் பெயர ஆரம்பித்த காலத்தில் "இலங்குடியில் உள்ள பாலையடியில் வந்து சேர்ந்த பிறகு தான் பல்வேறு ஊர்களுக்குப் பிரிந்தார்கள்" என்று சொல்லப் பெற்று வருகிறது.

ஆகவே, தான் மிக அதிகமான 23–க்கும் மேற்பட்ட ஊரினைச் சார்ந்த 5,000–க்கும் மேற்பட்ட புள்ளிகளைக் கொண்ட நகரத்தார்களின் வழிபாட்டுக்குரிய குலதெய்வமாகத் திகழ்கிறது.

### தலவிருட்சம் பாலை மரம்:

பாலை (Manilkara hexandra) என்பது ஒருவகை மரமாகும். இது பலகையாக பயன்படுத்துவதற்கு ஏற்ற மிகவும் உறுதியான காட்டில் வளரும் மரமாகும்.

பாலைமரம் மிகவும் சிறப்புக்குரியது. தமிழர் நிலத்திணைகளில் ஐந்தில் ஒன்றான குறிஞ்சி, முல்லை ஆகிய நிலத்திணைகளுக்கு இடையிலமைந்த பாழ் நிலப் பகுதியை பாலை என்பர். இந்த பாலை நிலத்தில் விளையும் இந்த மரம், பாலைமரம் என்றே பெயர் பெற்றிருப்பதும் ஒரு தனிச் சிறப்பாகும்.

இலங்கையில் பாலை மரங்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும், வட மத்தியப் பகுதிகளிலும், தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை, மாத்தளை மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. இலங்கையைத் தவிர இந்தியா, வங்காளதேசம், மியான்மர், கம்போடியா, சீனா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளிலும் இத்தாவர இனம் காணப்படுகிறது.

இலங்கையில் தொடர்வண்டி சேவை தொடங்கிய காலங்களில் பாலை மரப்பலகைகளைப் பயன்படுத்தியே தொடர்வண்டி செல்வதற்கான தண்டவாளங்களுக்கான படுக்கைக் கட்டைகள் இட்டனர். ஆங்கிலேயர் இதனை "இலங்கை இரும்பு" (Ceylon Steel or Ceylon Iron wood) என்றும் அழைத்தனர். இருப்பினும் ஆங்கிலேயர் காலத்தில் போட்ட படுக்கைக் கட்டைகள் இன்றும் மக்கிப் போகாமல் உறுதியுடன் இலங்கையில் பல்வேறு தொடர்வண்டிப் பாதைகளிலும் காணப்படுகின்றன.

இலங்கையின் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் கட்டப்பட்டிருக்கும் அரசு அலுவலகங்கள், பாடசாலைகள் போன்ற கட்டடங்களின் கூரைத் தேவைக்குப் பெரும்பாலும் பாலை மரப்பலகைகளே பயன்படுத்தப் பெற்றுள்ளன. அவை நூற்றாண்டுகளாக மக்கிப் போகாமல் உழைக்கக் கூடியன. 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட செட்டிநாட்டு வீடுகளின் நிலைகள் பாலை மரத்திலேயே செய்யப் பெற்றன.

அவை கரையான் அரிக்காததாகவும், மிகவும் உறுதியானதாகவும் இன்று வரை உள்ளன. பாலையடி யானை வணங்கும் வண்ணமாகத் தானோ என்னவோ?

இதனைத் தெய்வ மரமெனக் கருதி செட்டிநாட்டு வீடுகளில் பாலை மரங்களால் நிலைகள் செய்யப் பெற்றுள்ளன. இத்தகைய பாலை மரமே இத்தலத்தின் மிகப்பெரிய பாலை மரமாக உருவத்தில் இன்றைக்கும் காணப்படுகிறது.

(களப்பணிதொடரும்)

# 'மணிமகுடத்தில் ஒரு மாணிக்கம்!'

## காசி - இராமேஸ்வரம் தீர்த்தங்களை பரிமாறிக் கொள்ள வழிபாட்டு ஒப்பந்தம்





பழ.கைலாஷ்

நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் பாரத தேசத்தில் வடக்கே காசி முதல் தெற்கே சேது வரை பற்பல புண்ணிய தலங்களில் பற்பல திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. நகரத்தார் செய்த மற்றும் செய்து வரும் திருப்பணிகளுள் மணிமகுடமாய் திகழ்வது காசி திருத்தலத்தில் காசிவிஸ்வநாதருக்கு நாள்தோறும் மூன்று வேளை செய்து வரும் பூஜையே! இது சுமார் 250 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வரகவி பாடுவார் முத்தப்பர்,

'காசியிலும் சேதுவிலும் கனகத் தருமமிட்டு
வாசமுள்ள ஈசர் பதம் மனம் பணிந்தார்'

என்று அன்றே நகரத்தார் வாரணாசியிலும், இராமேஸ்வரத்திலும் செய்த திருப்பணிகளை குறிப்பிட்டு பாடியுள்ளார்.

இன்று நகரத்தார் (ஏஎல்.ஏஆர் கட்டளை) சார்பில் புதிதாய் தொடங்கப்பட்டுள்ள புனிதநீர் பரிமாற்றம், மணி மகுடத்தில் ஒரு மாணிக்கமாக திகழ்கின்றது. காசி யாத்திரை செல்பவர்கள் முதலில் இராமேஸ்வரத்தில் அக்னி தீர்த்தத்தில் நீராடி, மணல் மற்றும் கோடித்தீர்த்தத்தை எடுத்துக் கொண்டு காசி சென்று, கங்கையில் நீராடி மணலைக் கரைத்து, காசி விஸ்வநாதருக்கு கோடித்தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து, பிரயாகையில் திரிவேணி தீர்த்தம் எடுத்து வந்து, இராமநாதருக்கு அபிஷேகம் செய்து யாத்திரையை நிறைவு செய்வார்கள்.

விஸ்வநாதருக்கு கோடித்தீர்த்தத்திலும் இராமநாதருக்கு திரிவேணித் தீர்த்தத்திலும் அபிஷேகம் செய்வது பெரும் புண்ணியமாக கருதப்படுகிறது.

கடந்த பல ஆண்டுகளாக தேவகோட்டை ஜமீந்தார் குடும்பத்தாரின் ஏஎல்.ஏஆர். கட்டளை (AL.AR Trust) சார்பில் இராமேஸ்வரத்தில் இராமநாதருக்கு தினம்தோறும் மாலை திரிவேணித்தீர்த்தத்தால் அபிஷேகம் செய்யப்படுகிறது. தற்போது இதன் புதிய முகமாக காசியில் காசிவிஸ்வநாதருக்கு கோடித்தீர்த்தத்தால் அபிஷேகம் செய்யும் மரபு ஏஎல்.ஏஆர். கட்டளை சார்பில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக காசி விஸ்வநாதர் ஆலய அறக்கட்டளையுடன் ஏஎல். ஏஆர். கட்டளை இணைந்து திரிவேணி மற்றும் கோடித்தீர்த்தத்தை பரிமாறிக் கொள்ளும் ஆன்மீக வழிபாட்டு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 28ஆம் தேதி காசி விஸ்வநாதர் கோயிலில் உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் மாண்புமிகு யோகி ஆதித்யநாத் அவர்களால் திரிவேணித்தீர்த்தம் கோவிலூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ நாராயண ஞான தேசிக சுவாமிகள் முன்னிலையில், ஏஎல்.ஏஆர் கட்டளையின் பிரதிநிதி சி.ஆர்எம்.அருணாச்சலம் செட்டியார் அவர்களிடம் வழங்கப்பட்டது.

ஆகஸ்ட் 9-ஆம் தேதி காசி விஸ்வநாதருக்கு இராமேஸ்வரத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட கோடித்தீர்த்தத்தால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. இந்த வரலாற்று நிகழ்வில், இதற்கு மிகமுக்கிய காரணகர்த்தவாகத் திகழ்ந்த கோவிலூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ நாராயண ஞான தேசிக சுவாமிகள், ஸ்ரீகாசி விஸ்வநாதர் ஆலய அறக்கட்டளை தலைமை நிர்வாக அதிகாரி விஸ்வ பூஷன் மிஸ்ரா, ஏஎல். ஏஆர் கட்டளையின் பிரதிநிதி சி.ஆர்எம்.அருணாச்சலம் செட்டியார், வாரணாசி ஆட்சியாளர் இராஜலிங்கம் இ.ஆ.ப மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தேவகோட்டை ஜமீந்தார் குடும்பத்தார் பெரும் திருப்பணியாளர்கள். சேதுபதி மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்ட இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயிலில்

தேவகோட்டை ஜமீந்தார் செய்திருக்கும் திருப்பணிகள் ஏராளம்.

19-ஆம் நூற்றாண்டு இறுதியில் இராமேஸ்வரம் கோயில் திருப்பணியை தேவகோட்டை ஜமீந்தார் அழ.அரு. இராமசாமிச் செட்டியார் தொடங்கினார், அவருக்கு பின் அவரது மகன்களால் திருப்பணி தொடர்ந்து நடைபெற்றது, பழுதடைந்திருந்த இராமநாத சுவாமி சந்நிதியின் மஹா மண்டபம், முதல் திருச்சுற்று, இரண்டாம் திருச்சுற்றின் பெரும்பகுதி மற்றும் பர்வதவர்த்தினி அம்மன் சந்நிதி ஆகியன முற்றிலுமாக பிரித்து புதிய கருங்கற்களால் கட்டப் பெற்றது. இடிந்து கிடந்த கிழக்கு கோபுரம் மீண்டும் எழுப்பப் பெற்றது, மேலும் கோயில் முழுமையும் பழுதுபார்த்து கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

தற்போது தேவகோட்டை ஜமீந்தாரின் ஏஎல்.ஏஆர் கட்டளை சார்பில் காசியில் தொடங்கியிருக்கும் வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு குறித்து ஜமீந்தார் குடும்பத்தை சேர்ந்த சி.ஆர்எம்.அருணாச்சலம் செட்டியார் கூறுகையில் ‘கடந்த ஏப்ரல் மாதம் கோவிலூரில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த காசி விஸ்வநாதர் கோயில் சி.ஈ.ஓ., விஸ்வ பூஷன் மிஸ்ரா, கோவிலூர் சுவாமிகளுடன் இராமேஸ்வரம் வந்து நம் நகரவிடுதியில் தங்கியிருந்த போது, கோவிலூர் சுவாமிகள் என்னை மிஸ்ரா அவர்களிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்கள். நான், எங்கள் குடும்பத்தார் இராமநாதசுவாமி கோவிலில் செய்திருக்கும் திருப்பணிகளையும், எங்கள் ஏஎல்.ஏஆர் கட்டளை பற்றியும் திரிவேணித் தீர்த்தத்தால் நாங்கள் அபிஷேகம் செய்து வருவது குறித்தும், கோடித் தீர்த்தம் குறித்தும் எடுத்துக் கூறினேன். பின்னர் நான் கோடித்தீர்த்தத்தையும், விபூதி பிரசாதத்தையும் மிஸ்ரா அவர்களிடம் கொடுத்தேன். அன்புடன் பெற்றுக் கொண்ட அவர் காசி சென்றதும், காசி விஸ்வநாதருக்கு அந்த தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து, அதன் வீடியோ காட்சியை முகநூல் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பகிர்ந்து செய்திக் குறிப்பில் கோடித் தீர்த்தத்தின் விஷேசம் குறித்தும், விஸ்வநாதருக்கு கோடித்தீர்த்தத்திலும், இராமநாதருக்கு திரிவேணித் தீர்த்தத்திலும் அபிஷேகம் செய்யும் மரபு முன்பு இருந்தது குறித்தும் எழுதியிருந்தார். அவரின் ஆர்வம் என்னை வியக்கவைத்தது. இராமேஸ்வரத்தில் நாம் செய்வது போல் காசியிலும் புதிதாய் தொடங்கலாமே என சிந்தித்து கோவிலூர் சுவாமிகள் மூலமாக மிஸ்ரா அவர்களை அணுகினேன். எங்கள் ஏஎல்.ஏஆர். கட்டளை சார்பில் காசி விஸ்வநாதருக்கு தினம்தோறும் ஒருவேளை கோடித் தீர்த்தத்தால் அபிஷேகம் செய்ய அனுமதி வேண்டி மிஸ்ரா அவர்களுக்கு கடிதம் அனுப்பினேன். உடனே அவர்களும் அதற்கு இசைவு தெரிவித்து, அவர்கள் எங்களுக்கு திரிவேணி தீர்த்தத்தை அனுப்புவதாகவும், நாங்கள் அவர்களுக்கு கோடித் தீர்த்தத்தை அனுப்ப வேண்டியும் விஸ்வநாதருக்கு கோடித் தீர்த்தத்திலும் இராமநாதருக்கு திரிவேணித் தீர்த்தத்திலும் அபிஷேகம் செய்யும் மரபை மீண்டும் தொடங்குவோம் என ஒப்புதல் கடிதம் அனுப்பினார்கள்’ என்றார்.

மேலும் அருணாச்சலம் செட்டியார் கூறுகையில் ‘கடந்த ஜூலை 28-ஆம் தேதி காசியில் முதல்வர் யோகி ஆதித்யநாத் முன்னிலையில், கோவிலூர் சுவாமிகளுடன் நான், எங்கள் ஏஎல்.ஏஆர் கட்டளை சார்பில் திரிவேணித் தீர்த்தத்தை பெற்றுக்கொண்டேன். பின்னர் ஆகஸ்ட் 1-ஆம் தேதி இராமேஸ்வரம் கோயிலில் கோடித் தீர்த்தத்தை வைத்து பூஜை செய்து, கோவிலூர் சுவாமிகள் உதவியுடன் காசிக்கு அனுப்பினோம். காசியில் கோவிலூர் சுவாமிகள் நடத்தி வரும் அன்னஷேத்திரத்தில் தீர்த்தத்தை பாதுகாப்பாக வைத்திருந்தார்கள். ஆகஸ்ட் 9-ஆம் தேதி தீர்த்தத்தை கோயிலுக்கு ஊர்வலமாக எடுத்து வந்து கோவிலூர் சுவாமிகளுடன் நான், விஸ்வ பூஷன் மிஸ்ரா, வாரணாசி கலெக்டரான தமிழர் இராஜலிங்கம் ஆகியோர் கோடித் தீர்த்தத்தால் காசி விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்தோம்.’ என்றார்.

# வாழ்த்துகள்



AUSTRALIA - INDIA BUSINESS HIGHER STUDIES PROGRAMME-ல் நடைபெற்ற CHANGE OF LIVE AND NDTV மூலம் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட 7000 மாணவ, மாணவியர்களில் இருபது நபர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவர்களுக்கு NEW DELHI-யில் நடைபெற்ற இரண்டாம் கட்ட நேர்முகத் தேர்வில் 10 நபர்கள் தேர்வு செய்யப் பெற்று 100% உதவித் தொகையுடன் AUSTRALIA-வின் MELBOURNE நகரில் உள்ள DEAKIN UNIVERSITY - MBA மேற்படிப்பிற்காக தேர்வு பெற்றனர். அவர்களில் தமிழ்நாட்டில் இருந்து இருவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். இதில் நம் நகரத்தார் இளைஞர் K. சஞ்சித் லெட்சுமணன், B.E.யும் ஒருவர் ஆவார். சஞ்சித் லெட்சுமணன், தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாக் கழகத்தின் பொன்விழா ஆண்டு மேனாள் பொருளாளர் திரு.லெ. பஞ்சநாதம் - திருமதி P. அலமேலு ஆச்சி அவர்களின் மகன் வழிப் பேரனும், தேவகோட்டை திரு. அழ. பழனியப்ப செட்டியார் - திருமதி. PL. முத்துலெட்சுமி ஆச்சி அவர்களின் மகள் வழிப் பேரனும், திரு. P.காசி விஸ்வநாதன் - திருமதி K. சிவசுந்தரி அவர்களின் மகனும் ஆவார். சஞ்சித் லெட்சுமணனை நமது செட்டிநாடு வாழ்த்தி மகிழ்கிறது.

# வாங்க... வாங்க... தாய்லாந்துக்கு வாங்க...

## 4 காஞ்சனாபுரி



சோமலெ
சோமசுந்தரம்

### சாலைப் பயணமா? கலை விருந்தா?

சென்னைக்கு வருகின்ற வெளிநாட்டவர்கள் சென்னைக்கு அருகே ஒரே நாளில் பார்த்து விட்டு திரும்பக்கூடிய முக்கியமான இடம் என மாமல்லபுரத்திற்கு சென்று வருவது போல, தாய்லாந்தின் தலைநகரான பாங்காக் செல்லும் சுற்றுலாப் பயணிகள் பலரும் காஞ்சனாபுரி பகுதியைப் பார்த்து வருகின்றனர்.



பாங்காக் நகரின் மேற்கே 120 கிலோமீட்டர் தொலைவில் உள்ள காஞ் சனாபுரி தாய்லாந்தின் வரலாறு, கலாச்சாரம், இயற்கை காட்சிகள் ஆகியவற்றின் சங்கமம் என்பதில் மிகையில்லை.

குறுகிய நாட்களில் தாய்லாந்தைப் பார்க்க வருபவர்கள் பாங்காக் நகரைப் பார்த்து விட்டு விமானம் மூலம் புக்கெட் அல்லது பட்டாயா பகுதிகளுக்குச் சென்று விட்டு ஊர் திரும்புவது வழக்கம். சுற்றுலா செல்லும் போது கிராமப்புறப் பகுதிகளில் சாலை வழிப்பயணம், உள்ளூர் பயண வழிகாட்டிகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகியவை அப்பகுதிகளைப் பற்றி விபரமாகத் தெரிந்து கொள்ளவும், அவற்றை பார்ப்பதோடு மட்டுமல்லாமல் ரசித்து மகிழவும் துணை நிற்கும். அதற்கான கூடுதல் செலவை, செலவு என நினைக்காமல் நம் உல்லாசத்திற்கும், பொது அறிவிற்கும் மூலதனமாகவே எண்ண வேண்டும். அந்த வகையில் காஞ் சனாபுரி பயணம் எங்களுக்கு மன நிறைவாக அமைந்தது.

ஆடம்பரமாகவும். பொலிவாகவும், தூய்மையாகவும் உள்ள பாங்காக் நகரை விட்டு வெளியே சென்ற பிறகு,



தாய்லாந்தின் கிராமப்புறத் தோற்றங்கள் நமக்குள்ளே ஒரு புது உற்சாகத்தைக் கொண்டு வந்து, அந்த மூன்று மணி நேர சாலை வழிப்பயண தூரத்தில் அடுத்து என்ன? என்ற வியப்போடு நம்மை வெளியே எட்டிப் பார்க்க வைக்கின்றன! இந்தோனேசிய நாட்டின் கிராமப்புற வீடுகளுக்குள்ளே முன்னோர்களுக்கான சிறு கோவில் மண்டபங்கள் பல வீட்டின் முன்பகுதியில் இருக்கும். தாய்லாந்திலோ வீடுகளுக்கு வெளியே பிரம்மாவிற்கென சிறு மண்டபம் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. நெடுஞ் சாலையில், சாலை ஓர விளக்குத் தூண்களிலும், பூங்கா போன்ற பொது வெளிகளிலும், கருடன், மீன், புராண விலங்குகள் (டிராகன்), தேவதைகள், யானைகள் போன்ற அரச குடும்பத்தைச் சார்ந்த சின்னங்களை சிற்பங்களாகவும், கொடிகளாகவும் வைத்துள்ளது வித்தியாசமான காட்சியாக இருந்தது. நம் ஊர் நெடுஞ்சாலைகளில் அரசியல் கட்சிகளின் கொடிகளைப் பார்த்து சலித்துப்போன உள்ளங்களுக்கு தாய்லாந்து சாலைப் பயணம் ஒரு கலை விருந்தாகவே இருக்கும்.

### மரண ரயில் பாதை

காஞ்சனாபுரியின் மையமே அதன் மரண ரயில் பாதை ஆகும். இரண்டாம் உலகப் போரின் போது, 1942-இல், இங்கிலாந்திடமிருந்து பர்மாவை (இன்றைய மியன்மார்) ஜப்பான் கைப்பற்றியது. பர்மாவில் இருந்த தன்னுடைய படைக்கு உதவியாக மேலும் படையினரையும், அவர்களுக்கு வேண்டிய பொருட்களையும் கடல் வழியாக அனுப்புவதில் எதிரி நாடுகளின் தாக்குதல்கள் அதிகமாக இருந்ததால் ஜப்பானின் அணியில் சேர்ந்த தாய்லாந்தையும், அதன் அண்டை நாடான பர்மாவையும் இணைக்கும் ரயில் பாதையை அமைக்க ஜப்பானிய ராணுவம் களத்தில் இறங்கியது.

அந்த 258 மைல் தொலைவு ரயில் பாதையை அமைக்க போர்க் கைதிகளையும், கடத்தப்பட்ட மற்றும் கட்டாயப்படுத்தப்பட்ட ஏழை மக்களையும் ஜப்பானிய ராணுவம் பயன்படுத்தியது. போர்க் கைதிகளில் பலர் மலேசியாவில் வாழ்ந்த தமிழர்கள், மலாய் மற்றும் சீன மக்கள் ஆவர். போதிய உணவின்மை, வெப்பம், பருவ



மழை, மலேரியா, காலரா போன்ற பல நோய்கள் மற்றும் கொடுமையான ராணுவத்தின் கீழ் வேலை பார்த்தது போன்ற பல காரணங்களால் ஒரு லட்சம் பேர் இந்த ரயில் பாதை அமைக்கும் போதே பலியாகினர். அதன் விளைவே இதற்கு கிட்டிய 'மரண ரயில் பாதை' என்ற இழிவான பெயர்.

குவாய் (Kwai) ஆற்றின் மேலே உள்ள இந்த ரயில் பாதையின் பாலத்தில் தினமும் எண்ணற்ற சுற்றுலா பயணிகள் நடந்து செல்கின்றனர். இப்பாதை கட்டப்பட்டதன் கொடுமையான வரலாற்றைத் தெரியாமல் நடப்பவர்களுக்கு மிகவும் அமைதியான சூழ்நிலையில் ரம்மியமான இயற்கை காட்சிகளை ரசிக்கும் நடைப் பயணமாகவே அது அமையும்.



அந்த வரலாற்றை உணர்வுப்பூர்வமாக உங்கள் மனக்கண் முன் கொண்டு வர வேண்டுமானால் காஞ்சனாபுரி பாலத்தில் இருந்து 80 கிலோமீட்டர் தொலைவில் உள்ள 'நரக நெருப்பு பாதை' க்குச் (Hell Fire Pass) செல்ல வேண்டும். அந்த மலைப் பகுதியில் ரயில் பாதையை விரைவாகக் கட்டி முடிக்க இரவு பகலாக உளி, சுத்தி போன்றவற்றை மட்டுமே வைத்து 500 மீட்டர் தொலைவிற்கு, 85 அடி ஆழமான பள்ளத்தாக்குக்கு மேலே டெனசெரிம் (Tenasserim Hills) மலையைப் போர் கைதிகள் உடைத்து எடுத்தார்களாம்.

நோயாலும், உணவின்மையாலும் மிகவும் நலிந்து போயிருந்த போர்க் கைதிகள் இரவில் மெழுகுவர்த்திகளையும், கை விளக்குகளையும் மட்டுமே வைத்துக் கொண்டு கொடுமையான மற்றும் ஆபத்தான சூழ்நிலையில் அடிமைகளாய் பணிபுரிந்த அவல நிலையைப் பார்த்தவர்களுக்கு இப்பகுதி நரகம் போல் காட்சியளித்ததால் 'நரக நெருப்பு பாதை' என்று பெயர் வைத்தனர்.

காஞ்சனாபுரியில் உள்ள மரண ரயில் பாதையின் பாலத்தைக் கடந்ததும் பார்த்து மகிழ வேண்டிய இடம் கண்ணைக் கவர்கின்ற "Wihan Phra Phothisat Kuan Im" என்ற சீனர் கோவில். சீனர்களின் டாயிசம் (Taoism) மற்றும் புத்த மதம் இரண்டும் கலந்த இந்தக் கோவிலின் வெளி வளாகத்தில் உள்ள பிரம்மாண்டமான பெண் புத்தர்



சிலையை சீனர்கள் 'குவான் யின்' (Guan Yin, the Goddess of Mercy) என வழிபடுகின்றனர். இக்கோவிலில் உள்ள சீன ராசி அறிகுறிகளும், சிற்ப வேலைப்பாடுகளும் மிக அருமையாகவுள்ளன. கோவிலில் இருந்து குவாய் ஆற்றின் இயற்கை அழகையும், மரண ரயில் பாதை பாலத்தில் ரயில் செல்வதையும் ரசித்து மகிழ்வது காஞ்சனாபுரி பயணத்தின் சிறப்புகளில் ஒன்றாகும்.

### குரங்குகள் விரும்பும் மரம்

சென்னையில் அடையாறு ஆலமரத்தைப் பார்க்கப் போவது போன்று காஞ்சனாபுரியில் சுற்றுலா பயணிகள் பிரம்மாண்டமான சீமை வாகை மரத்தைப் பார்க்கச் செல்கின்றனர். நூறு ஆண்டுகளுக்கு மேலான, 66 அடி உயரம் வளர்ந்துள்ள இந்த பழமையான மரத்தின் சிறப்பே 25,000 சதுர அடிக்கு மேல் படர்ந்து இருப்பது தான்.



இவ்வகை மரம் தென் அமெரிக்க நாடுகளிலும், இந்தியாவிலும், அமெரிக்காவின் ஹவாய் தீவுகளிலும் சாலை ஓரங்களில் நிழல் தர நடப்படுகின்றன. ஆங்கிலத்தில் இவற்றிற்கு "Monkey Pod Tree" என்றும் "Rain Tree" என்றும் பெயர்கள் உண்டு. இவற்றின் இனிப்பான (புளியம் பழத்தில் இருப்பது போன்ற) கொட்டைகளை குரங்குகள் விரும்பிச் சாப்பிடுவதாலும், மழைக் காலத்தில் இவை இலைகளை மூடி, மழை நீர் நேராக தரையில் விழுவதாலும் அப்பெயர்கள் இம்மரத்திற்கு வைக்கப்பட்டன.

புன்னகை தொடரும்...

நமது செட்டிநாடு



சென்ற இதழ் தொடர்ச்சி

# நகரத்தார் திருப்பணிகள்



சொ.சொ.மீ.சுந்தரம்

### 139) திருக்கோஷ்டியூர்:

திருப்பத்தூரிலிருந்து சிவகங்கை செல்லும் வழியில் உள்ள இத்தலம் வைணவ சமயத்தின் ஏற்றத்திற்கும், மறுமலர்ச்சிக்கும் பாசறையாக அமைந்த திருத்தலமாகும். வைணவத்தை நிலைநிறுத்திய இராமானுஜர் திருக்கோஷ்டியூர் நம்பியிடம் திருமந்திர உபதேசம் பெறுவதற்காக ஸ்ரீரங்கத்திலிருந்து 17 முறை இங்கு நடந்து வந்தார். பதினெட்டாவது முறை நம்பிகள் எட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்தார். "இதை வேறு யாருக்கும் உபதேசித்தால் நீ நரகத்திற்குப் போவாய். கேட்டவர்கள் வைகுந்தம் செல்வார்கள்" என்றார். உபதேசம் பெற்ற இராமானுஜர் திருக்கோஷ்டியூர் கோபுரத்தில் ஏறி ஊர் மக்கள் எல்லோருக்கும் உரக்கக் கூவி உபதேசித்தார். குருநாதர் "ஏன் இப்படிச் செய்தீர்?" என்று கேட்ட பொழுது "இத்தனை பேர் வைகுண்டம் போவதானால், நான் ஒருவன் நரகத்திற்குப் போகத் தயார்" என்றார் இராமானுஜர். நீர்தான் எம்பெருமானார் என்று கூறிக் கட்டித் தழுவிக் கண்ணீர் வடித்தார் திருக்கோஷ்டியூர் நம்பி. எனவே, இத்தலம் திருமந்திரம் விளைந்த திவ்யதேசம் என்று போற்றப்படுகிறது.

'திருக்கு' என்றால் பாவம். அதை ஓட்டுவதால் இது திருக்கோட்டியூர் எனப்படுகிறது. இத்தலம் பேயாழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய ஐவராலும் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருத்தலமாகும். மூன்று தளங்கள் கொண்ட அஷ்டாங்க விமானம் இத்தலத்தின் தனிச்சிறப்பாகும். பாற்கடலிலிருந்து எழுந்து வந்த காரணத்தால், பள்ளிகொண்ட பெருமாளாக முதல் தளத்திலும், நின்ற திருக்கோலத்தில் இரண்டாம் தளத்திலும், அமர்ந்த திருக்கோலத்தில் மூன்றாவது தளத்திலும் பெருமாள் காட்சியளிக்கிறார். இறைவர் பெயர் சௌமியநாராயணர், இறைவி திருமாமகள் நாச்சியார். திருக்கோஷ்டியூரில் வாழ்ந்த வைணவப் பெரியாரான செல்வநம்பி என்பவரைப் பெரியாழ்வார் குறிப்பிட்டுப் பல்லாண்டில் பாடி இருக்கிறார்.

இத்தலத்தில் பட்டமங்கலம் அழ.மெ.சு. முப்பதாயிரம் ரூபாய் செலவில் பாடசாலை அமைத்தார். கீழப்பூங்குடி கூ.கரு.நா. சிதம்பரம் செட்டியார் அறுபத்தைந்தாயிரம் ரூபாய் செலவில் சாத்திரப் பாடசாலையும், தண்ணீர்ப்பந்தலும், விடுதியும் கட்டினார். கண்டரமாணிக்கம் முரு.அரு.சுப. ஏழாயிரம் ரூபாய் செலவில் விடுதி கட்டினார்.

### 140) திருமெய்யம்:

திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற இத்தலம் இப்பொழுது திருமயம் என்று கூறப்படுகிறது. இது புதுக்கோட்டையிலிருந்து காரைக்குடி செல்லும் வழியில் நடு மையத்தில் உள்ளது. ஆதிசேடன் தவத்திற்கிரங்கிப் பெருமாள் இத்தலத்தில் அவன் மீது பள்ளிகொண்டார். சத்தியமுனிவர் இமயமலையில் தவம் செய்தார். அவ்விடத்தில் சித்ர சிலை என்ற பாறை இருந்தது. பத்ரவடம் என்ற ஆலமரம் இருந்தது. புஷ்ப பத்திரை என்ற நதி ஓடியது. திருமால் கூறியபடி சத்திய முனிவர் திருமெய்யம் பகுதிக்கு வந்த போது இம்மூன்றும் அவரோடு வந்தன. புஷ்ப பத்திரை நதி புஷ்கரணி ஆயிற்று. சித்ர சிலைப் பாறை திமெய்ய மலை ஆயிற்று. பத்ரவடம் என்ற ஆலமரம் இங்கு அரச மரமாயிற்று. இத்தலம் சத்தியகிரியாயிற்று. சத்திய முனிவருக்கு இத்தலத்தில் வைகாசி மாதம், சுக்லபட்சம், பஞ் சமி திதி, சிம்ம லக்னத்தில், ஞாயிற்றுக் கிழமை பெருமாள் காட்சியளித்தார். நவக்கிரகங்களில் ஒருவரான புதனின் மைந்தர் புரூரவச் சக்கரவர்த்தி ஆதியில் இந்த ஆலயத்தைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. மூலவர் சத்தியமூர்த்தி, கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்திலும், அனந்த சயனத்தில் பள்ளிகொண்ட பெருமாளாகவும் காட்சியளிக்கிறார். உற்சவர் மெய்யப்பன் என்றும், ராஜகோபாலன் என்றும் அழைக்கப்படுகிறார். பள்ளிகொண்ட பெருமாள் ஸ்ரீரெங்கநாதனை விட மிகப் பெரியவர். மெய்யமலை உச்சியில் கருடனால் பிரதிட்டை செய்யப்பெற்ற உருவம். மிக உயர்ந்த கருடப் பச்சைக் கல்லால் அமைக்கப் பெற்றதாகும். இப்பொழுதுள்ள ஆலயம் பல்லவ மன்னன்

இரண்டாம் நரசிம்மனால் கட்டப்பெற்ற குடவரைக் கோயிலாகும். இங்கு தாயார் பெயர் உய்யவந்த நாச்சியார். இத்தலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் மிகப்பெரிய திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள். பெருமாள் கோயிலும், சிவன் கோயிலும் சேர்ந்து மலையடிவாரத்தில் ஒரே இடத்தில் உள்ளதால், நகரத்தார்கள் இரண்டு கோயில்களுக்கும் திருப்பணி செய்திருக்கிறார்கள்.

1) சத்தியகிரிப் பெருமாள் கோயிலைப் பழுது நீக்கிப் புதுப்பித்துப் பெருமாளுக்கு வாசனைத் திரவியங்கள் தருவித்து மருந்து சாத்தி கடியாபட்டி தீ.நா. முத்தையா செட்டியாரால் ரக்தாட்சி ஆண்டு, ஆவணி மாதம், 31-ஆம் நாள் (15.09.1924) பதினைந்தாயிரம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப் பெற்றுத் திருக்குட நன்னீராட்டு நடந்தது.

2) காரைக்குடி க.தெ. குடும்பத்தார், பெருமாள் கோயிலில் உள்ள இராமசாமி சந்நிதியை இருபதாயிரம் ரூபாய் செலவில் கல் திருப்பணி செய்து மண்டபம் கட்டினர். இக்குடும்பத்தைச் சேர்ந்த கருப்பன் செட்டியார் உருவச்சிலை இங்கே வைக்கப் பெற்றுள்ளது. இக்குடும்பத்தார் சில உற்சவங்களையும் நடத்தி வருகிறார்கள். பெருமாளுக்குப் படைக்கப் பெற்ற தயிரமுது, புளியமுது முதலியவை நாள்தோறும் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகின்றன. இந்த அறச்செயல்களை முறையாக நடத்துவதற்காகக் கோட்டைக்குள் பழைய விடுதி ஒன்றும், புதிய விடுதி ஒன்றும், அலுவலர்கள் குடியிருக்க இரண்டு இல்லங்களும் பன்னீரண்டாயிரம் ரூபாய் செலவில் சுமார் நூறாண்டுகளுக்கு முன் கட்டப்பெற்றன. இக்கட்டளைக்காகச் சில கிராமங்கள் விடப்பெற்றன.

3) ராயவரம் வெ.மு. குடும்பத்தார், ராஜராஜேஸ்வரி உடனாகிய பானுமதீஸ்வரர் கோயிலில் ஐம்பதாயிரம் ரூபாய் செலவிட்டுத் திருப்பணி செய்தனர். பதினைந்தாயிரம் ரூபாய் செலவு செய்து அலங்கார மண்டபம், தகரக் கொட்டகை ஆகியவை அமைத்துச் சில வாகனங்களும் செய்து வைத்தனர். நகரத்தார் உதவியாலும், அரசினர் உதவியாலும், தம் பொருளாலும் ரூபாய் பன்னிரண்டாயிரம் செலவு செய்து சுவாமிக்கும், அம்மனுக்கும் தேர் செய்து வைத்தனர். ஐம்பதாயிரம் ரூபாய் செலவிட்டு அன்னசத்திரம் கட்டினர். மூவாயிரம் ரூபாய் செலவு செய்து ஊருணியும் அமைத்தனர்.

4) நா.நா. முத்துக்கருப்பன் செட்டியார் மூவாயிரம் ரூபாய் செலவில் நந்தவனம் அமைத்தார்.

5) பள்ளத்தூர் ராம.மு.லெ. குடும்பத்தார் வேத பாடசாலை வைத்தனர்.

6) காரைக்குடி வெ.ராம. குடும்பத்தார் பதினைந்தாயிரம் செலவில் பசுமடம் அமைத்தனர்.

7) கடியாபட்டி – தீ.நா. முத்தையா செட்டியார், ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்டிப் பத்தாயிரம் ரூபாய் செலவில் அருமையான நூல் நிலையம் அமைத்து சத்தியமூர்த்தி உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கி நடத்தினார். இப்பொழுது இது அரசினரால் நடத்தப்படுகிறது.

8) கடியாபட்டி - தீ.நா. முத்தையா செட்டியார், இருபதாயிரம் ரூபாய் செலவில் கற்படிகளுடன் கூடிய பெரிய ஊருணியைக் கட்டி வைத்தார். பதினைந்தாயிரம் செலவில் வழிப்போக்கர் தங்கும் இடம் கட்டினார்.

9) கடியாபட்டி – சொ.தீ.நா., சொ.முரு.முரு., சொ.சி.கி., சொ.ராம.ராம., இந்த நான்கு குடும்பத்தார்களும் முப்பதாயிரம் ரூபாய் செலவில் புலிவலம் சத்திரம் கட்டினர். ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் ஊருணியையும், பிள்ளையார் கோயிலையும் கட்டி உற்சவ மண்டபம், அலுவலர் இல்லங்கள் ஆகியவற்றை அமைத்தனர்.

10) காரைக்குடி – மெ.முரு. இராமநாதன் செட்டியார், முப்பதாயிரம் ரூபாய் செலவிட்டுச் சத்திய புஷ்கரிணியைக் கல் கட்டிடமாகக் கட்டினார். ஊருணிக் கரையில் வெள்ளைக் கல்லால் பதினாறு கால் மண்டபமும் கட்டினார்.

மெய்யத்து இன்னமுது என்று போற்றப்படும் பெருமாள் அருளால் மெய்யப்பன், சத்தியமூர்த்தி, உய்யவந்தான் என்ற பெயர்கள் சூட்டி நாட்டில் சிறப்புப் பெற்று விட்டன.

(திருப்பணிகள் தொடரும்)



Dr.மணிஸ் பல் மருத்துவமனை

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு-முன்-பதிவு-செய்தவர்களுக்கு-மட்டும்

இலவச பல் பரிசோதனை செய்யப்படும்

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும்
இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து
பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற
Dr.மணிஸ் பல் மருத்தவமனைக்கு
வருகை தாருங்கள்.

Dr.S.மணிகண்டன்,BDS., MBA(HM)
9551624126 / 7904079923

# திருநாங்கூர்




நா. சௌரிராஜன், கோட்டையூர்



சோழ நாட்டில் உள்ள இத் திருநாங்கூர் 11 திவ்ய தேசங்களை உள்ளடக்கியது. திருநாங்கூர் என்னும் ஊரில் மட்டும் 6 திவ்ய தேசங்களும், இவ்வூரைச் சுற்றி சுமார் 1 மைல், ½ மைல் தூரங்களில் 5 திவ்ய தேசங்களும் உள்ளன.

திருக்காவளம்பாடி, திரு அரிமேய விண்ணகரம், திருவண் புருடோத்தமம், திருச்செம்பொன் செய்கோயில், திருமணி மாடக் கோயில், திருவைகுந்த விண்ணகரம் என்ற இந்த 6 ஸ்தலங்களும் திருநாங்கூருக்குள்ளேயே இருக்கிறது. மற்ற 5 திவ்ய தேசங்கள் அருகில் உள்ள ஆனால், திருநாங்கூர் சார்ந்த திவ்ய தேசங்களாகும்.

திருநாங்கூரில் 11 திவ்ய தேசங்கள் இருப்பதற்கான கதைகள் பல இருந்தாலும், பாத்ம புராணத்தில் கூறப்பட்டுள்ள கூற்றே முக்கியமாகக் கருதப்படுகிறது. புராண காலத்தில் இந்தத் திருநாங்கூர் பகுதிக்கு உபய காவேரி மத்திமம் என்ற பெயர். ஒரு சமயம் பராசக்தியான பார்வதி தேவியின் தந்தை தட்சன் ஒரு யாகம் செய்தான். அந்த யாகத்திற்குச் சிவனை அழைக்காமல் அவமதித்தான். எனவே, பார்வதி சிவனிடம், தட்சனிடம் தான் சென்று அவனுக்கு அறிவுரை கூறி உங்களை அழைக்கச் சொல்கிறேன் என்று கூறிச் செல்ல முற்பட, சிவன் தடுத்தும் கேளாமல் பார்வதி அங்கே சென்று தட்சனுக்கும் புத்திமதி கூறினாள். ஆனால், அவனோ சிவனை மேலும் இகழ்ந்து பேசினான். இதனால் கோபமுற்ற பார்வதி தட்சனைச் சபித்து, அவன் யாகத்தை அழித்து விட்டு, மீண்டும் சிவனிடம் வர, சிவன் ஏற்றுக் கொள்ள மறுத்து கோபம் அடங்காமல் ருத்ர தாண்டவம் ஆடினார் என்ற கதையை நாம் எல்லோரும் அறிவோம்.

உலகமே அழியும்படியாக கொடூர நடனத்தை இந்த உபய காவேரி மத்திமத்தில் வந்து ஆடியதாகவும், அப்போது சிவனின் தலையில் உள்ள சடாமுடித் தரையில் பட்டஉடன் அதில் இருந்து ஒரு சிவன் தோன்றி கொடூர நடனம் ஆட, இப்படி ஒவ்வொரு முறையும் சிவனுடைய தலைமுடி தரையில் அடிபட அடிபட அதிலிருந்து ஒவ்வொரு சிவனாகத் தோன்ற, எல்லோரும் ஒரு சேர ருத்ரதாண்டவமாட, தேவர்களும், ரிஷிகளும் மிகவும் பயந்து பேரழிவு வந்துவிடுமோ என்று எண்ணி உலகைக் காத்து அருளுமாறு மகாவிஷ்ணுவிடம் வேண்ட, பரமபதத்தில் இருந்து மகாவிஷ்ணு இவ்விடம் எழுந்தருளினார். அந்த நிலையில் 11 சிவன்கள் (சிவ ரூபங்கள்) கொடும் தாண்டவம் ஆடிக் கொண்டிருக்க, பரமபத நாராயணனைக் கண்டதும் சிவன் தனது கொடூரமான தாண்டவத்தை நிறுத்தினான். என்னைப் போலத் தாங்கள் 11 திருமால்களாகக் காட்சி அளிக்க வேண்டும் என சிவன் வேண்ட, பெருமாளும் அப்படியே எழுந்து அருளினார். 11 பெருமாள்கள் நின்ற இடந்தான் உபயகாவேரி மத்திமத்தில் அமைந்துள்ள இந்தத் திருநாங்கூர் 11 திருப்பதிகள் ஆகும்.

இதன்பின் பதினொரு சிவரூபங்களையும், திருமாலின் அவதார மூர்த்திகளாகிய 11 பெருமாள்களையும் அழைத்து, ஒவ்வொருவரையும் ஒரு சிவனுக்குள் ஒரு சிவனாகச் செலுத்தி, ஒரே சிவனாக ஆக்கி, பார்வதி தேவியையும் ஏற்றுக் கொள்ள வைத்ததாக ஐதீகம்.

11 பெருமாளாக வந்தவர்கள் யார் யார் என்றால், பத்திரிநாத்தில் இருந்து வந்த நாராயணப் பெருமாள் – மணிமாடக் கோயிலிலும், கோவர்த்தனகிரி குடமாடு கூத்தர் – அரிமேய விண்ணகரத்திலும், பரமபத ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் – வைகுந்த விண்ணகரத்திலும், உறையூர் அழகிய மணவாளன் – செம்பொன் செய் கோயிலிலும், அயோத்திப் பெருமாள் – வெண் புருடோத்தமத்திலும், அண்ணன் கோயிலில் – திருப்பதிப் பெருமாளும், ஸ்ரீரங்கநாதர் – திருத்தெற்றியம்பலத்திலும், திருவடந்தைப் பெருமாள் –திருத்தேவனார் தொகையிலும், துவாரகை கோபலகிருஷ்ணன் ருக்மணியுடன் – திருக்காவளம் பாடியிலும், காஞ்சி வரதர் – திருமணிக் கூடத்திலும், பார்த்தசாரதிப் பெருமாள் – பார்த்தன் பள்ளியிலும், அதே பெயரில் வந்து அருள்பாலித்தனர்.

இந்தப் பதினொரு திருநாங்கூர் திருப்பதிகளில் உள்ள 11 பெருமாள்கள்தான், ஒவ்வொரு வருடமும் தை அமாவாசைக்கு மறுநாள் திருநாங்கூருக்கு எழுந்தருளுவர். மணிமாடக் கோயில் என்று அழைக்கப்படும் நாராயண பெருமாள் சன்னிதியில் இந்தக் கருட சேவைத் திருவிழா ஆண்டுதோறும் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இதைக் காண நாடெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வந்து கூடுவர். இங்கே இந்த 11 பெருமாள்களை கருட சேவையில் ஒருமித்த வகையில் ஒன்றாகச் சேவிப்பது மகா புண்ணியமாகும். அது 11 திவ்ய தேசங்களுக்குச் சென்று வந்ததற்கு ஒப்பாகும்.

ஆண்டுதோறும், இந்தப் பெருமாள்களை மங்களாசாசனம் செய்திடத் திருமங்கை யாழ்வாரே இங்கு வருவதாக நம்பிக்கை. திருநாங்கூரைச் சுற்றி உள்ள வயல் வெளிகளில் கருட சேவைக்கு முதல் நாள் நள்ளிரவில், காற்றினால் நெற்பயிர்கள் சலசலக்க, இந்த இனிய சத்தத்தைக் கேட்டவுடன் பக்தர்கள் திருமங்கையாழ்வார் பிரவேசித்து விட்டதாக கூத்தாடுவதும், அவரால் மிதிக்கப்பட்ட வயல்களில் மிகுந்த நெல் விளையும் என்று மக்கள் நம்புவதும், இப்பகுதியில் நிலவும் திவ்யமான பக்தி நம்பிக்கையாகும். இனி நாம் இப்பதினொரு திவ்ய தேசங்களுக்கும் தனித்தனியாக சென்று தரிசிப்போம். வாருங்கள் போகலாம்...

# திருக்காவளம்பாடி - [27]

மடவரல் மங்கையே போற்றி!
செங்கமல நாச்சியே போற்றி!
காவாளம்பாடி ராஜகோபாலனே போற்றி!
நடன கோபால கிருஷ்ணனே போற்றி!

*****



இத்தலம் திருநாங்கூரிலேயே உள்ளது. வைத்தீஸ்வரன் கோயில் ரயில் நிலையத்தில் இருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளது. காவாளம் என்றால் பூம்பொழில். 11 எம்பெருமான்களில் ஒருவரான துவாரகாவில் இருந்து வந்த கண்ணபிரான் சிவனை ஒன்றாக்க முடித்தபின் தான் இங்கு இருக்க காவளம் போன்ற பூம்பொழிலைத் தேடி இங்கு தேவலோகத்தில் இருந்து பாரிஜாத மரங்களைக் கொண்டு வந்து வைத்து இத்தலத்தில் தங்கினார். தேவலோகத்தில் உள்ளது போன்ற காவளத்தை இங்கு உருவாக்கியதால் இது ஊர்ப் பெயராயிற்று. திருநாங்கூரில் தை அமாவாசை மறுநாள் நடைபெறும் கருட சேவைக்கு எழுந்தருளும் 11 பெருமாள்களில் இவரும் ஒருவர். துவராகையில் இருந்து இவர் இங்கு எழுந்தருளியதால் இத்தலம் துவாரகைக்குச் சமமாயிற்று.

திருமங்கை ஆழ்வாரால் மட்டும் 10 பாக்களில் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலம். இங்கு நாச்சியாரின் திருநாமம் இனிக்கும் அழகிய தமிழ்ச் சொல்லாகும். “மடவரல் மங்கை”, செங்கமல நாச்சி என்ற பெயரும் உண்டு. மூலவர் நடன கோபாலகிருஷ்ணன் எனும் ராஜகோபாலன்.

*****

# திரு அரிமேய விண்ணகரம் - [28]

(ஹரிவந்து மேவியிருக்கும்
(துங்கியிருக்கும்) விண்ணகரம்)

இது திருநாங்கூரிலேயே அமைந்துள்ள திவ்ய தேசமாகும். அரிமேய விண்ணகரம் என்றால் எவருக்கும் தெரியாது. குடமாடு கூத்தர் கோயில் என்றே அனைவரும் கூறுவர். கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்து ஆடிய ஹரியே இங்கு வந்துள்ளார் என்பது ஐதீகம்.



மூலவர்: குடமாடு கூத்தன். கிழக்கு நோக்கி அமர்ந்த கோலம்.

தாயார்: அமிருதகடவல்லி.

தை அமாவாசைக்கு மறுநாள் நடைபெறும் கருட சேவைக்கு இவரும் எழுந்தருளுவார். பகைவர்களை அழிக்கும் பொருட்டே இந்த எம்பெருமான் இங்கு எழுந்தருளி இருப்பதாக ஐதீகம். பகை நீக்கும் பரந்தாமன் இவர். பகைவர்களை வெல்ல அருள்பாலிப்பவர். திருமங்கையாழ்வாரால் மட்டும் 10 பாக்களில் மங்களாசாசனம் செய்யப்பெற்றது. குடமாடு கூத்தன் என்பது குன்றைக் குடையாகப் பிடித்து ஆடிய பெருமாள் என்பதைக் குறிக்கும்.

அரிமேய விண்ணகரக் குடமாடு கூத்தனே போற்றி!
அமிர்த கடவல்லி அழகுத் தாயே போற்றி. போற்றி!

*****

# திருவண் புருடோத்தமம் - [29]

வண்புருடோத்தம புருஷோத்தமனே போற்றி!
புருஷோத்தம நாயகி நாதனே போற்றி



இத்தலமும் திருநாங்கூரின் ஒரு பகுதியாக உள்ளது. இதனைப் புருஷோத்தமன் கோயில் எனச் சொல்வார்கள். அயோத்தி ராமனே இங்கு பதினொருவரில் ஒருவராக எழுந்தருளினார்.

மூலவர்: புருடோத்தமன். கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம். தாயார்: புருடோத்தம நாயகி.

திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலம் இது. கருட சேவை 11 பெருமாள்களில் இவரும் ஒருவர். (பயணம் தொடரும்)

27 கிளைகள், 36 வருட அனுபவம்



சுற்றுலாவா யோசிக்கவே வேண்டாம்

## ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

Incredible India
RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

98421 62416
97918 48265
98424 47305
98421 62265



H.O. 10, வடக்கு ஆவணி மூல வீதி. மதுரை–1

## SPECIAL TOURS 2025

www.srimurugantravel.com

- 10 நாள் ஆக்ரா–காசி அயோத்தியா — மாதந்தோறும் 9,21 — Rs. 13500/-
- 13 நாள் டெல்லி–ஆக்ரா அயோத்தியா — மாதந்தோறும் 6,18,27 — Rs. 17500/-
- 6 நாள் ஸ்ரீரடி பண்டரிபுரம் — மாதந்தோறும் 1,8,15,22 — Rs. 8000/-
- 10 நாள் குஜராத்–துவாரகா பட்டேல்சிலை — மாதந்தோறும் 17 — Rs. 17000/-
- 17 நாள் பத்ரி–கேதார் கங்கோத்ரி–யமுனோத்ரி — மாதந்தோறும் 10,20 மே முதல் — Rs. 30000/-
- 13 நாள் பத்ரிநாத் கேதார்நாத் — மாதந்தோறும் 10,20 மே முதல் — Rs. 25000/-
- 14 நாள் முக்திநாத்–நேபாள் கொல்கத்தா — மாதந்தோறும் 18 — Rs. 27000/-
- 15 நாள் நவஜோதிர்லிங்கம் — மாதந்தோறும் 18 — Rs. 20000/-
- 10 நாள் சிம்லா–மணாலி ஆக்ரா — ஏப் 1,8,15,22,29 மே. 1,8,20,27 — Rs. 18000/-
- 13 நாள் அமர்நாத் — ஜூலை முதல் — Rs. 16000/-

| | | | | |
|---|---|---|---|---|
| 2 நாள் மும்பை–ஸ்ரீரடி<br>தினந்தோறும்<br>Rs. 14990/- | 6 நாள் காசி அயோத்தியா<br>Rs. 34990/- | 6 நாள் சிங்கப்பூர் மலேசியா<br>Rs. 84,990/- | 5 நாள் ஸ்ரீலங்கா Special<br>Rs. 44,990/- | 5 நாள் துபாய் அபுதாபி<br>Rs. 74,990/- |
| 4 நாள் கோவா SPL<br>Rs. 24990/- | 8 நாள் பத்ரி–கேதார்<br>வாரந்தோறும் ஞாயிறு<br>Rs. 44990/- | 5 நாள் சிங்கப்பூர் மலேசியா<br>Rs. 74,990/- | 8 நாள் Exclusive ஸ்ரீலங்கா<br>Rs. 64,990/- | 7 நாள் சௌத்கொரியா<br>Rs. 1,69,990/- |
| 4 நாள் டெல்லி–ஆக்ரா ஜெய்ப்பூர்<br>வாரந்தோறும் வியாழன்<br>Rs. 26990/- | 12 நாள் பத்ரி–கேதார் கங்கோத்ரி–யமுனோத்ரி<br>வாரந்தோறும் திங்கள்<br>Rs. 54990/- | 10 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து<br>Rs. 1,34,990/- | 5 நாள் இந்தோனேசியா பாலி<br>Rs. 64,990/- | 7 நாள் கென்யா<br>Rs. 1,59,990/- |
| 5 நாள் அந்தமான் ஹேவலோக்<br>தினந்தோறும்<br>Rs. 29990/- | 6 நாள் முக்திநாத் நேபாள்<br>ஏப்ரல் 1,18 மே 1,10,18<br>Rs. 29990/- | 8 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து<br>Rs. 94,990/- | 6 நாள் வியட்நாம் கம்போடியோ கலாங் விரிகுடா<br>Rs. 94,990/- | 9 நாள் ஆஸ்திரேலியா<br>Rs. 2,94,990/- |
| 5 நாள் காஷ்மீர் குல்மார்க்<br>வாரந்தோறும் புதன்<br>Rs. 44990/- | 6 நாள் பூடான் SPL<br>வாரந்தோறும் செவ்வாய்<br>Rs. 44990/- | 5 நாள் பாங்காக் பட்டாயா Standard<br>Rs. 52,000/- | 7 நாள் Exclusive சீனா<br>Rs. 1,54,000/- | 11 நாள் ஆஸ்திரேலியா நியூசிலாந்து<br>Rs. 5,29,990/- |
| 5 நாள் டார்ஜலிங் கேங்டாக்<br>வாரந்தோறும் புதன்<br>Rs. 39990/- | 8 நாள் காஷ்மீர் லே–லடாக்<br>வாரந்தோறும் ஞாயிறு<br>Rs. 64990/- | 4 நாள் பாங்காக் பட்டாயா Basic<br>Rs. 37,990/- | 10 நாள் ஹாங்காங் மக்காவ்<br>Rs. 1,34,990/- | 9 நாள் ஜப்பான்<br>Rs. 2,94,990/- |
| 7 நாள் NORTH EAST<br>வாரந்தோறும் திங்கள்<br>Rs. 44990/- | 5 நாள் சிம்லா–குளு மணாலி<br>வாரந்தோறும் புதன்<br>Rs. 27990/- | 5 நாள் புக்கட் கராபி<br>Rs. 64,990/- | 6 நாள் ரஷ்யா Special<br>Rs. 1,34,990/- | 12 நாள் ஈரோப் Special<br>Rs. 2,74,990/- |
| 3 நாள் பூரி புவனேஸ்வர்<br>வாரந்தோறும் வெள்ளி<br>Rs. 24990/- | 5 நாள் லே–லடாக்<br>வாரந்தோறும்<br>Rs. 54990/- | 8 நாள் Exclusive தாய்லாந்து<br>Rs. 94,990/- | 4 நாள் எகிப்து Special<br>Rs. 1,29,990/- | 4 நாள் உஸ்பெகிஸ்தான்<br>Rs. 54,990/- |
| 7 நாள் குஜராத் துவாரகா<br>வாரந்தோறும் செவ்வாய்<br>Rs. 35990/- | 6 நாள் நைனிட்டால் முசௌரி–கார்பெட்<br>வாரந்தோறும் புதன்<br>Rs. 34990/- | 4 நாள் மாலத்தீவு Special<br>Rs. 59,990/- | 8 நாள் எகிப்து Cruise<br>Rs. 1,65,990/- | 4 நாள் கஜகஸ்தான் அல்மைட்டி<br>Rs. 74,990/- |

## ஆஸ்திரேலியா
8 நாள்
ரூ. 2,59,990 முதல்

## SCANDINAVIA
10 நாள்
ரூ. 2,99,990 முதல்

## ஈரோப்
12 நாள்
ரூ. 2,74,990 முதல்

இது தவிர மேலும் பல சுற்றுலாக்கள் மற்றும் குரூப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, கல்வி, கம்பெனி குரூப் சுற்றுலாக்களுக்கு 97918 48265 / 98421 62416

கிளைகள் : சென்னை, வடபழனி, பெரியமேடு, மாம்பழம், மைலாப்பூர், காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, காரைக்குடி, கோவை, திருச்சி, பழநி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருப்பூர், இராஜபாளையம்

24x7 Calling Mobile : 98424 47305



# தொழில் தொடங்கலாம் வாங்க 80

சேதுராமன் சாத்தப்பன்

## ஸ்டார்ட்-அப் உலகம்

# நீர் தரப் பகுப்பாய்வுக் கருவிக்கு ஒரு ஸ்டார்ட்-அப்...

பாதுகாப்பான குடிநீர் என்பது மனித ஆரோக்கியத்திற்கும், உயிர் வாழ்வதற்கும் அவசியமான ஒரு அடிப்படை மனித உரிமை. தண்ணீர் தரம் மற்றும் அதனை அணுகுவதை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், பலருக்கு இன்னும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை.

CLUIX, ஒரு க்ளீன்டெக் ஸ்டார்ட் அப் நிறுவனம், ஒரு புதுமையான கையடக்க டிஜிட்டல் நீர் தரப் பகுப்பாய்வுக் கருவியை (Digital Water Quality Analyser) உருவாக்கியுள்ளது. இந்தக் கருவி நீர் தரச் சோதனையை எளிதாக்குவதோடு மட்டுமல்லாமல், முக்கியமான குடிநீர் அளவுகோள்களுக்கு விரைவான மற்றும் துல்லியமான முடிவுகளையும் வழங்குகிறது. நீர் தரச் சிக்கல்கள் புவியியல் ரீதியாக வேறுபடுவதோடு ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு கணிசமாக மாறுபடுவதால், அதிக அளவுருக்களை அளவிடக்கூடிய சாதனங்கள் சந்தைக்குத் தேவை. உதாரணமாக, சில பகுதிகள் நைட்ரேட் மாசுபாட்டுடன் இருக்கலாம். அதே நேரத்தில் சென்னை போன்ற பிற பகுதிகள் ஃப்ளோரைடு சிக்கல்களை எதிர்கொள்ளலாம்.

நிறுவனத்தின் முதன்மை சாதனமான C012, ஒரு கையடக்க, IOT-இயக்கப்பட்ட பகுப்பாய்வு ஆகும். இது பெரிய திரை மற்றும் நீட்டிக்கப்பட்ட பேட்டரி ஆயுளைக் கொண்டுள்ளது. இது ஃப்ளோரைடு, நைட்ரேட், இரும்பு, pH மற்றும் TDS உள்ளிட்ட 12-க்கும் மேற்பட்ட முக்கியமான நீர் அளவுருக்களை இடத்திலேயே அளவிடும் திறன் கொண்டது. வண்ண அளவீட்டு பகுப்பாய்வு மற்றும் தானியங்கி டைட்ரேஷன் (Titration) போன்ற நுட்பங்களை ஒருங்கிணைப்பதன் மூலம், C012 ஒரு சிறிய வடிவத்தில் ஆய்வக-தர துல்லியத்தை வழங்குகிறது. க்ளூயிக்ஸை வேறுபடுத்துவது அதன் தொடக்கம் முதல் இறுதி வரையிலான வடிவமைப்பு தத்துவம். கிளவுட் உடன் இணைக்கப்பட்ட பகுப்பாய்வி, உடனடி அறிக்கையிடல் மற்றும் செயல்படக்கூடிய நுண்ணறிவுகளை எளிதாக்குகிறது. இது தாமதங்களைக் குறைக்கிறது, ஆய்வகப் பணியாளர்களின் தேவையைத் தவிர்க்கிறது மற்றும் பொது சுகாதார முடிவெடுக்கும் முன்னணியில் சரியான நேரத்தில் தரவைக் கொண்டுவருகிறது.

இந்த கருவி அடுத்த 2-3 ஆண்டுகளுக்கு பெரிய அளவிலான நீர் தரக் கண்காணிப்பின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், நிகழ்நேர தரவு காட்சிப்படுத்தலுக்காக ஒரு அதிநவீன டேஷ்போர்டை வழங்கியிருக்கிறார்கள். இந்த டேஷ்போர்டு நீர் தரத்தை தொடர்ந்து கண்காணிக்க உதவுகிறது.

### விருதுகள்

இந்த கண்டுபிடிப்பிற்காக, ஜல் ஜீவன் மிஷன் - CII-திரிவேணி இன்னவோஷனுக்கான தேசிய விருது (2023), மற்றும் Tech 2 Impact Vienna மற்றும் SLUSH 2024 இல் அங்கீகாரம் போன்ற பல பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

### வாடிக்கையாளர்கள்

இந்த ஸ்டார்ட் அப் கம்பெனியின் வாடிக்கையாளர்களில் அரசாங்க அமைப்புகள், நகராட்சி வாரியங்கள், NGO-க்கள் மற்றும் தொழிற்சாலைகள் அடங்கும். இந்தியாவின் நீர் சோதனை சந்தை தோராயமாக 17,000 கோடி ரூபாய் மதிப்புடையதாகவும், உலகளவில் 3,91,000 கோடி ரூபாய்களாகவும் இருக்கிறது .

சேம்பிள் எடுக்க போக்குவரத்தின் தேவையை நீக்குவதுடன், ஆண்டுதோறும் ஒரு கிராமத்திற்கு சுமார் 720 கிலோ $CO_2$ உமிழ்வைக் குறைக்கிறது. நீரினால் பரவும் நோய்களில் 30% குறைப்புக்கு வழிவகுத்துள்ளது.

### வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி

2027 ஆம் ஆண்டிற்குள், ஐந்து நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிட்டுள்ளார்கள். 10 கோடி மக்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள இந்த கம்பெனி, 2030 ஆம் ஆண்டிற்குள், 12 நாடுகளுக்கு இவர்களின் சேவையை விரிவுபடுத்தவும், 30 கோடி மக்களை சென்றடையவும் முயற்சிகள் எடுத்து வருகிறார்கள்.

இவர்களின் இணையதளம் www.cluix.in. மேலும் விபரங்களுக்கு சென்று பாருங்கள்.

# இந்த மாத வழிகாட்டி அலவாக்கோட்டை செந்தில்நாதன் சம்பத், ஐஸ்வர்யா செந்தில்நாதன் (சென்னை)



நகரத்தார்களின் தொழில்கள் என்று வரும்போது மணி லெண்டிங் பிசினஸ் தான் பிரதானமாக இருந்து வந்தது. அதை தவிர்த்து பார்த்தால் காபி மற்றும் தேயிலை எஸ்டேட்கள், யார்ன், பேப்பர் வியாபாரம், மருந்து சில்லறை மற்றும் மொத்த வியாபாரம் எனத் தொழிலாக செய்து அதில் மிகவும் சிறப்பான நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

வித்தியாசமான தொழில் செய்பவர்கள் என்று பார்த்தால் ப்ளிங்க் ஸ்மார்ட் ஹோம்ஸ் ஒரு வீட்டை ஸ்மார்ட் ஹோம் ஆக்குவது எப்படி என்று யோசித்து அதற்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறார்கள். அதாவது ஸ்மார்ட் சுவிட்சுகள், ஸ்மார்ட் பிளக்குகள், ஸ்மார்ட் லாக்குகள் மற்றும் ஸ்மார்ட் செக்யூரிட்டி சென்சார்கள் போன்ற ஸ்மார்ட் ஹோம் தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறார்கள். Blinc Smart Homes கம்பெனியின் நிறுவனர்களான, அலவாக்கோட்டையைச் சேர்ந்த, செந்தில்நாதன் சம்பத், ஐஸ்வர்யா செந்தில்நாதன் தம்பதிகளை இந்த இதழுக்காக பேட்டி கண்டோம்.

**ஸ்மார்ட் ஹோம் என்றால் என்ன? பலருக்கு இன்னும் இந்த கான்சப்ட் சென்றடையவில்லை. ஆதலால் அதைப் பற்றி கூறுங்களேன்?**

ஸ்மார்ட் ஹோம் என்பது நம் வீட்டில் இருக்கும் லைட்ஸ், பேன்ஸ், ஏ.சி.க்கள் மற்றும் எந்த ஒரு வீட்டு சாதனங்களையும் உலகத்தின் எந்த ஒரு மூலையிலிருந்தும், எவை எவை ஆன் ஆகி உள்ளன என்பதை கவனித்துக் கொள்ள முடியும்; அதே சமயம் ஸ்விட்ச் ஆன், ஆப் செய்ய முடியும். நம் அன்றாட பணிகளை எளிதாக்கும் தானியங்கி சாதனங்களான ஸ்மார்ட் சுவிட்சுகள், லைட்டிங், செக்யூரிட்டி சிஸ்டம்ஸ், அப்ளையன்சஸ் ஆகியவற்றை தொடுதல் மூலமாகவும் உங்கள் ஸ்மார்ட்போன் அல்லது வாய்ஸ் அசிஸ்டெண்ட் மூலம் நீங்கள் கட்டுப்படுத்தலாம். ஸ்மார்ட் ஹோமுக்கு மாறுவது என்பது தொழில்நுட்பம் சார்ந்தது மட்டுமல்ல – இது வாழ்க்கையை எளிமையாகவும், பாதுகாப்பாகவும், புத்திசாலித்தனமாகவும் மாற்றுவதும் ஆகும்.

**உங்களது கம்பெனியான ப்ளிங்க் ஸ்மார்ட் ஹோம்ஸ் பற்றிக் கூறுங்கள்?**

நான் அடிப்படையில் சிவில் இன்ஜினியர். ஆஸ்திரேலியாவில் M.Tech (Civil) படித்து முடித்தவுடன் சிங்கப்பூரில் சிவில் இன்ஜினியராக வேலை பார்த்து வந்தேன். எனது மனைவி B.Com., MBA., படித்து பின்னர் சிங்கப்பூரில் அக்கவுண்ட் மேனேஜராக வேலை செய்து வந்தார். இருவரும் பிசினஸ் செய்ய வேண்டும் என்று 2021-ம் வருடம் முடிவு எடுத்த போது இந்தியாவில் அதிகம் பயன்படுத்தப்படாமல் இருக்கும் ஒரு துறை, வரும் காலத்தில் சிறப்பாக இருக்கப்போகும் ஒரு துறையை எடுப்பது என முடிவு செய்து யோசித்தோம்.

ஸ்மார்ட் ஹோம் அமெரிக்காவில் மிகவும் பிரபலமாக இருந்தது. சிங்கப்பூரில் அப்போது தான் பரவலான தொடக்கமாக இருந்தது. இந்தியாவில் அதிகமாக பயன்படுத்தப்படவில்லை. அதனால் இந்தியாவில் இதற்கான ஸ்கோப் அதிகம் என்பதனை கண்டறிந்து, சிங்கப்பூரில் எங்களது வேலையை ராஜினாமா செய்து, Blinc Smart Homes என்ற கம்பனியை 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் தொடங்கினோம்.

அப்பொழுது இந்தியாவில் ஸ்மார்ட் ஹோம் எக்வியூப்மெண்ட்களை சில பெரிய கம்பெனிகள் அவர்களின் ப்ராடக்ட் ஆக தயாரித்து வந்தார்கள். முன்னமே சுவிட்சுகள் பொருத்தப்பட்ட வீடுகளில் அதை ஸ்மார்ட் ஹோமாக மாற்றுவதற்கான தீர்வுகள் ஏதும் அவர்களிடம் இல்லை. எங்கள் கம்பெனியின் புராடக்ட்கள் புதிய வீடுகளிலும் ஸ்மார்ட் ஹோம் சாதனங்கள் பொருத்துவதையும், பழைய வீடுகளில் இருக்கும் சுவிட்சுகள், லாக்குகள், செக்யூரிட்டி சாதனங்கள் ஆகியவைகளை ஸ்மார்ட் ஹோமாக மாற்றுவதற்கும் வசதிகள் செய்து தருகிறோம்.

**உங்கள் படிப்படியான முன்னேற்றத்தை பற்றிக் கூறுங்கள்?**

எங்களுடைய எண்ணங்களை வடிவமைக்க டிசைனிங் டீமுடன் பல மாதங்கள் உழைத்தோம். பின்னர் அவை சென்னையில் உற்பத்தி செய்யப்பட்டு செயல்பாட்டுக்கு

வந்தவுடன் தீவிரமான டெஸ்டிங் செய்து முதன் முதலில் அமைச்சர் அன்பரசன் அவர்கள் முன்பு டெமோ செய்து காண்பித்து ரூபாய் 10,000 பரிசு பெற்றோம். பின்னர் தேசிய மற்றும் மாநில அரசின் திட்டங்கள் மூலமாக சுமார் 40 முதல் 50 லட்சம் ரூபாய் வரை மானியமாகக் கிடைத்தது. சமீபத்தில் விஜய் டி.வி.யின் "ஸ்டார்ட் அப் சிங்கத்தில்" இடம் பெற்று சில இன்வெஸ்ட்மெண்ட்களையும் பெற்றோம்.

பின்னர் எங்களது புராடக்ட்கள் சந்தைக்கு கொண்டு வரும் முயற்சியில் BNI போன்ற அமைப்புகள் மிகவும் உறுதுணையாக இருந்தன. தற்போது தமிழ்நாட்டின் சில பகுதிகளில் விநியோகம் செய்து வருகிறோம். சில புராஜக்ட்களையும் எடுத்து செய்து வருகிறோம். தமிழக அரசின் ஒத்துழைப்பு எங்களுக்கு மிகவும் கிடைத்தது. அதை நாங்கள் பெருமையாகக் கருதுகிறோம்.

**தற்போது பிற கம்பெனிகளில் உள்ள ஸ்மார்ட் சுவிட்ச்களில் உள்ள சவால்களை பற்றி கூறுங்களேன்?**

தொழில்நுட்ப உதவி இல்லாமல் ஸ்மார்ட் சுவிட்சை நிறுவ இயலாது. வாங்கிய பின்னர் கஸ்டமைஷேசன் செய்ய அனுமதிக்காது. ஹேக்கர்கள் சுவிட்சை ஹேக் செய்யலாம். அலெக்சா மற்றும் கூகிள் ஈகோ சிஸ்டம்ஸ் அமைப்புகளுக்கு இண்டர் ஆப்ரோபலிட்டி லிமிடெட் ஆக மட்டும் இருக்கிறது.

**அப்படியானால் உங்களுடைய சுமார்ட் சுவிட்சுகளில் உள்ள அட்வான்டேஜ் என்னென்ன?**

இந்தியாவில் உள்ள எந்த பிராண்டிலும் உள்ள எந்த வகையான wall box களிலும் பிளிங்க் சுவிட்சுகள் பொருந்தும். வாங்கிய பிறகு டச் ஸ்விட்சுகளை தேர்வுசெய்ய, கஸ்டமைஸ் செய்ய, மாற்ற அல்லது மறுசீரமைக்க முடியும். AES-128 குறியாக்கத்துடன் வருகிறது. ஹேக்கிங் செய்வதிலிருந்து தடுக்கிறது. ஆப்பிள் ஹோம் கிட், கூகிள் ஹோம் மற்றும் அமேசான் அலெக்சா உள்ளிட்ட பல்வேறு தளங்களில் எங்களின் ஸ்மார்ட் ஹோம் தயாரிப்புகளை சிரமமின்றி இணைக்கலாம்.

Blinc ஸ்மார்ட் ஹோம்ஸ் தயாரிப்புகளை பொருத்துவது QR குறியீட்டை ஸ்கேன் செய்வது போல எளிது. இதற்கு தொழில்நுட்ப வல்லுநரோ அல்லது சிக்கலான வயரிங்கோ தேவையில்லை. உங்கள் ஸ்மார்ட்போனில் படிப்படியான வழிமுறைகளைப் பின்பற்றினால், உங்கள் ஸ்மார்ட் சுவிட்சுகள் சில நிமிடங்களில் இயங்கும். இது சிரமமின்றி வடிவமைக்கப்பட்டுள்ளது, எனவே நீங்கள் எந்த தொந்தரவும் இல்லாமல் ஸ்மார்ட் ஹோம் அனுபவத்தை அனுபவிக்க முடியும்.

**உங்களுடைய எதிர்கால திட்டங்கள் என்னென்ன?**

2025-ம் ஆண்டு ஆரம்ப உற்பத்தி மற்றும் விற்பனை. 2026-ம் ஆண்டு குறிப்பிட்ட நகரங்களில் விற்பனையை கூட்டுதல். 2027-ம் ஆண்டு ப்ராடக்ட் வகைகளை விரிவுபடுத்துதல். 2028-ம் ஆண்டு Tier-2 நகரங்களுக்கு விரிவுபடுத்துதல். 2029-ம் ஆண்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தல், இந்தியாவிற்கு வெளியே எங்கள் கம்பெனியின் விரிவாக்கம் ஆகியவை ஆகும். எங்களுடைய முக்கியமான கஸ்டமர்கள் பில்டர்ஸ், ஆர்க்கிடெக்ட்ஸ், இன்டீரியர் டிசைனர்ஸ் ஆவார்கள்.

**உங்களுடைய குடும்பம் பற்றி...**

தந்தையார் காரைக்குடி திரு.கண.நா.சுப.சம்பத் செட்டியார் அவர்கள், ஓய்வு பெற்ற வேளாண் அதிகாரி. தயார் திருமதி வள்ளியம்மை சம்பத், ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் தேவ் (7), வேத் (3). மாமனார் – அலவாக்கோட்டை திரு.மதிவாணன் நாராயணன் செட்டியார். சென்னை சோலையில் (மெடிமிக்ஸ்) கம்பெனியில் CFO ஆக இருக்கிறார்கள். எங்களது ப்ராடக்ட் செலக்ஷனிலும், பின்னர் எங்களுக்கு வழிகாட்டிகள் (mentors) அமைத்து கொடுப்பதிலும் மிகவும் உதவியாக இருந்தார்கள். மாமியார் திருமதி சிவகாமி மதிவாணன், குடும்பத் தலைவி. மனைவியுடன் உடன் பிறந்தவர் இளைய சகோதரர் மணிகண்டன். அவரது மனைவி அனிதா மணிகண்டன்.

**தொழில் செய்ய விரும்பும் நகரத்தார் இளைஞர்களுக்கு உங்கள்து அட்வைஸ் என்ன?**

தொழில்நுட்பம் அல்லது யோசனை "trending" ஆக இருப்பதால் மட்டும் ஒரு தொழிலைத் தொடங்காதீர்கள். ஒரு உண்மையான தேவையை அடையாளம் கண்டு, பின்னர் வாழ்க்கையை எளிதாக்கும், புத்திசாலித்தனமான அல்லது சிறந்ததாக்கும் ஒரு தீர்வை உருவாக்குங்கள். Blinc இல், எங்கள் கவனம் சாதனங்களை விற்பனை செய்வதில் மட்டும் இல்லை. அது தடையற்ற ஸ்மார்ட் வாழ்க்கை அனுபவங்களை உருவாக்குவதில் இருந்தது.

சிறியதாகத் தொடங்குங்கள், பின்னர் படிப்படியாக மேலே செல்லுங்கள். எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் செய்வது கவர்ச்சிகரமானதாக இருக்கும், ஆனால் சிறியதாகத் தொடங்குவது தரத்தை வழங்க உதவுகிறது. Blinc இல், முழு ஸ்மார்ட் வீட்டு சுற்றுச்சூழல் அமைப்பாக விரிவடைவதற்கு முன்பு எங்கள் ஸ்மார்ட் டச் சுவிட்சுகளை நாங்கள் முழுமையாக்கினோம்.

உபயோகிப்பாளர்கள் அனுபவத்தில் மட்டும் கவனம் செலுத்துங்கள். வாடிக்கையாளர்கள் தொழில்நுட்ப ஜார்கன்களை அரிதாகவே நினைவில் கொள்கிறார்கள். ஒரு தயாரிப்பு தங்கள் வாழ்க்கையை எவ்வாறு எளிதாக்கியது என்பதை மட்டுமே அவர்கள் நினைவில் கொள்கிறார்கள். எளிமை, நம்பகத்தன்மை, நேர்த்தி ஆகியவையே வெல்லும்.

இவர்களுடைய இணையதள முகவரி www.blincsmart.com மொபைல் எண்: 73586 03495.

**ஈமெயில்:** Sethuraman.sathappan@gmail.com,
**மொபைல்: 9820451259,**
**இணையதளம்:** www.startupandbusinessnews.com

## ‘கொடிகட்டிப் பறக்கும் குழந்தைகள் புத்தக விற்பனை’

# அருண் பதிப்பக உரிமையாளர் அருணாசலம்





பிரேமா நாராயணன்

ஒரு காலத்தில் பதிப்புத் துறையில் கொடிகட்டிப் பறந்தவர்கள் நகரத்தார்கள். பதிப்புத் துறையின் முன்னோடி என்று கூடச் சொல்லலாம். ஆனால், இன்றைய மின்னணு தொழில்நுட்பத்தின் அபாரமான வளர்ச்சியின் காரணமாக புத்தக வடிவங்கள் மாறி வரும் சூழலில், நூல் பதிப்பித்தலையே குலத்தொழிலாக, பரம்பரையாகச் செய்து கொண்டிருந்த பல குடும்பங்கள் திசை மாற வேண்டிய கட்டாயம். புத்தக வாசிப்பும் குறைந்து வருவதால், தொடர்ந்து சரிவிலேயே இருக்கிறது பதிப்புத் தொழில்.

ஆனால், இப்படிப்பட்ட சூழ்நிலையிலும், தங்கள் பரம்பரைத் தொழிலான பதிப்பகத்தை விடாமல் நடத்தி வரும் நகரத்தார் இளைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுள் நூற்றாண்டு கண்ட அருணோதயம் அருணாசலம் செட்டியார் பேரனும், அறிவு நிலையம் லெட்சுமணன் செட்டியாரின் மகனுமான அருணாசலத்திடம் பேசினோம். இவர் சென்னை ராயப்பேட்டையில் ‘அருண் பதிப்பகம்’ என்ற பதிப்பகம் நடத்தி வருகிறார். இப் பதிப்பகத்தின் சிறப்பம்சம் குழந்தைகளுக்கான தமிழ் நூல்களை அதிகமான அளவில் வெளியிடுவதோடு இந்நூல்களை உயர்ந்த தரத்தில் பதிப்பித்து வெளியிடும் முன்னோடி பதிப்பகமாகவும் உள்ளது. இச் செய்தி நமக்கு ஆச்சரியத்தைத் தர, அவரிடமே அது பற்றிக் கேட்டோம்.

“எங்கள் குடும்பத்தில், இந்தத் தொழிலுக்கு வந்திருக்கும் 3-வது தலைமுறை நான். பி.சி.ஏ. படிக்கும் போதே தனியாக பதிப்பகம் தொடங்கி விட்டேன். 1999-ல் இந்தத் துறைக்கு வந்தேன். அப்பாவுடைய பதிப்பகத்தை மூன்று வருஷம் பார்த்துக் கொண்டேன். பிறகு ‘அருண் பதிப்பகம்’ ஆரம்பித்தேன். முதலில் நாவல்கள்தான் போட்டேன். பிறகு குழந்தைகளுக்கான நூல்களை வெளியிட்டேன். ஆரம்பத்தில் குழந்தைகளுக்கான நூல்கள் 10, 12 தான். மற்றவை எல்லாமே நாவல்கள்தான். ஆனால், போகப் போக, நாவல்களின் விற்பனை குறையத் தொடங்கியது. அதுவும் சமூக வலைதளங்கள் மலிந்து போன இந்தக் காலத்தில், நாவல்களை வேறு வேறு தளங்களில் வாசகர்கள் வாசித்து விடுவதால், புத்தகங்களை வாங்க ஆர்வம் காட்டுவதில்லை. எனவே, காலத்துக்கேற்ப நாமும் தொழில் வடிவத்தை மாற்றிக் கொள்ள எண்ணி, குழந்தைகளுக்கான நூல்களில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினேன்” என்றார் அருணாசலம்.

**“இந்தக் காலத்துக் குழந்தைகளுமே மொபைல், டிவி, லாப்டாப் என்றுதானே நேரத்தை செலவழிக்கிறார்கள்! புத்தகம் வாசிக்கும் குழந்தைகளை அரிதாகத்தானே பார்க்கிறோம்!”**

“இல்லை. புத்தகங்களை ஆர்வமாக வாங்கிப் படிக்கும் குழந்தைகள் இன்றும் பலர் இருக்கின்றனர். அதுவும் மலிவு விலையாக இருந்தால் கண்டிப்பாக வாங்குகிறார்கள். இதை புத்தகக் கண்காட்சிகளில் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. பள்ளியிலிருந்து கண்காட்சிக்குக் குழந்தைகளை அழைத்து வரும் போது, பல சிறுவர், சிறுமியர் புத்தகங்களை ஆசையாகப் புரட்டிவிட்டு, அதை வாங்கக் கையில் காசில்லாமல் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அந்தச் சமயங்களில், அந்தப் பிஞ்சு மனதின் ஏக்கத்தைப்

புரிந்து கொண்டு, அவர்களை அழைத்து, 'இந்தப் புத்தகம் வாங்கினால் கண்டிப்பாகப் படிப்பாயா?' என்று கேட்டுக் கொண்டு, இலவசமாகவே அப்புத்தகத்தை அவர்கள் கையில் கொடுத்து விடுவேன். இவ்வளவு கடைகள் இருக்கும்போது நம் கடைக்கு வருகிறார்களே என்பதே எனக்கு மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கும்."




**"குழந்தைகளுக்காக இது வரை எத்தனை நூல்கள் வெளியிட்டிருக்கிறீர்கள்? அவை என்ன மாதிரியான தலைப்புகள்?"**

"முன்பே குழந்தைகளுக்கான நூல்கள் வெளியிட்டிருந்தாலும் சமீபகாலமாகத்தான் அதிகமாக அதில் வேலை செய்கிறேன். கடந்த 2 வருடங்களுக்குள் 130 தலைப்புகளில் நூல்கள் வெளிவந்து விட்டன. கதைகள், தலைவர்களின் வரிசை எனக் கலவையான தலைப்புகள். ரூ.25 முதல் ரூ.220 வரை விலையில் புத்தகங்கள் இருக்கின்றன. ஒரே புத்தகத்தின் உள்ளடக்கத்தைப் பிரித்து, குறைந்த விலையில் இன்னொரு புத்தகமாகப் போடுவதில்லை. ஒவ்வொரு புத்தகத்துக்கும் ஓர் எழுத்தாளர். உதாரணமாக 'திருக்குறள் கதைகள்' என்னும் நூல் இரு விதமான விலையில் இருக்கிறது. இரண்டையும் வெவ்வேறு எழுத்தாளர்கள் எழுதியுள்ளனர். குழந்தைகளைக் கவர வேண்டும் என்றால் முதலில் புத்தகத்தின் அட்டை நன்கு வண்ணமயமாக, குழந்தைகள் பார்த்ததும் சட்டென அவர்கள் கண்களையும் மனதையும் கவரும் விதத்தில் இருக்க வேண்டும். உள்ளிருக்கும் படங்களும் அப்படித்தான் பளிச்சென இருக்க வேண்டும். அதனால் என்னுடைய வெளியீடுகளுக்கு அட்டை, உள்பக்கங்களை நானேதான் வடிவமைக்கிறேன். படங்கள் எல்லாம் பளிச் பளிச்சென்று, பக்கத்தில் இருப்பது போன்ற உணர்வைத் தரும். அதுதான் பிள்ளைகளுக்குத் தேவை. இப்போதிருக்கும் தலைமுறை குழந்தைகளுக்காக ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் கதை வருவது போலவும் புத்தகம் போட்டிருக்கிறேன். அந்த இரு மொழி நூலில், ஒவ்வொரு பக்கத்திலும் மேலே தமிழிலும், கீழே ஆங்கிலத்திலும் கதை இருக்கும். அந்தப் புத்தகம் எல்லாம் நன்கு விற்பனையாகிறது! லாபகரமாகவும் இருக்கிறது.. புதிய புதிய தலைப்புகளில் நூல்கள் வந்து கொண்டே இருப்பதால், என்னுடைய பதிப்பக விலைப்பட்டியல் மாறிக் கொண்டே இருக்கும். அந்தளவுக்கு குழந்தைகளின் நூல்கள் வெளியிடுகிறோம். பல புத்தகக் கண்காட்சிகளில் பார்த்த அனுபவம்தான் கைகொடுக்கிறது."

**"பதிப்பகங்களின் எதிர்காலம்..?"**

"இத் துறையின் எதிர்காலம் கேள்விக்குறிதான். பதிப்புத் தொழில் நலிந்து கொண்டேதான் வருகிறது. நாங்கள் 3-வது தலைமுறையே தடுமாறுகிறோம். இனி அடுத்த தலைமுறை எல்லாம் இத் தொழிலுக்கு வருவார்களா என்றால் 'வாய்ப்பே இல்லை' என்றுதான் சொல்ல வேண்டும். நாங்கள் பெயரை விட்டுவிடக் கூடாது என்ற உந்துதலில், வேறு எங்கும் போக முடியாமல் பதிப்புத் துறைக்கு வந்தோம். வருங்காலத்தில் அந்த நிலைமை இருக்காது. நாவல் விற்பனை எல்லாம் சுத்தமாகக் குறைந்து விட்டது. இனிமேல் பொதுத் தலைப்புகள் மற்றும் குழந்தைகளுக்கான தலைப்புகள் மட்டுமே போடப் போகிறேன். குழந்தைகளின் நூல்களுக்கு நல்ல 'ரெஸ்பான்ஸ்' இருக்கிறது. நூலகங்களில் வாங்குகின்றனர். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். ஏற்றுமதிக்கு ஏற்ற வகையில் நூலின், தரம் இருக்க வேண்டும். அந்த வகையில் பரவாயில்லை. ஆனால் இத் தொழிலில் ஈடுபாடும் அனுபவமும் வேண்டும். அச்சுக்கு அனுப்பினால் நாம் நேரே அச்சகத்துக்குச் சென்று பார்க்க வேண்டும். அட்டை முதல் அட்டை வரை நம்முடைய கவனமும் ஈடுபாடும் இருக்க வேண்டும். அப்போதுதான் தரத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியும். இன்றும் நான் பிரிண்டிங் ப்ரெஸ்ஸில் நின்று பார்த்து விட்டுத்தான் வருவேன். இப்போது 700 தலைப்புகளைத் தாண்டி விட்டோம். நன்றாகச் செய்தால் இது நல்ல தொழில்தான். ஆனால், காலத்துக்கேற்ப, வாசகர்களின் ரசனைக்கேற்ப, ட்ரெண்டுக்கு ஏற்ப நம் தொழிலை, நம் படைப்புகளை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். நான் மாற்றிக்கொண்டு விட்டதால், தாக்குப்பிடிக்க முடிகிறது!" என்றார் அருணாசலம்.

இவருடைய மனைவி வள்ளிமீனாட்சிக்கு பதிப்பகத் தொழிலில் ஆர்வம் அதிகமாம். எனவே அருணாசலம் அப்பத்தா பெயரில் 'கல்யாணி நிலையம்' எனத் தனியாக ஒரு பதிப்பகம் நடத்துகிறார். அதிலும் 60 புத்தகங்கள் வெளிவந்துள்ளன.

அருணாசலத்தைப் போல எத்தனையோ நகரத்தார் குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாகச் செய்து வரும் இப் பதிப்புத் தொழில் நசிந்து விடாமல், அதை மீண்டும் தழைத் தோங்கச் செய்ய வாசகர்களால் மட்டுமே முடியும்! ■





நேசங்களோடு வளர்ந்த பந்தம்...
காலங்களோடு கலந்த பாரம்பரியம்...!

மகன்லால்
வைரம் & தங்கம்

We Offer Diamonds
Grade by

GIA


Maganlal
a precious legacy
For your Auspicious
New Beginnings
MAGANLAL MEHTA & CO
மகன்லால் மேத்தா & கோ
Diamond & Gold Jewellery Private Limited
#51, AVM Building, Kallukatti
North, Karaikudi - 630 001
# 27/43, North Usman Road,
T.Nagar, Chennai - 600 017
we@maganlalmehta.com
www.maganlaldiamonds.com
88 YEARS
CUSTOMER CARE
+91 888 111 5555
+91 888 111 4555

## விண்வெளி ஆராய்ச்சியின் குட்டிக்காலங்கள் பாகம் - 2

# இந்தியாவின் வளர்ச்சியில் இஸ்ரோவின் பங்கு – 3



லெ. முத்து
இணை இயக்குனர் (ஓய்வு) இஸ்ரோ.

சென்ற இதழில் வாசகர்களுக்கு ராக்கெட்டுகளின் ஆரம்ப காலங்களையும் விண்வெளிக்கு அப்பால் செல்லும் ராக்கெட்டுகளைப் பற்றிய முன்னறிவை தந்த சிந்தனையாளர்கள் குறித்தும் கண்டறிந்தோம். இருந்தும் இதற்கான உந்து சக்தியை தரும் இயந்திரம் கையில் இல்லாததால் இந்த எண்ணங்கள் காகிதத்தில் எழுதுவதோடு நின்று விட்டதையும் அறிந்தோம்.



Konstantin Tsiolkovsky



Robert.H. Goddard

இந்த இதழில் இதை சாதகமாக்கிய பேரறிஞர்கள் சிலரைக் குறித்தும் அவர்கள் ஆற்றிய சாதனைகளைக் குறித்தும் விவாதிக்க விரும்புகிறேன்.

இந்த உயரிய உந்து சக்தியை தரக்கூடிய ராக்கெட்டை கண்டுபிடித்துத் தரும் முயற்சி இரண்டாம் உலகப் போரின் தேவைகளினாலும் அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் இடையே ஏற்பட்ட Space Race என்று அழைக்கப்பட்ட விண்வெளி பந்தயத்தினாலுமே சாத்தியமானது என்றால் அது மிகையாகாது. சோவியத் யூனியனின் Konstantin Tsiolkovsky, அமெரிக்காவின் Robert. H. Goddard மற்றும் ஜெர்மனியைச் சார்ந்த Herman Oberth என்ற மூன்று மாமேதைகளின் அயராத ஆராய்ச்சியால் விளைந்தது தான் ராக்கெட் தொழில் நுட்பத்தின் அடித்தளம் (Fundamentals of Rocket Science).

அவர்கள் மேல்காட்டிய அடிப்படை மூலம் ராக்கெட்டைப் பற்றிய உருவம் (Configuration), அதன் கட்டுமானம் (Construction), அதன் முக்கிய பாகங்கள் (Parts), மற்றும் அது பணியாற்றும் விதம் (Principle of Operation) ஆகியவை மெது மெதுவாக புலப்பட ஆரம்பித்தன.

Tsiolkovsky 1857- 1935 இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மாமனிதர். இவர் ராக்கெட் விஞ்ஞானத்தின் தந்தை என்று அழைக்கப்படுவதன் காரணம் Rocket Equation என்று அழைக்கப்படும் ராக்கெட் சமன்பாட்டை கண்டுபிடித்து அதை உலகுக்கு உணர்த்திய பெருமைக்குரியவர். இன்று வரை செலுத்தப் பட்ட அனைத்து ராக்கெட்டுகளும் இந்த அடிப்படை தத்துவத்தை பின்பற்றியே அமைக்கப்படுகின்றன.



Robert.H. Goddard with his Rocket.

ராபர்ட் கோடார்டு 1882 - 1945 காலகட்டத்தில் வாழ்ந்தவர். உலகத்தின் முதல் திரவ எரிபொருள் ராக்கெட்டை (World's first Liquid fuelled Rocket) 2.6 கி.மீ உயரத்திற்கு மார்ச் 16, 1916-ல் வெற்றிகரமாக செலுத்திய பெருமைக்குரியவர். ஆகவே இவர் Father of Practical Modern Rocketry என்று அழைக்கப்படுகிறார்.

ஹெர்மன் ஓபர்த் 1891- 1979 இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த ரொமானியன் ஜெர்மன் ராக்கெட் வல்லுநர். இவர் The Rocket to the Planetary Spaces என்ற புத்தகத்தை எழுதியதன் மூலம் உலகப்புகழ் பெற்றார். ராக்கெட் விஞ்ஞானத்தின் அடிப்படை தத்துவங்களை இதில் விளக்கியதோடு மனிதர்கள் ராக்கெட்



Hermann Oberth

மூலம் விண்வெளிக்கும் மற்ற கிரகங்களுக்கும் பயணிக்க முடியும் என்ற தீர்க்கதரிசனத்தையும், பிற்காலத்தில் வரப்போகும் மற்ற நிகழ்வுகளைப் பற்றியும் அன்றே விவரித்த பெருமைக்குறியவர்.

மேற்குறிப்பிட்ட மூன்று ஜாம்பவான்களும் விண்வெளி விஞ்ஞானத்தையும், ராக்கெட் தொழில் நுட்பத்தையும் பற்றி விவரித்திருந்தாலும் உண்மையான ராக்கெட் உருப்பெறுவதற்கு உலகம் இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற 1939-1945 காலம் வரை பொறுத்திருக்க வேண்டியதாயிற்று.

இந்த உலக மகா யுத்தத்தைப் பற்றி நாமெல்லாம் அறிந்திருப்போம். சிலர் அனுபவப்பட்டும் இருப்போம். இது ஜெர்மனி அதன் நேச நாடுகளின் Axis Forces-க்கும் இங்கிலாந்து அதன் நேச நாடுகளின் Allied Forces-க்கும் நடந்த யுத்தமாகும். இதில் டாங்குகளும் போர் விமானங்களும் எதிரி நாடுகளை அளித்து உயிர் சேதமும் பொருள் சேதமும் ஏற்படுத்துவதில் பெரும் பங்காற்றின. Axis Forces-ன் தலைவரான அடால்ப் ஹிட்லர் மேலும் ஒரு படி சென்று விண்வெளியில் சென்று தாக்கும் வலிமை மிகுந்த ராக்கெட்டுகளை நிர்மானித்து எதிரியின் சேதத்தை அதிகரித்து அவர்களை அடிபணியச் செய்ய விரும்பினார்.



Wernher Von Braun

இந்த பெரும் பொறுப்பு ஹெர்மன் ஓபர்த்தின் பிரதம சீடரான வெர்னர் வான் பிரான் (Vernher von Braun) என்ற நான்காவது ஜாம்பவானிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் வடிவமைத்தது தான் V2 என்ற திரவ எரிபொருள் உபயோகிக்கும் ராக்கெட். அப்பொழுது இந்த தொழில் நுட்பம் ஜெர்மனி அல்லாது வேறெவரிடமும் இல்லை. இதுதான் முதன்முதலில் விண்வெளிக்கு சென்ற ராக்கெட் முன்னோடி என்ற பெருமையைப் பெற்றது. போரில் இந்த வகை ராக்கெட்டுகள் 3000-க்கு மேல் உபயோகிக்கப்பட்டு அவை லண்டன் மற்றும் ஆணட்வெர்ப் நகரங்களில் பெரும் சேதங்களை ஏற்படுத்தின. Technology is a double edged weapon என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். மேற்பட்ட காலம் வரை ராக்கெட்டுகள் அழிவுக்கே




V2 Rocket

உபயோகப்படுத்தப்பட்டன என்பது நமக்கெல்லாம் வருத்தமளிக்கும் விஷய மாகும்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அமெரிக்க படைகளும் ரஷ்ய படைகளும் இந்த தொழில்நுட்பத்தை பெறுவதற்காக V2 ராக்கெட்டுகள் உற்பத்தி செய்யப்பட்ட இடமான பீனமுண்ட் (Peenamunde) என்ற இடத்திற்கு விரைந்தன. இங்கிருந்து கொண்டுசென்றதொழில் நுட்பம் தான் இரண்டு நாடுகளின் ராக்கெட் வளர்ச்சிக்கு (Expertise in Rocket Technology) வித்திட்டன. வெர்ணர் வான் பிரானும் அவர் சகாக்களும் அமெரிக்காவுக்கு புலம் பெயர்ந்து பின்னர் மனிதனை சந்திரனுக்கு கொண்டு சென்ற Saturn போன்ற மகத்தான ராக்கெட்டுகளின் வடிவமைப்பில் பெரும் பங்காற்றினார்கள். பின்னர் வந்த ராக்கெட் டெக்னாலஜியின் அபரிமிதமான வளர்ச்சியைப் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

கட்டுரையை முடிக்கும் முன்னர் பலர் கேட்கும் ஒரு வினாவிற்கு விடை அளிக்க முனைகிறேன். விமானங்களுக்கும் ராக்கெட்டுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன என்பதே இந்த வினா. பொதுவாக இயந்திரங்கள் சக்தியை அளிப்பதற்கு இரண்டு பொருள்கள் தேவைப்படுகின்றன. ஒன்று எரி பொருள் (Fuel). மற்றது எரிவதற்கு தேவையான பிராண வாயு (Oxygen). விமானங்கள் ஆகாய வெளிக்குள்ளேயே பயணிக்குமாறு வடிவமைக்கப்படுகின்றன. ஆகவே அவை எரிபொருளை மட்டும் (Aviation Petrol) சுமந்து கொண்டு ஆகாய வெளியிலுள்ள பிராண வாயு சக்தியை வெளிப்படுத்துவதற்கும் பயணிகளின் சுவாசத்திற்கும் உபயோகப்படுத்திக் கொள்கின்றன. ஆனால் ராக்கெட்டின் தேவை அப்படியல்ல. அது காற்று மண்டலமில்லாத அண்ட வெளியில் வெகு தூரம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுவதால் அது எரிபொருளையும் பிராண வாயுவையும் சேர்த்து சுமந்து செல்ல வேண்டியதாகிறது.

ராக்கெட்டின் ஆரம்ப காலகட்டங்களை இதுவரை பார்த்தோம். இனி குறுகிய காலத்தில் ஏற்பட்ட அபரிமிதமான வளர்ச்சியை குறித்து அடுத்து வரும் கட்டுரைகளில் பார்க்கலாம்.

(தொடரும்)

# நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 49



# நரசிங்கம்பட்டி பஞ்சுப்பொதி ஊரணி



மா.இளங்கோ, குழிபிறை, 9842260955

19-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் பெரும்பகுதி ஐரோப்பியர்களின் ஆளுகைக்குள் சென்று விட்டது என்றாலும் ஐரோப்பியர்களும் நிதிப் பற்றாக்குறையில் தான் இருந்தனர். இந்தச் சூழலை நகரத்தார்கள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்ற செய்தியுடன் சென்ற இதழ் முடிந்திருந்தது. மன ஊக்கம் மிகுந்தவர்கள் நகரத்தார்கள் என்பதற்கு அந்தச் செய்திகள் சான்றுகளாக விளங்குகின்றன. அவற்றைச் சுருக்கமாகக் கீழே காணலாம்.

### நிதியுதவி வங்கிச் சேவை;

பொருட்களை விற்பவர்களாக, வாங்குபவர்களாக இருந்த நகரத்தார்கள் முதலீடு செய்பவர்களாக மாற்றம் பெற்றனர். எவ்வாறெனில், நிதிச் சேவை அல்லது வட்டித் தொழிலில் பணத்தை முதலீடு செய்யத் தொடங்கினர். ஒரு பெரிய நிதிச் சந்தையை அவர்களைச் சுற்றி உருவாக்கி விட்டனர். பயிர் செய்யக் கடன், நிலம் வாங்கக் கடன், விலை பொருட்களை ஈடாகக் கொண்டு கடன் என அவர்களின் நிதிச் சந்தை அமைந்தது. நிதிச் சேவை என்பது வங்கிச் சேவையையும் உள்ளடக்கியதாக இருந்தது.

1800-க்குப் பிறகான காலங்களில் பணத்தை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்புவது என்பது பெரும்பாலோர் கேள்விப்படாத ஒன்று. ஆனால், நகரத்தார்கள் அக்கலையில் கைவரப் பெற்றவர்களாக இருந்தனர். இவ்வாறாகப் பணம் அனுப்பும் முறையே பிற்காலங்களில் வங்கிகள் தொடங்கும் அளவிற்கு விரிந்தது எனலாம். நகரத்தார்களின் நிதி மேலாண்மை மிகவும் செம்மைப்படுத்தப்பட்டதாக இருந்தது. தனியார் நிதிச் சேவை வங்கிச் சேவைகளில் நகரத்தார்களின் நிர்வாகமே திறன் மிக்கதாக இருந்தது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

### நகரத்தார்களின் உப்பு வணிகம்:

17-ஆம் நூற்றாண்டில் உப்பு வணிகத்தில் பெரும்பாலான நகரத்தார்கள் ஈடுபட்டிருந்தனர். அந்தக் காலப் பகுதியில் நகரத்தார்கள் உப்பு வணிகர்களாக இருந்தனர் என்றாலும் பெரிய அளவில் இல்லை. உப்பு உற்பத்தி செய்யும் உப்பளங்களுக்கு உரிமையாளர்களாக பெரும்பகுதி இஸ்லாமியர்களே இருந்தனர். அவர்களிடம் இருந்து உப்பைப் பெற்றுக் கொண்டனர். கிழக்குக் கரையில் இருந்து பெறப்படும் உப்பு உள்நாடுகளில் விற்பனை செய்யப்பட்டது. உப்பு பண்டமாற்றுப் பொருளாகவும் இருந்திருக்கிறது. கோதுமை, பருத்தி, அரிசி, புன்செய் விளைபொருட்கள், புளி, எள், வால்மிளகு போன்ற பொருட்களுக்காக மாற்றப்பட்டன. இந்த வணிகத்தில் நகரத்தார்கள் மட்டுமல்ல தெலுங்கு கோமுட்டிச் செட்டியார்களும், பலிகா செட்டியார்களும் (Baliga Chetty) ஈடுபட்டிருந்தனர்.

1800-ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் நகரத்தார்களின் வணிகம் பலவிதமான மாற்றங்களுக்கு உள்ளானது. இக்காலத்திலும் உப்பு வணிகம் முக்கியமானதாக இருந்தது. நகரத்தார்களின் உப்பு வணிகம் 18-ம் நூற்றாண்டில் பல சிக்கல்களைச் சந்தித்தது. அவற்றுள் ஒன்று ஆங்கிலேயர்களின் கிழக்கிந்திய நிறுவனம் (East India Company) உப்பு வணிகத்தை மேற்கொண்டதுதான். மற்றொன்று கி.பி 1792-ல் ஏற்பட்ட பஞ்சமும், தொற்றுநோயும். இரண்டு காரணங்களும் சேர்ந்து நகரத்தார்கள் உப்பு வணிகத்தைக் கைவிடச் செய்து விட்டது. உப்பு மட்டுமல்ல பஞ்சு, அரிசி, முத்து போன்ற பொருட்களை நேரிடையாக வணிகம் செய்த நகரத்தார்கள், அத்தொழில்களை விட்டும் விலக நேர்ந்தது.

### 1800 முதல் 1850 வரையிலான காலப்பகுதியில் உப்பு வணிகம்:

உப்பிற்கான விலையை கிழக்கிந்திய நிறுவனம் தான் முடிவு செய்தது. இந்த கொள்கை முடிவு இழப்பை தந்ததால் நகரத்தார்கள் உப்பு வணிகத்தைக் கைவிட்டனர். உப்பு வணிகத்தைக் கைவிட்டனரே தவிர முயற்சியைக் கைவிடவில்லை. நிதி மேலாண்மையில் உயர்வு பெற ஆரம்பித்தனர். எவ்வாறு எனில் வேளாண் உற்பத்திக்கு கடன் வழங்குதல், அரசியல், ராணுவ, படைத்தலைவர்களுக்கு கடன் வழங்குதல் போன்ற தொழில்களைத் தொடங்கினர். பொருட்களை கொண்டு விற்பது என்ற நிலை நிதித்துறையை நோக்கி நகர்ந்தது. உப்பு வணிகம் கைவிட்டுப் போனது.நகரத்தார்களை மீண்டும் எழுவதற்காக காலம் நடத்திய நாடகம் என்றே கருத வேண்டும். நகரத்தார்கள் சமூகம் எதிர்ப்புகளையும் இழப்புகளையும் சந்திக்கும் பொழுது எல்லாம் முன்னிலும்

மேலாகவே உயர்ந்திருக்கின்றது. 1800-களின் தொடக்கத்தில் அழிவை சந்தித்த நகரத்தார்கள் 1860-க்குப் பின் ஒப்பற்ற உயர்வை பெற்றார்கள் என்பதே வரலாறு.

### நகரத்தார்களின் 'பஞ்சுமுறி':

பஞ்சுமுறி என்பது பஞ்சு ஒப்பந்தம் எனலாம். போட்டி மனப்பான்மையால் தங்களின் விற்பனைப் பொருட்கள் விலை கிடைக்காமல் போய்விடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வே இந்த முறிக்கு அடிப்படையாக இருக்க வேண்டும். பிரான்மலை, சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டுகளுக்கு இணையானது இந்தப் பஞ்சுமுறி எனலாம். நகரத்தார்களின் மரபுத் தொடர்ச்சியே "நரசிங்கம்பட்டி பஞ்சுமுறி". செட்டிநாட்டுப் பகுதியில் இருந்து பஞ்சு வணிகம் செய்ய மதுரைக்குச் சென்றனர் நகரத்தார்கள். நகரத்தார்கள் மட்டுமல்லாமல் வேறு வணிகம் செய்வோரும் அக்குழுவில் இருந்தனர். மதுரையில் இருந்து மேலூர் செல்லும் வழியில் 8 கி.மீ தொலைவில் உள்ள ஊர் நரசிங்கம்பட்டி. இவ்வூர் பழங்காலத்தில் சமணர்கள் வாழ்ந்த ஊரும் ஆகும். இந்த ஊரைச் சேர்ந்தவர் அர்ச்சுன பெருமாள் அம்பலகாரர் ஆவார். மதுரை செல்லும் வணிகர்கள் அனைவரும் நரசிங்கம்பட்டியில் உள்ள மேற்படி அம்பலகாரர் வீட்டில் தங்குவர். அங்கிருந்து ஒரு குழுவாக இணைந்து மதுரைக்குப் புறப்பட்டுச் செல்வர். வணிகம் முடிந்ததும் திரும்பவும் நரசிங்கம்பட்டியில் அம்பலகாரர் வீட்டில் கூடுவர். அதன் பின்னர் அங்கிருந்து தமது ஊர்களுக்குத் திரும்புவர். (Rudner, David West, Caste and Capitalism in Colonial India, University of California Press, 1994, pg.58)



நகரத்தார்கள் செய்த வணிகத்தில் கிட்டிய வருவாயில் ஒரு பகுதியைப் பழனிக் கோயிலுக்கு நல்கையாக வழங்கினர். அது மட்டுமல்லாது நரசிங்கம்பட்டியில் ஓர் ஊரணியை அமைத்தனர். நரசிங்கம்பட்டியில் உள்ள ஊரணி 'நகரத்தார் ஊரணி' என்றும் 'பஞ்சுப்பொதி ஊரணி' என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பஞ்சு வணிகம் 1815 வரையில் நடந்ததாகத் தெரிகிறது. இந்த இதழ் கட்டுரைக்காக அந்த ஊரணியை நேரில் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அச்செய்தியின் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொள்ள விரும்பி

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்

**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**

எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்டை (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும், எல்லா வகை பொடி வகைகளும், வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.

தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590

ADVT

சூலை மாதம் நேரில் சென்றேன். ஊருணியின் அமைப்பும், கருங்கல் கட்டுமானமும் அதன் பழமையைப் பறை சாற்றின. ஆனால் ஊருணியின் இன்றைய நிலை காணத்தக்கதாக இல்லை. சிதைவடைந்த நிலையில் சுற்றுச்சுவர்கள் - முற்றிலும் தடைபட்ட நீர்வரத்து, என தூர்ந்து போன ஊரணியாகக் காட்சியளிக்கிறது.

### நகரத்தார்களின் மிளகு வணிகம்:



சங்க கால வணிகர்களின் தொடர்ச்சியாக அரு.நா. குடும்பத்தினர் இருந்திருக்கிறார்கள். நகரத்தார்களின் வாழ்வில் பஞ்சு, உப்பு, அரிசியைப் போல மிளகும் வணிகப் பொருளாக இருந்திருக்கிறது. கீழே தரப்பட்டுள்ள செய்திகள் நகரத்தார்களின் வணிகத்தைப் பழங்காலச் சூழலுடன் ஒப்பீட்டுப் பார்த்து ஒரு மனக்காட்சியை உருவாக்கிட அன்பர்களுக்கு உதவும். இந் நிகழ்வுகள் 1850-க்குப் பிறகே நடந்திருக்கும் என்பது என் கணிப்பு. (திரு.அரு.நா.திருப்பதி வெங்கிடாசலம் அவர்களுடன் நடந்த உரையாடல். குழிபிறையில் பதிவு செய்யப்பட்டது. வீட்டு விலாசம்: அரு.நா. குழிபிறை).

அரு.நாராயணன் செட்டியார் வழி வந்தவர்கள் தற்பொழுது குழிபிறையில் வசிக்கிறார்கள். திரு.திருப்பதி வெங்கடாசலம் உட்பட நால்வர்கள் உடன் பிறந்தவர்கள். அரு.நாராயணன் செட்டியார் அவர்களின் முன்னோர்கள் மிளகு வணிகம் செய்தனர் என்பது அந்தக் குடும்பத்தினர் தரும் செவிவழிச் செய்தியாகும். திரு.நா. அவர்கள் மதுரையில் இருந்து மிளகு வாங்கி வந்து நம் பகுதியிலும் திருமயம், புதுக்கோட்டை சுற்று வட்டாரங்களிலும் விற்பனை செய்திருக்கிறார். வழக்கம் போல மதுரையில் இருந்து மிளகு வாங்கி கழுதை மீது ஏற்றி பூலாங்குறிச்சி, செவலூர் வழியாக குழிபிறை வந்திருக்கிறார்கள். இந்த மிளகு மூட்டை – மிளகுப் பொதி என்றே அழைக்கப்பட்டிருக்கிறது. செவலூர் மலையடிப்பட்டி வழியாக பூலாங்குறிச்சி செல்ல



வனத்துறையினரின் பொறுப்பில் உள்ள வண்டிப்பாதை உள்ளது. சில இடங்களில் தார்ச்சாலையாகவும் உள்ளது. மலையடிப்பட்டியில் இருந்து சிறிது தூரத்தில் பூலாங்குறிச்சி செல்லும் வழியில் வலது புறம் திரும்பி 100 அடி தூரம் சென்றால் 'வண்ணமுடைய அய்யனார் கோயில்' உள்ளது. நகரத்தார்கள் பலருக்கும் குலதெய்வமாக வண்ணமுடைய அய்யனார் விளங்குகிறார். இயற்கை எழில் மிகுந்த, அடர்ந்த சுற்றிலும் மலைக்குன்றுகளும், வெப்ப மண்டலக் காடாக இக்கோயில் அமைந்துள்ள இடம் உள்ளது. குழிபிறை பெருமருதூருடையார் பிரிவின் ஒரு பகுதியினருக்கு வண்ணமுடைய அய்யனார் குலதெய்வமாக விளங்குகிறார்.

### பழங்கால மிளகு வணிகம் ஒரு நேரடிப் பதிவு:

இன்றுள்ள அக்குடும்பத்தினர் சொல்லும் செவிவழிச்செய்தி இவ்வாறாக உள்ளது. அரு.நா. அவர்களின் ஐயா ஒரு முறை மிளகு வாங்கி கழுதை மீது ஏற்றிக்கொண்டு செவலூர் மலையடிப்பட்டி வழியாக வந்திருக்கிறார்கள். இந்த இடத்தில் இன்னொரு குறிப்பையும் சொல்ல வேண்டியுள்ளது. சங்க காலத்தில் வணிகம் மேற்கொண்டு வெளியூர் செல்பவர்கள் பயன்படுத்திய ஊர்திகள், விலங்குகள் பற்றிய பட்டியலை ஏற்கனவே பார்த்திருக்கிறோம். அவற்றில் எருது பூட்டிய வண்டிகள், அத்திரி என்ற ஒரு வகைக் குதிரை, கழுதை மற்றும் குதிரைகளும் உள்ளன. மிளகுப்பொதி அளவில் சிறியது ஆனால் மதிப்பு மிகுந்தது. மிளகுப் பொதியை கழுதை மீது ஏற்றிக் கொண்டு சென்றனர். மிளகு ஏற்றிக் கொண்டு சென்ற வணிகர் கூட்டம் 'கழுதைச்சாத்து' என அழைக்கப்பட்டது. கழுதைச்சாத்து பற்றிய காட்சிகளை பெரும்பாணாற்றுப்படையில் வரிகள் 67-82 மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

சிறுசுளைப் பெரும்பழம் கடுப்ப மரியல்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து
அணர்ச்செவிக் கழுதைச் சாத்தோடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியங்காட்டு இயவின்
(பெரும் 78-82)

இலக்கியச் செய்திகளை உறுதிப்படுத்தும் வகையிலேயே அரு.நா. அவர்கள் மிளகுப்பொதியை கழுதை மீது ஏற்றி வந்தார்கள் என்ற செய்தியும் உள்ளது. பிரான்மலைக் கல்வெட்டில் மிளகுப்பொதி ஒன்றிற்கு 5 காசுகள் வரி விதிக்கப்பட்டு சொக்கநாதர் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்ற செய்தியும் நினைவு கூறத்தக்கது.

அரு.நா. வரும் வழியில் வண்ணமுடைய ஐயனார் கோயிலுக்கு அருகில் இருந்து ஒரு குரல் கேட்டிருக்கிறது, 'மூட்டைக்குள் என்ன இருக்கிறது? காட்டில் கேட்ட குரல் கள்வர்களுடையதாக இருக்கலாம் என திரு.நா. எண்ணியிருக்கிறார்கள். மிளகு அன்னாளில் மதிப்பு மிகுந்த பொருள் என்பதால் கொள்ளையடிக்கப்படலாம் என்ற அச்சத்தில் 'உளுந்து' என பதிலளித்திருக்கிறார்கள். பிறகு பயணம் தொடர்ந்திருக்கிறது. வீட்டிற்கு வந்து பார்த்த பொழுது மூட்டை நிறைய இருந்தது - உளுந்து, மிளகு இல்லை. மிளகைக் காணவில்லை. எனவே அச்சம் கொண்டு மலையடிப்பட்டி சென்று கிராமத்து மக்களிடம் இந்த வியப்பான நிகழ்வைச் சொன்னார்கள். கிராமத்து மக்கள் 'இங்கு இருப்பவர் வண்ணமுடைய அய்யனார் அவரிடம் முறையிடுங்கள், வழிபாடு செய்யுங்கள் இழந்ததைப் பெறுவீர்கள்' என்றனர். அதன்படியே திரு.அரு. நா. அவர்கள் அங்கிருந்த வண்ணமுடைய அய்யனாரை வழிபட்டார். இழந்த பொருள் கிடைக்க வேண்டும் என வேண்டிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்கள். மூட்டையைப் பிரித்துப் பார்த்தார்கள், மகிழ்ச்சியடைந்தார்கள், நம்பிக்கை கைகொடுத்தது, காரணம் மறுபடியும் மூட்டைக்குள் - மிளகு.

அன்றிலிருந்து அய்யனாரை வழிபட்ட பின் மிளகு வணிகத்திற்குச் செல்லும் பழக்கம் ஏற்பட்டதாகவும், இன்று வரையில் மலையடிப்பட்டி வண்ணமுடைய அய்யனாரே குலதெய்வமாக வணங்கப்படுவதாகவும் அக்குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

நகரத்தார்களின் இறைப்பற்றிற்கு இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டாக உள்ளது என்றாலும் அதைவிட முகாமையானது, சங்க கால மிளகு வணிகத்தின் தொடர்ச்சியாக நகரத்தார்கள் அண்மைக் காலம் வரை இருந்திருக்கின்றனர் என்பதுதான். வண்டியில் விலங்குகள் மீது பண்டங்களை ஏற்றிக் கொண்டு ஒவ்வொரு பகுதியாகச் சென்று வணிகம் செய்தனர் தமிழர்கள் என்பதற்குச் சான்றாக, சங்க இலக்கியங்களுக்கு விளக்கமாக திரு.அரு. நா. அவர்கள் இருந்திருக்கிறார்கள். அண்மையில் வண்ணமுடைய அய்யானார் கோயில் குடமுழுக்கு பெருமருதூருடையார் பிரிவு நகரத்தார்களால் மிகச் சிறப்புடன் நடத்தப்பட்டது. சங்க கால வணிகத்தின் நிகழ்காலச் சான்றாக திரு.அரு.நா. குடும்பத்தினரும், ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த தமிழகத்தின் அய்யனார் வழிபாட்டிற்குப் பெருமை சேர்ப்பவர்களாக பெருமருதூருடையார் பிரிவு நகரத்தார்களும் உள்ளனர்.

(வரலாறு வளரும்)

# ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில்
# நமது இல்லத்து இறைவனாக இருக்கும் முன்னோர்களுக்கு

## பித்ரு பூஜை, திலஹோமம், திலதர்ப்பணம் மற்றும் கோதானம் செய்ய ஏற்ற நாள்

# மஹாளய அமாவாசை -21.09.2025



## முன்னோர் திருநாளில், முன்னோரை வழிபட்டு முன்னேற்றமடைவோம்



மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் பித்ரு பூஜை

**மாத்ரு தேவோ பவ...! பித்ரு தேவோ பவ...!** நமது முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்வது நமது இன்றியமையாத கடமையாகும். நமக்கு நல்வாழ்வு அளித்துச் சென்ற முன்னோர்களை திதி நாளில், திருப்திபடுத்தாத காரணத்தினால் தான் நமக்கு துன்பங்கள் அடுக்கடுக்காக வருகின்றன. அத்துன்பங்களில் இருந்து விடுபட மஹாளயபக்ஷ நாளில் ஓர் அதிஅற்புத செயலான பித்ரு பூஜையை ஒவ்வொரு குடும்பத்திலும் செய்ய வேண்டும் என்பதற்காக, கடந்த 33 ஆண்டுகளாக 120க்கும் மேற்பட்ட வயதான, நோயுற்ற நாட்டு பசுக்களை பாதுகாத்து, பராமரித்து வரும் பசுமடத்தில் வைதீக முறைப்படி திலஹோமம் செய்து, மாட்டுத் தொழுவத்தில் பசுமாட்டினை முன்நிறுத்தி ஸ்ரீசாளகிராமம், விஷ்ணு பாதம் முன் புனிதமான கங்கை நீர் கொண்டு திலதர்ப்பணம் நடைபெறும். மேலும், ஜோதிட சிம்மம் ஸ்ரீயோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி விருட்ச சாஸ்திர வித்வான் பூஜ்ய **ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா** தமது வேத வித்வான்கள் குழுவுடன் பித்ருதோஷ நிவர்த்திக்கான கோதான பூஜை, கோபூஜை, வலம்புரி சங்கு பூஜை மற்றும் விஷ்ணு பாத பூஜையும் செய்து வைக்க உள்ளார்கள். இதில் அனைவரும் கலந்து கொணடு அனைத்துவித தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற்று பிதுர் ஆசி, ரிஷி ஆசி, குரு ஆசி மற்றும் தேவ ஆசியும் பெறலாம். மேலும் அடுத்தடுத்து வரும் சந்ததிகள் அனைத்து வளமும் நலமும் பெற்று சிறப்புடன் வாழ இச்சிறப்புமிக்க பித்ரு பூஜைகளில் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

## முன்னோர்கள் நினைவாக பசுவிற்கு தாங்கள் செய்யும் அன்னதானம் மட்டுமே தானத்தில் சிறந்த தானம் ஆகும்

ஒரு பசுவை பராமரிக்க ஒரு வாரத்திற்கு ரூ.200 அனுப்புவோருக்கு **பித்தளையிலான காமதேனு யந்திரம்** அனுப்பி வைக்கப்படும்

அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வெல்லம் செலவு ரூ.500 அனுப்புவோருக்கு **பித்தளையிலான சுபதீப விளக்கு** அனுப்பி வைக்கப்படும்

அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வைக்கோல் செலவு ரூ.1,000 அனுப்புவோருக்கு **கல்வி, செல்வச்செழிப்பு உண்டாக லட்சுமி ஹயகரிகர் விளக்கு** அனுப்பி வைக்கப்படும்

அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் அகத்திகீரை/கோரப்புல் செலவு ரூ.2,000 அனுப்புவோருக்கு **ஆரோக்கியம் தரும் தன்வந்திரி விகரஹரம்** அனுப்பி வைக்கப்படும்

அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் தீவனச் செலவு ரூ.3,000 அனுப்புவோருக்கு **தீய சக்திகளை அழிப்பவர் பஞ்சமுக ஆஞ்சநேயர் விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத மருத்துவ செலவு ரூ.4,000 அனுப்புவோருக்கு **பித்தளையிலான சங்குசக்கர விளக்கு** அனுப்பி வைக்கப்படும்

ஒரு பசுவும் கன்றும் ஒரு வருடத்திற்கு பராமரிக்க ரூ.8,800 அனுப்புவோருக்கு **தேக ஆரோக்யம், மன அமைதி மற்றும் சகல நலமும் ஏற்படுத்தும் பித்தளையிலான த்ததாத்ரேயர் விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

## முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று கீழ்கண்ட கோதானங்கள் கொடுப்பவருடைய ஏழு கோத்ரங்களையும், நூற்றியோரு குலத்தையும் இக்கோதானங்கள் காப்பாற்றும்

**நாட்டுப் பசுவும் கன்றும் தானம் செய்தால்...** ஜாதக ரீதியான தோஷம், தலைமுறை தோஷம், செய்வினை தோஷம், மாத்ரு, பித்ரு தோஷம், குல தோஷம், திருஷ்டி தோஷம், பூர்வ ஜென்ம தோஷம், புத்ர தோஷம், களத்திர தோஷம், பிரம்மஹத்தி தோஷம் நீங்கி, தீர்க்க சுமங்கலி பாக்கியம், குழந்தை பாக்கியம், மறுமணம், குடும்பத்தில் குபேர சம்பத்து உண்டாகி மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். **கோதானம் செய்ய ரூ.17,000**

**காறாம் பசுவும் கன்றும் தானம் செய்தால்...** ஏழரை சனி, அஷ்டம சனி, அர்த்தாஷ்டம சனி, அனைத்து கிரஹங்களின் பாதிப்பு விலகி, மகாலட்சுமி அருளால் வீடு, நிலம், பொன், பொருள், புகழ், கல்வி, நிகரற்ற செல்வம் பெற்று தங்கள் குலம் தழைத்து வாழையடி வாழையாய் செல்வச் செழிப்புடன் வாழ்க்கை வளமுடன் அமையும். **காறாம் பசு தானம் செய்ய ரூ.18,000**

**மகிஷ தானம் (எருமையும் கன்றும்) செய்தால்...** வாகன விபத்து, வியாபார நஷ்டம், கடன் பிரச்சனை, படிப்பில் தடை, உத்யோகத் தடை நீங்கி வாழ்க்கை வளம், பதவி உயர்வு, சகல கார்ய சித்தி, குலவிருத்தி, கோத்ர விருத்தி, வம்ச விருத்தி, குடும்ப விருத்தி, ஆயுள் விருத்தி, உடல் ஆரோக்கியம், குடும்ப ஒற்றுமை, சகலவிதமான சந்தோஷம், ஆனந்தம் உண்டாகும். **மகிஷ தானம் செய்ய ரூ.19,000**

**ரிஷப தானம் (காளைக் கன்று) செய்தால்...** அனைத்து துன்பங்களும் துயரங்களும், மனக்கவலை நீங்கி பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகும், தடை இன்றி தன வரவு மற்றும் காரிய வெற்றி பெறலாம், தோல்விகள் அகன்று வெற்றிகள் குவியும், ரிஷப தானம் செய்பவர்களுக்கு பித்தளையிலான வாஸ்து பகவான் விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும். **ரிஷப தானம் செய்ய ரூ.7,000**

**தங்கள் சார்பாக நடைபெறும் கோதானத்துடன் அன்னதானமாக புடலங்காய் சாதம், பிரண்டை சாதம் மற்றும் கருப்பு எள் சாதமும் அனைவருக்கும் வழங்கப்படும்**

மேற்கண்ட நன்கொடையை அனுப்புகிறவர்கள், மஹாளய அமாவாசையன்று முன்னோர்கள் நினைவாக நடைபெறும் திலஹோமம், திலதர்ப்பணம், கோபூஜை, கோதானத்தை யார் பெயரில் செய்ய விரும்புகிறீர்களோ, அவர்களின் பெயர், திதி, கோத்திரம் போன்ற விபரங்களை தெரிவிக்கவும். அதன்படி மேற்கண்ட பூஜைகள் நடைபெறும். கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான விளக்கும், பித்தளையிலான காமதேனு விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்.

**பித்ருக்களின் தோஷ நிவர்த்திக்காக** நடைபெறும் "**தீர்த்த நாராயண**" பூஜையில் கலந்து கொள்ள ரூ.500/- மற்றும் மஹாளய பட்சம் முடிவு புரட்டாசி 6-ம் தேதி (22/09/2025) காசியில் நடைபெறும் அன்னதானத்திற்கு ரூ.1000/- அனுப்புவோருக்கு கங்கா தீர்த்தமும் பூஜையில் பயன்படுத்தப்பட்ட விசேஷமான விஷ்ணு பாதமும் அனுப்பி வைக்கப்படும். பசுக்களின் சிகிச்சை மற்றும் அவரின் மருத்துவ செலவுக்காக ரூ.5,000/- அனுப்புவோருக்கு எல்லாவிதமான தடைகளையும் நீக்கி, வெற்றியை அருளும் பஞ்சமுக விநாயகர் அனுப்பி வைக்கப்படும்.



ஸ்வாமிஜி அவர்கள் செய்து வைக்கும் வலம்புரி சங்கு பூஜை

## குடும்ப சந்தோஷத்தின் திறவுகோலான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும்.

**மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கி சீரும் சிறப்புமாய் வாழவைப்பதும் வலம்புரி சங்கோ!**

சங்கு அதிர்ஷ்டம் தருவது, தைரியம் தருவது, செல்வம் தருவது, மேலும் வாழ்வில் நல்ல துணையை பெறவும், மாணவர்கள் கல்வியறிவு பெருகவும், குழந்தைகளுக்கு வரும் நோய்களை தடுக்கவும், வாஸ்து தோஷம் நீங்கவும், வியாபாரத்தில் யோகம் பெறவும் வலம்புரி சங்கை வழிபடுவீர். இதனால் எல்லா தேவதைகளும் வீட்டில் குடிகொண்டு மஹாலட்சுமி வாசம் செய்வாள். ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.8,800/- அனுப்புவோருக்கு தேக ஆரோக்யம், மன அமைதி மற்றும் சகல நலமும் ஏற்படுத்தும் பித்தளையிலான த்ததாத்ரேயர் விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்.

பசுவின் தீவனத்திற்கும், கோதானத்திற்கும், கோ-சம்ரக்ஷன நிதி நன்கொடையை CHEQUE/DD/MO ஆக SHRI GHOSALA SEVA TRUST, CHENNAI என்ற பெயரில் அல்லது Direct Remittance-ஆக SHRI GHOSALA SEVA TRUST, ICICI BANK, MYLAPORE BRANCH, SB A/C NO: 218601000077, IFSC CODE: ICIC0002186 என்ற வங்கி கணக்கில் அல்லது அருகில் உள்ள QR Code-ஐ ஸ்கேன் செய்தும் தங்களுடைய நன்கொடையை அனுப்பலாம் நன்கொடை அனுப்பும்பொழுது தங்களின் பெயர், முகவரி, தொலைபேசி எண் மற்றும் உங்களுடைய PAN NUMBER-ஐ தெளிவாக குறிப்பிட வேண்டுகிறோம். நன்கொடை அனுப்புவோருக்கு ரசீதும், கோமாதாவின் ஆசீர்வாத பிரசாதங்களும், மேற்கண்ட பொருட்களும் மற்றும் சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில் சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும், புனித கங்கா தீர்ததமும் மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

Scan this QR code using any UPI-enabled mobile app

**நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு**

# பசுமடம் ®

(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)

வயதான, நோயுற்ற, ஊனமுற்ற, கறவை நின்ற, பசுக்களை சுதந்திரமாக பாதுகாத்து பராமிக்கும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை -77

pasumadam.chennai@gmail.com

OFF 8754 555 555

Cell:8754 666 666



ஸ்வாமிஜி தலைமையில் பசுமடத்தில் நடைபெற்ற கோதானம்

**பித்ருதோஷ நிவர்த்திக்கு மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் பித்ருபூஜைக்கு இணை வேறேதுமில்லை**

# உணர்ச்சி மாடலிங் யுக்தி

டாக்டர் சோம வள்ளியப்பன்



சில ஆண்டுகளுக்கு முன்னால் திருச்சியில் ஒரு கோவிலுக்குப் போயிருந்தேன். வாசலில் செருப்புகள் முறையாகவும் வரிசையாகவும் விடப்பட்டிருந்தன. நானும் மெனக்கெட்டு சரியாக வைத்துவிட்டு உள்ளே போனேன்.

உள்இடமும் சுத்தமாக இருந்தது. தவிர, முழு அமைதியாகவும் இருந்தது. உள்ளே இருந்தவர்கள் மற்ற கோவில்களில் செய்வது போல ஒருவரோடு ஒருவர் பேசவில்லை. உள் நுழைந்ததும் மனதில் படுமளவு அமைதியாக இருந்தது.

கோயில் நிர்வாகத்தினர் அனைவரும் அமைதி காக்க வேண்டி அறிவிப்புகள் வைத்திருந்தார்கள். அந்த அறிவிப்புகளை படிக்காதவர்கள் கூட இடம் இருந்த நிலையை உணர்ந்து அவர்களாகவே அமைதியாக நடந்து கொள்வதை கவனித்தேன்.

ஒரு இடத்தின் சூழ்நிலை மக்களுடைய நடத்தையில் மாற்றம் கொண்டு வருகிறது.

நம் ஊர்களில் தயக்கமே இல்லாமல் கண்ட இடத்தில் குப்பை போடும் மக்கள், சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்றால், விமான நிலையம் முதல் மற்ற பொது இடங்களில் இருக்கும் சுத்தத்தைக் கவனத்தில் கொண்டு, அவர்களும் அப்படியே நடந்து கொள்கிறார்கள். குப்பை போட்டால் அபராதம் என்பது ஒரு காரணம் என்றாலும், இயல்பாகவே எல்லாம் சுத்தமாக இருக்கிற இடத்தில் குப்பை போட மனசு வராது என்பதும் இன்னொரு காரணம்.

'உன் நண்பன் யார் என்று சொல். உன்னைப் பற்றி சொல்கிறேன்' என்கிற ஆங்கில பழமொழியும், 'எந்த நபருமே அவருடைய உள் வட்டத்தில் இருக்கிற ஐந்து, ஆறு நண்பர்களின் சராசரி மனோநிலை, ரசனை கொண்டவர்' என்கிற அனுபவமொழியும் அதையே சொல்கின்றன.

நாம் இருக்கிற இடம், உடன் இருப்பவர்கள், அவர்கள் நடந்து கொள்ளும் முறை போன்றவை நம்மிடம் தாக்கம் கொடுக்கும். நம்முடைய நடத்தையை அதற்கு ஏற்ப மாற்றிக் கொள்ள வைக்கும்.

அதிலும் குறிப்பாக, உணர்வுகள் ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு தொற்றிக் கொள்ள வல்லவை. சிலர் சிரிக்க, உடன் இருப்பவரால் சிரிக்காமல் இருக்க முடியாது. ஒரு குழந்தைக்கு செவிலியர் ஊசி போட்டால், அந்தக் குழந்தை மட்டுமல்ல. அடுத்தடுத்து வரிசையில் இருக்கும் மற்ற குழந்தைகளும் அதைப் பார்த்து அழும்.

ஜேம்ஸ் எல். டோசியர் என்பவர் ஒரு ஓய்வு பெற்ற அமெரிக்க இராணுவ அதிகாரி. முன்பு அவர் இத்தாலியின் வெரோனாவில் உள்ள 'நேட்டோ'வின் தெற்கு ஐரோப்பிய தரைப்படை தலைமையகத்தில் துணைத் தலைமைத் தளபதியாக இருந்தார்.

அவரை இத்தாலிய ரெட் பிரிகேட்ஸ் மார்க்சிஸ்ட் பயங்கரவாதக் குழு 1981-ம் ஆண்டு, டிசம்பர் மாதம், கடத்திக் கொண்டு போய் விட்டது. 42 நாட்களுக்குப் பிறகுதான் உளவுத்துறை ஆதரவு நடவடிக்கையின் - ஆபரேஷன் வின்டர் ஹார்வெஸ்ட்டின்' உதவியுடன், இத்தாலிய சிறப்புப் படையான NOCS அவரை மீட்டது. அதுவரை அவர், அவரை சிறைபிடித்தவர்களுடந்தான் இருந்தார்.

அவர் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் சூழ்நிலை மற்றும் சுற்றியுள்ளவர்களின் நடவடிக்கைகள் எப்படி மற்றவர்களையும் பாதிக்கும் என்பது குறித்து அவரது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்.

நேட்டோ (Nato) என்கிற மிக வலிமையான ராணுவ அமைப்பின் ஒரு உதவி தளபதியை சிறை பிடிப்பது என்பது மிக அரிதான செயல். 'நேட்டோ'வை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு தீவிரவாத குழுவால் அதை செய்ய முடிந்ததும், அதை சாதித்த குழுவினரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவரை சிறை பிடித்து இழுத்துச் சென்ற போது அந்தக் கூட்டத்தில் இருக்கிற தீவிரவாதிகளில் பலர், அந்த வெற்றியை கொண்டாடும் மனநிலையில்



## கல்வி உதவித் தொகை

இளங்கலை வகுப்பு படிக்கும் நகரத்தார் மாணவ, மாணவிகள், நாட்டுக்கோட்டை நகரத்தார் அமைப்பு, அபுதாபி வழங்கும் கல்வி உதவித் தொகை பெற விரும்புவோர் கீழ்க்காணும் இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். www.nnaeducation.com விண்ணப்பிக்க நாள் 20.07.2025 முதல் 10.09.2025 வரை. மேலும் தகவல்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் education.nna@gmail.com


இருந்திருக்கிறார்கள். குதித்துக் கொண்டும், கத்திக் கொண்டும், ஆர்ப்பாட்டம் செய்து கொண்டும் அவரை அழைத்துச் சென்றிருக்கிறார்கள்.

அவரை கேலி செய்கிறார்கள். கொக்கரிக்கிறார்கள். துப்பாக்கியை காட்டி மிரட்டுகிறார்கள். விளையாட்டாக சுடுவது போல நடிக்கிறார்கள்.

அவர்கள், அவர்களது கட்டுப்பாட்டில் இல்லை என்பது அவருக்கு புரிந்து விட்டது. அப்படிப்பட்ட ஒரு தறிகெட்ட மனநிலையில் அவர்கள் தவறுதலாக ஏதேனும் செய்து, அதனால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அவர் நினைத்தார்.

ஆனால், அவரால் அவர்களை என்ன செய்ய முடியும்? அவர் தனியாக மாட்டிக் கொண்ட, ஆயுதங்களை பறி கொடுத்த, அதிக எண்ணிக்கையில் ஆயுதங்களோடு இருக்கிற குழுவினர் மத்தியில் இருக்கிறார்.

என்ன செய்யலாம் என்று நிதானமாக யோசித்திருக்கிறார். அப்போது, முன்பு ஒருமுறை வட கரோலினா மாகாணத்தில், ‘கிரியேட்டிவ் லீடர்ஷிப் மையம்’ என்கிற ஒரு பயிற்சி மையத்தில், உணர்வுகள் குறித்து சொல்லப்பட்ட ஒரு விடயம் அவருக்கு நினைவுக்கு வருகிறது.

அந்தத் தகவல், *‘உணர்ச்சிகள் தொற்றக் கூடியவை, மேலும் ஒரு தனி நபர், அவரது ‘மாடலிங்’ மூலம், அவர் இருக்கும் ஒரு குழுவின் உணர்ச்சித் தொனியை பாதிக்க முடியும்’* என்பது.

மாடலிங் என்றால், செய்து காட்டுவது, நடந்து கொள்வது. தான் ஒரு குறிப்பிட்ட விதமாக நடந்து கொள்வதன் மூலம், தன்னைச் சுற்றி இருப்பவர்களையும் அதே உணர்வு நிலைக்கு கொண்டு போய், அதேபோல நடக்க வைப்பது.

இது சாத்தியம் என்று அவர் அங்கே கற்றிருக்கிறார். கற்றுக் கொண்டதை செயல்படுத்திப் பார்க்க முடிவு செய்கிறார். அதற்காக அவர் செய்ய வேண்டியது, அவருடைய உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டு, சிறிதும் விளையாட்டு மனநிலை அல்லது அவர்களை மன ரசிக்கிற மனநிலையை காட்டாமல் அமைதியாக, இறுக்கமாக தொடர்ந்து கட்டுப்பாடாக இருப்பது.

அவர்கள் என்ன செய்தாலும் அவர் தொடர்ந்து அப்படியே இருக்கப் போய், வேறு வழி இன்றி அவர்களும் அவரிடம் அதே போல நடந்து கொள்ள ஆரம்பிப்பார்கள் என்பதுதான் அவருடைய எதிர்பார்ப்பு.

எதிரியிடம் மாட்டிக் கொண்டு விட்ட ஆபத்தான சூழ்நிலையில் அவர்களுடைய விளையாட்டு, கேலி மற்றும் கொக்கரிப்புகளுக்கு இடையே, தன் உணர்வுகளை கட்டுப்படுத்தி, அமைதியாக, இறுக்கமாக, உறுதியாக நடந்து கொள்வது சுலபமானதல்ல. சவாலானது.

ஆனால், டோசியர், அதை மிகச் சிறப்பாக செய்ய, அவருக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது போலவே, அவர் எதிர்பார்த்தது போலவே அவரை பிடித்துச் சென்றவர்களின் நடத்தையில் மாற்றம் வந்திருக்கிறது.

அவர்களும் தங்களை அமைதிப்படுத்தத் தொடங்கினர். மேலும், நிதானமாக நடந்து கொள்ளத் தொடங்கினர். அதன் பிறகு பல்வேறு சம்பவங்கள். பிறகு அவர் மீட்கப்பட்டார்.

இந்த நிகழ்வுகளை நினைவு கூர்ந்து அவர் பேசிய போது, காப்பாற்றுபவர்கள் வரும் வரை அவர் உயிரோடு இருந்ததற்கான காரணம், அவருடைய அந்த, ‘உணர்வு குறித்த புரிதலும், அதை சரியாக செயல்படுத்தியதும் தான்’ என்று தெரிவித்தார்.

சில சூழ்நிலைகளில் நம்மைச் சுற்றி உணர்ச்சி பொங்க எவரும் பேசிக் கொண்டிருக்கும் நேரம், நடந்து கொண்டிருக்கின்ற நேரம் அவர்களை நிதானப்படுத்துவதற்கு, இந்த ‘எமோஷன் மாடலிங்’ யுக்தி பயன்படும்.

மாணவர்களுக்கு வகுப்பு எடுக்கும் பள்ளி, கல்லூரி சாலைகளில், அலுவலகங்களில், பொது இடங்களில் என எந்த இடத்திலும் மற்றவருடைய உணர்வுகளை, நடத்தைகளை, அவை குறித்து அவர்களிடம் ஏதும் பேசாமலே நம்மால் மாற்ற முடியும்.

இதை நான் என்னுடைய பயிற்சி வகுப்புகளில் பலருக்கும் என்னுடைய வாசகமாகவே சொல்வது உண்டு.

‘மற்றவர்கள் நம்மை எப்படி நடத்த வேண்டும் என்பதை நாம் தான் தீர்மானிக்கிறோம் நாம் நடத்தையின் மூலமாக’. ♦

*கடந்த ஜூன் 2025 இதழில் வெளிவந்த தமிழறிஞர்கள் விளையும் நிலப்பரப்பு என்ற கட்டுரையில், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் மகிபாலன்பட்டியிலும், தமிழறிஞர் வ.சுப. மாணிக்கனார் மேலைச்சிவபுரியிலும் பிறந்தவர்கள் என்று திருத்தி வாசிக்கவும்.*

சென்ற இதழ் தொடர்ச்சி

# ஏழிளந்தமிழ்



## 3. மூதுரை உரை - செம்மல் வ.சுப.மாணிக்கனார்

### ஆசையாற் பயனில்லை

19. ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி – தோழி
நிதியுங் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்.

அளவற்ற நீர் உடைய கடலுள் ஒரு படியை ஆழ அமுக்கி முகந்தாலும் அது நாலுபடி நீரை மொள்ளாது. அதுபோல, ஒரு பெண்ணுக்கு மிக்க பொருளும், தக்க கணவனும் கிடைத்தாலும், பழவினையின் அளவின்றி மிகுதியாய்த் துய்க்க முடியாது.

### உடன்பிறப்பும் அயலாரும்

20. உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி – உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு.

உடம்புடன் பிறந்த நோயே உடலை அழிப்பது போல, உடன் பிறந்தவர்களே நமக்குத் தீங்கு செய்வதுண்டு. நமக்குத் தொடர்பில்லாத மலையில் தோன்றிய மருந்து நம் நோயைத் தீர்ப்பது போல, நமக்கு அயலவர்களால் நன்மை விளைவதும் உண்டு.

### மனையாளும் மனையும்

21. இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின் – இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

நற்குணமும் நற்செயலும் உடைய மனையாள் வாழும் வீட்டில் எல்லா நன்மையும் நிறைந்திருக்கும். மனைவி இல்லாவிடினும், மனைவி கடுஞ்சொற்களைப் பேசுபவளாக இருப்பினும், அவ்வீடு புலி வாழும் புதருக்கு ஒப்பாகும்.

### அடக்கத்தை இகழாதே

22. எழுதியவா றேகாண் இரங்குமட நெஞ்சே
கருதியவா றாமே கருமம் – கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை.

நல்ல பயனைப் பெறலாம் என்று நினைத்துக் கற்பக மரத்தை அடைந்தோர்க்கு அது கொடிய கசப்புடைய எட்டிக்காயைக் கொடுக்குமாயின் அதற்குக் காரணம் முற்பிறப்பிற் செய்த தீவினையேயாகும். ஆதலால் மனமே, நீ நினைத்தபடி ஒன்றும் நடவாது. ஊழின்படியே நடக்கும்.

### சினத்தில் மூவகை நிலை

23. கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வரே – விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

கோபத்தினால் வேறுபட்ட விடத்துக் கீழ்மக்கள் கல்லின் பிளவைப் போல் மீண்டும் ஒன்று கூடார்; இடையாயர் பொன்னின் பிளவைப் போல் ஒருவர் கூட்டக் கூடுவர். சான்றோர் நீரின் பிளவு போலப் பிரிந்த உடனே தாமே கூடுவர்.

### குணமும் தொடர்பும்

24. நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் – கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

தாமரைப் பூவை அன்னம் சேர்ந்தாற் போலக் கற்றவரைக் கற்றவரே விரும்புவர். இடுகாட்டில் உள்ள பிணத்தைக் காக்கை விரும்புவது போலக் கல்வியில்லாத மூடரை மூடரே விரும்புவர்.

# திசையாயிரம் நூல் வெளியீடு

கடந்த மாதம் 19 மற்றும் 20-ஆம் தேதிகளில் மதுரையில் நடைபெற்ற தொல்லியல் கழகத்தின் 33-வது ஆண்டு கருத்தரங்கில் கல்வெட்டு அறிஞர் முனைவர் சு.இராசகோபால் அவர்களின் பவள விழா மலர் ‘திசையாயிரம்’ அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களால் வெளியிடப்பட்டது. சு.இராசகோபால் அவர்கள் தமிழகத்தின் மூத்த கல்வெட்டாய் வாளர்களுள் ஒருவர். தமிழக அரசின் தொல்லியல் துறையில் சுமார் 35 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கல்வெட்டுகள் தொடர்பாக பல நூல்கள் படைத்துள்ளார். சு.இராசகோபால் அவர்களின் தந்தையார் ஆத்தங்குடி பெ.மு.சுப.சுப்பையா செட்டியார் தீவிர தேசபக்தர், கம்பனடிப்பொடி சா.கணேசன் அவர்களின் நெருங்கிய நண்பர். மகாத்மா காந்தி மீது கொண்ட பற்றால் இறுதி காலம் வரை கம்பனடிப்பொடி போல் மேற்ச்சட்டை அணியாமல் வாழ்ந்து வந்தவர். மூதறிஞர் இராஜாஜியுடன் கொண்ட நட்பால் தன் மகனுக்கு இராசகோபால் எனப் பெயர் சூட்டியுள்ளார். பவள விழா கண்ட சு.இராசகோபால் அவர்களை ‘நமது செட்டிநாடு’ வாசகர்கள் சார்பில் வாழ்த்துகிறது.



**வஞ்சனையுடையார் ஒளிந்து இருப்பர்**

25. நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு – நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

நஞ்சுடைய நாகப்பாம்பு மறைந்து வசிக்கும். அதுபோல நெஞ்சில் வஞ்சனையுடையவர் தம்மை ஒளித்து ஒழுகுவர். நஞ்சில்லாத தண்ணீர்ப் பாம்பு அஞ்சாமல் கிடக்கும். அதுபோல வஞ்சனை இல்லாதவர் வெளிப்படையாக ஒழுகுவர்.

**கற்றோர் சிறப்பு**

26. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் – மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

அரசனுக்கு அவன் நாட்டில் மட்டும் சிறப்பு உண்டு. கற்றோர்க்கு அவர் செல்லும் எல்லா நாடுகளிலும் சிறப்பு உண்டு. ஆதலால் மன்னனினும் கற்றவர்க்கே சிறப்பு மிகுதி.

**நால்வகை எமன்கள்**

27. கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம் – மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

படியாதவர்க்குப் படித்தவரின் உறுதிமொழிகளும், அறநெறியில் நில்லாதவர்க்கு அறமும், வாழைமரத்திற்கு அது ஈன்ற காயும், கணவனுக்கு இல்வாழ்க்கையில் ஒத்துநடவாத மனைவியும் எமன்களாகும்.

**கேட்டிலும் பண்பு கெடாமை**

28. சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா தாதலால் – தந்தம்
தனஞ்சிறிய ராயினும் தார்வேந்தர் கெட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று.

சந்தனக்கட்டை தேய்ந்தவிடத்தும் மணத்தில் குறையாது. அதுபோல அரசர் செல்வக்குறைவு நேர்ந்தபோதும் பிறர்க்கு உதவும் குணத்தில் குறையார்.

**நிலையில்லாத வாழ்வு**

29. மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம் – திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகும் அவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

திருமகள் நம்மை வந்தடையும்போது சுற்றமும், செல்வமும், நல்ல உருவமும், உயர்வான குடிப்பிறப்பும் வந்தடையும். அவள் நீங்கிப் போய்விடின் அனைத்தும் நீங்கிவிடும். ஆதலால் அவை நிலையற்றவை.

**துன்பம் செய்வார்க்கும் இன்பம் செய்தல்**

30. சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் – மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

ஒருவன் தன்னை வெட்டும்போதும் அவனுக்கு நிழல் தந்து வெயிலை மறைக்கும் மரம். அதுபோல அறிவுடையோர் தமக்குத் தீங்கு செய்பவர்க்கும் தம்மாலான உதவியைச் செய்வர். (தொடரும்)



தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)



# இராம காவியம்

## அங்கதன் தூது போதல் - (21)

வானர வீரர்கள் வரிசையாய் நிற்க
சுக்ரீவன் அனுமன் வீடணன் அங்கதன்
நால்வரும் ராமனை நயமுடன் நோக்க
ராமன் தன்னுடன் ஜாம்பவான் இருக்க
போரின் முறைகள் முழுதும் சொன்னார்
தூதனை அனுப்புதல் அவசியம் என்றார்
அங்கதன் நன்கு அறிமுக மானவன்
ராவணன் மித்ரன் வாலியின் மைந்தன்
அனுமனுக் கொத்த அடுத்தவன் இவனென
அனைவரும் அறிவது அவசியம் என்றார்
ராமனை வணங்கி ஆசியும் பெற்று
கோமகன் மைந்தன் குரங்கின ராஜன்
அனுமனை வணங்கி அவர்தம் வழியில்
இலங்கையை நோக்கி விண்ணில் பறந்தான்
அரண்மனை வாசலில் அவனின் வருகையை
மன்னவர் அறிய எடுத்துச் சொன்னான்
இலங்கை வேந்தன் இருக்கையில் நிமிர்ந்தான்
வலக்கை போன்ற வாலியின் மைந்தனை
தூதனாய் மதித்து வந்தவனை வரவேற்றான்
தந்தையை கொன்ற தசரத ராமன்
உனக்கு நல் உறவோ உற்றவனோ
அவனின் தூதாய் அவைக்கு வந்தனையே
என்னுடன் வா உந்தன் அரசை
உனக்கு பற்றி தருவேன் என்றான்.
தூதனாய் வந்தேன் செய்தியை சொல்வேன்
கேட்டு நடந்தால் கிடைப்பது லாபம்
அடுத்தவர் மனைவியை நினைப்பதே பாவம்
அன்னையை விடுவாய் அண்ணலை பணிவாய்
இதுவே முடிவு இன்னலை போக்கும்
அதுவே காக்கும் அனைவரை என்றான்
அறிவுரை கூறவோ அவைக்கு வந்தனை
பிடியுங்கள் இவனை பிணைக் கைதியாய்
ராவணன் ஆணைநடைபெறும் முன்னே
தாவிப் பறந்தனன், விண்ணிலே விரைந்தனன்
ராமனை பணிந்து நடந்ததைச் சொன்னான் (தொடரும்)



# குறள் பாட்டு

குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் - 44 (குற்றம் கடிதல்)

431) செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமிதம் நீர்த்து.
செருக்கில் லாதவன் சினமில் லாதவன்
சிறுமை குணமோ சிறிதுமில் லாதவன்
பெருஞ்செல் வம்தனைப் பெற்றிடும் வேளையில்
பெரிதும் மதிப்பர் இவனைச் சான்றோர்
தான்எனும் அகந்தையைத் தட்டி அடக்கி
தணிந்து பணிவுடன் பழகிடும் பண்பால்
வான்அள வாய்ப்பணம் வாய்த்திடும் வேளையில்
வாழ்த்துவர் அவனை போற்றிப் புகழுவார்.

433) தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.
பழிச்சொல் வருமென வெட்கப் படுபவர்
பதைபதைத் திடுவார் மிகச்சிறு பழிக்கும்
பழிமிகச் சிறிது தினைத்துணை யாயினும்
பனையள வாகப் பழிக்கு அஞ்சுவார்
பழிச்சொல் வராத பாதையில் வாழ்பவர்
பழியை விலக்கிப் பண்பைப் பேணுவார்
பழிசிறி தாயினும் பனையள வாயினும்
பழிபழி தானே பழியை விரட்டுவோம்.

435) வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.
வைக்கோல் போர்முன் நெருப்பை வளர்ப்பதோ
வைக்கோல் எரிந்து சாம்பலா காதா
வாழ்க்கையில் யார்க்கும் சோதனை வரலாம்
வருமுன் காத்திடும் வழிகளைப் பழகு
எரிந்து முடிந்தபின் எதுவுமிங் சாது
எரிய விடாமல் எப்படிக் காக்கலாம்
தெரியும் வழிகளை சிந்தித்து அறிக
தெளிந்த அறிவினால் வருமுன் காக்கலாம்.

436) தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.
தன்குற்றம் வாராமல் தடுத்தாட் கொள்பவன்
தயவுடன் பிறர்குற்றம் நேராமல் தடுப்பவன்
முன்னின்று காத்திடும் அரசனின் ஆட்சிக்கு
மூளாது எவ்வகைப் பழிச்சொல்லும் இஃதுஇயல்பு
தன்குற்றம் பிறர்குற்றம் எவர்குற்றம் ஆனாலும்
தடுக்கின்ற செங்கோலன் தன்னாட்சி தனில்எவர்க்கும்
என்குற்றம் நேர்ந்துவிடும் எவருக்கும் துன்பமில்லை
என்பதுதான் நீதிநெறி தவறாத நல்லாட்சி.

பற்றில் இரு வகை உண்டு. ஒன்று 'உலகப்பற்று', மற்றொன்று 'இறைப்பற்று'.

உலகப்பற்றை அறவே நீக்கி இறையைப் பற்ற வேண்டும். அதுதான் நிறைவு. ஆக, நாம் பற்ற வேண்டியது இறைவனையே! உலகை, உலகப் பொருள்களை அல்ல!

மாறாக, இன்று நாம் உலகப் பொருள்களையே பற்றி வாழ்கிறோம்! அவை 'கல்வி, பணம், பொருள், புகழ், பதவி, உறவு!'

இருப்பினும், இவற்றையும் 'இறைவனே கூட்டுவிக்கிறான்!'

ஏன்..?

# திருமந்திரச் சுவை - 49

## பற்று



பூங்குன்றம் இராமசாமி

நம் முன்வினை தீர!

இவ்வழியில், உயிர்கள் தங்கள் முன்வினையை அனுபவித்துக் கழித்து, பின், 'தன்னை வந்து அடைய' இறை கூட்டுவிக்கும் நாடகமே இவ் உலகப்பற்று.

இதனை விளக்குகிறது பின்வரும் நிகழ்வு. அஃதாவது, நம் அனைவருக்கும் 'தெரிந்த' ஆனால் 'புரியாப் புதிர்தான்' இவ் விளக்கம்!

ஒரு தாய் பிள்ளையைப் பெறுகிறாள்.

அஃதாவது, அவளது வினையையும், மற்றோர் உயிரது வினையையும் இணைத்து, இருவரும் 'அனுபவித்துக் கழிக்க', அவ் உயிரைக் கருவென அவளிடத்துப் பொருத்துகிறான் இறைவன். அவ்வளவே... !

ஆனால், அது புரியாது அந்தத் தாயோ தன் வயிற்றில் வளரும் அக் குழந்தையைத் 'தன்னுடையது' என்று பாசமழை பொழிந்து, பேணிப் பாடுபட்டு வளர்க்கிறாள்!'

'தன் உயிர் வேறு; அவ் உயிர் வேறு' என்பதை இறுதிவரை அவள் உணர்வதே இல்லை! இதுதான் உண்மை!

இதற்குக் காரணம் 'பாசம் என்னும் பற்றே! உலகியற் பற்றே!'

அதுபோன்று அனைத்தும், நமதல்லாப் பணம், பொருளைப் பேணிப் பாதுகாத்து, அவற்றின் மீது பாசமழை பொழிகிறோம். இவ்விதம், நாம் நம் வாழ்நாளை வீண் நாள் ஆக்குகிறோம்!

இதனைத் திருமூலர் வாக்காகக் காணலாம்.
இன்பப் பிறவி படைத்த இறைவனும்
துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்
என்பிற் கொளுவி இசைந்துறு தோல்தசை
முன்பிற் கொளுவி முடிகுவ தாமே (10.432)

முக்தி இன்பம் பெறுதற்காகவே பிறவியைத் தந்துள்ளான் இறைவன். ஆயினும், (வினை - கழிய) துன்பந் தருகின்ற பந்தத் (பாசம்) துயருள் உயிரை அடைத்துள்ளான் அவன்.

அவ்வழியில், வலிமை பொருந்திய எலும்பு, தோல், தசையோடு அவ் உயிரை ஆழ்த்தி, அதனைத் தூய்மைப்படுத்தித் தனதாக்கிக் கொள்கிறான் அவன்.

கொளுவி: சேர்த்து, பொருத்தி. இதனைப் 'பாசமாம் பற்றறுத்து' (8.1:64) என்கிறார் மாணிக்கவாசகர்.

# அமெரிக்காவில் 46 காப்புரிமைகளுடன் ஸ்டார்ட் அப் தொழில் செய்து வரும்

# பூலாங்குறிச்சி - சுப்பு மெய்யப்பன்



தமிழ்ச் செம்மல்
முனைவர் சே.குமரப்பன்



**அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோவில் 46 காப்புரிமைகளுடன் ஸ்டார்ட் அப் தொழில் செய்து வரும் பூலாங்குறிச்சி - சுப்பு மெய்யப்பன் அவர்களுடன் தமிழ்ச்செம்மல் முனைவர் சே.குமரப்பன் அவர்களின் நேர்காணல்.**

**உங்களது ஊர் குடும்பம் பற்றி....**

எனது சொந்த ஊர் பூலாங்குறிச்சி. எங்களது கோவில் சூரக்குடி. எனது பெற்றோர் மெய்யப்ப செட்டியார் - வள்ளியம்மை ஆச்சி. எனது பெற்றோர் வைத்தீஸ்வரன் கோவிலில் வெகு நாட்களாக தனவணிகம் செய்து வருகின்றனர்.

**உங்கள் கல்வி பற்றி...**

நான் தொடக்கநிலைக் கல்வி, பள்ளிப் படிப்பு மற்றும் பொறியியல் படிப்பு அனைத்தையும் இந்தியாவில் முடித்தேன். மேற்படிப்பிற்காக அமெரிக்கா வந்து டென்னஸி டெக்னாலஜி யுனிவர்சிட்டி எனப்படும் டென்னஸி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில், எம்எஸ்.எலக்ட்ரிகல் இன்ஜினியரிங் படித்தேன். பின்னர் அரிஸோனாவில் உள்ள ஒருமென் பொருள் கம்பெனியில் நான்காண்டுகள் சிலிக்கான் பயன்பாடு குறித்து பணியாற்றினேன். பின்னர் கலிபோர்னியாவில் ஸ்டேன்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றேன்.

**உங்களது ஸ்டார்ட்அப் தொழில் பற்றி...**

நான் பணிபுரிந்து கொண்டிருந்த பொழுதே ஒரு புதிய நிறுவனத்தை சொந்தமாக நிறுவ வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதற்கான வாய்ப்புக்காக காத்திருந்தேன். படிப்படியாக கற்று ஏர் கோ நிறுவனத்தில் சேர்ந்து தொழில் முறைகளை கற்றுக்கொண்டு, பிறகு நண்பர்களுடன் சேர்ந்து நெக்ஸ்ட்னாவ் (NextNav) என்னும் ஸ்டார்ட் அப் நிறுவனத்தை தொடங்கினேன். இந்த நிறுவனத்தை நடத்துவதற்கு நான் ஆய்வு செய்து பெற்ற காப்புரிமைகள் மிகவும் உதவின. நான் தலைமை வகிக்கும் தற்போதைய ஸ்டார்ட் அப் நிறுவனத்தின் பெயர் ஈசி சைட் (ECSite, www.ecsite.ai). இதனை நான் 2019-ம் ஆண்டு துவங்கினேன்.

**நீங்கள் எத்தனை காப்புரிமை பெற்றுள்ளீர்கள்?**

நான் அமெரிக்காவில் 46 காப்புரிமைகள் ஐ.சி.இ, ஜி.பி.எஸ் மற்றும் செல் டவர் தொடர்பாக ஆய்வு செய்து எனது 46 கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை செய்துள்ளேன்.

**இவ்வளவு காப்புரிமை பெற்றுள்ளீர்களே? உங்களுக்குச் சிரமமாக இல்லையா?**

நான் ஒரே சமயத்தில் பெறவில்லை. தொடர்ந்து ஆய்வு செய்து படிப்படியாக ஒவ்வொரு காப்புரிமையாகப் பெற்றேன்.

**அமெரிக்காவில் எவ்வாறு காப்புரிமை பெறுவது? அதற்கான வழிமுறைகள் என்ன?**

அமெரிக்காவில் காப்புரிமை பெறுவதற்கு இரண்டு ஆண்டுகளாகும். ஒரு காப்புரிமை பெற 25 - 30 ஆயிரம் டாலர் வரை செலவாகும். முதலில் நாம் ஆய்வு சம்பந்தமான பேப்பரை உரிய நிறுவனத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். பின்னர் ஒரு சட்ட நிபுணரை அணுகி சில நடைமுறைகளைக் கையாண்டு பின் காப்புரிமையைப் பெற வேண்டும். சட்ட நிபுணர் மூலம் செயலாற்ற பணம் அதிகம் செலவாகும்.

**இந்த காப்புரிமை அமெரிக்காவில் மட்டும்தான் செல்லுமா?**

இல்லை. காப்புரிமை சம்பந்தமாக சில நாடுகளிடையே ஒரு ஒப்பந்தம் உள்ளது. அந்த ஒப்பந்தத்தின்படி இந்த

காப்புரிமை இந்தியா, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் பல ஆசிய நாடுகளில் செல்லும். ஆனால், ஒவ்வொரு நாட்டிலும் பதிவு செய்ய அந்த நாட்டிற்கு உரிய கட்டணத்தை செலுத்த வேண்டும்.

**நீங்கள் தொடங்கிய ஸ்டார்ட் அப் தொழில் எந்தத் துறையைச் சார்ந்தது?**

இப்பொழுது செல்போன் பயன்பாடு மிக அதிகரித்துள்ளது. இவற்றிற்கான. மின்னலை வசதியை வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நிறைய செல்போன் கோபுரங்களை பல நிறுவனங்கள் அமைத்து வருகின்றனர். ஒவ்வொரு நிறுவனமும் பல்லாயிரக்கணக்கில் செல்போன் தூண்களை, செல்போன் கோபுரங்களை நிறுவி வாடிக்கையாளருக்குச் சேவை செய்து வருகின்றனர். இந்த செல்போன் கோபுரங்களை பராமரிப்பது என்பது மிகப்பெரிய பணி. நான் தொடங்கியுள்ள நிறுவனம் இந்த பணியை செயற்கை நுண்ணறிவு மென் பொருள் மூலம் எளிதாகச் செய்கிறது. நான் பெற்ற காப்புரிமை மற்றும் கண்டுபிடிப்புகள் இந்த செல்போன் கோபுரங்களின் பராமரிப்பு பணிகளைச் செய்ய மிகவும் உதவியாக உள்ளது. இதனை செல்போன் டவர் வைத்திருக்கும் நிறுவனங்களிடம் சென்று அவர்களிடம் விளக்கி அதன் மூலம் செல்போன் கோபுரங்களை பராமரிப்பதற்கான ஒப்பந்தங்களை பெற்று வருகிறோம்.

**உங்கள் அலுவலகங்கள் எங்கெங்கு உள்ளன?**

எனது நிறுவனத்தின் தலைமை அலுவலகம் கலிபோர்னியாவில் சான் ஹோஸே எனும் பகுதியில் உள்ளது. இதனுடைய கிளைகள் அமெரிக்காவில் டல்லாஸ், அட்லாண்டா, நார்த் கரோலினா, சார்லட், பாஸ்டன் ஆகிய ஊர்களில் உள்ளன. இந்தியாவில் சென்னையில் ஒரு கிளை நிறுவனம் உள்ளது.

**உங்கள் நிறுவனத்தின் பணி எவ்வாறு உள்ளது?**

பணியை மேற்கொள்ள பல்வேறு நிறுவனங்களிடையே போட்டிகள் உள்ளன. நாங்கள், எங்கள் நிறுவனத்தின் சிறப்புகளை கூறி பராமரிப்பு பணிகளுக்கான பணி ஆணைகளைப் பெற்று செயல்படுத்தி வருகிறோம்.

**போட்டி நிறைய இருக்கிறது என்றால் வாடிக்கையாளரிடம் நிறுவனங்களில் இருந்து ஆர்டர் பெறுவது சிரமமாக இல்லையா?**

சிரமம் தான். இருந்தாலும் நாம் முயற்சி மேற்கொண்டால் நம்மால் பெற முடியும். அதன் அடிப்படையில் தான் நான் பல்வேறு நிறுவனங்களுக்குச் சென்று அந்த நிறுவனத்தில் உள்ள மேலதிகாரிகளைப் பார்த்து என்னுடைய ஆய்வு மற்றும் நிறுவனத்தின் பணி ஆகியவற்றை விளக்கி ஆர்டரை பெற்று வருகிறேன். நாளுக்கு நாள் எங்களது நிறுவனம் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து ஆர்டரை பெற்று வளர்ந்து வருகிறது.

**இந்தியாவில் தொழில் தொடங்கி நடத்துவதிலும், அமெரிக்காவில் தொழில் தொடங்கி நடத்துவதிலும் உங்களது அனுபவம் என்ன?**

அமெரிக்காவில் தொழில் தொடங்குவது இந்தியாவுடன் ஒப்பிடும் போது மிகவும் எளிமையானதாகவும், ஊக்கமளிப்பதாகவும் உள்ளது. இங்கே அரசாங்க அமைப்புகள் தொழில் முனைவோரை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆன்லைன் மூலமாக நிறுவனம் பதிவு செய்வது, வரி எண் பெறுவது, வங்கிக் கணக்கு திறப்பது போன்ற அடிப்படை செயல்முறைகள் வெறும் சில நாட்களில் முடிந்து விடுகின்றன. மேலும் இங்குள்ள வணிக சூழல் புதுமைகளை வரவேற்கும் மனோபாவம் கொண்டது. முதலீட்டாளர்கள் புதிய யோசனைகளுக்கு திறந்த மனதுடன் செவி சாய்க்கின்றனர். தொழில்நுட்ப ஆதரவு, சட்ட ஆலோசனை மற்றும் வணிக வளர்ச்சிக்கான வழிமுறைகள் எளிதில் கிடைக்கின்றன. இந்தச் சூழல் ஒரு தொழில்முனைவோருக்கு தனது கனவுகளை நனவாக்க உகந்த மண்ணாக அமைகிறது.

இந்தியாவில் ஆன்லைன் நடைமுறை முழு அளவில் இல்லை. அமெரிக்காவில் உள்ளது போல் இருந்தால் நல்லது. செலவு மற்றும் சம்பளங்கள் குறைவு. சட்ட திட்டங்களை முழுமையாக நாம் பின்பற்ற நினைத்தாலும் பின்பற்றுவதில் சிரமம் உள்ளது.

**உங்கள் நிறுவனத்தில் அலுவலர்களின் செயல்பாடு பற்றி?**

எங்கள் நிறுவனத்தில் பலர் செல்போன் துறையில் அனுபவம் பெற்றவர்கள். எங்களது நிறுவனத்தில் புதிதாக படித்து முடித்த இளைஞர்களை நியமித்து அவர்களுக்கு எவ்வாறு ஆர்டர் பெறுவது? எவ்வாறு தொழில் நிறுவனங்களையும் உயர் அதிகாரிகளையும் அணுகுவது? எவ்வாறு பணிகளைச் செய்வது? எவ்வாறு செல்போன் கோபுரங்களை பராமரிப்பது என்பதை மென்பொருள் மூலமாக விளக்கிக் கூறி, பயிற்சி அளித்து பணியாற்ற செய்து வருகிறோம். எங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பங்குகள் வழங்கப்படுகின்றன. இதனால் அவர்கள் ஆர்வத்தோடு பணியாற்றுகின்றனர். மேலும், இது ஒரு கூட்டுச் செயல்பாடு ஆகும். அதன் அடிப்படையில் நிறுவனத்தில் பணிபுரியக் கூடிய பலரும் ஒருங்கிணைந்த ஒரு குழுவாகச் செயல்பட்டு வருகின்றனர்.

**இந்த நிறுவனத்தில் உங்கள் குடும்பத்தினர் பங்கு பற்றி...**

எனது மனைவி ஜெயந்தி. பட்டமங்கலத்தில் பிறந்தவர். பி.இ. பொறியியல் பட்டதாரி. அவரும் என்னுடன் இணைந்து இந்த நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். அவரது பெற்றோர் அடைக்கலம் செட்டியார் – நாகம்மை ஆச்சி.

**உங்கள் எதிர்காலத் திட்டம் பற்றி....**

இந்த நிறுவனத்தின் பணியை விரிவுபடுத்த வேண்டும். இன்னும் பல நகரங்களில், ஊர்களில் கிளைகளை உருவாக்க வேண்டும். பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டு வருகிறோம்.

**புதிதாக தொழில் தொடங்க உள்ள இளைஞர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்.**

போட்டிகள் அதிகம் என்றாலும் முயன்றால் வெற்றி பெறலாம். பல இளைஞர்கள் நிறுவனங்களில் வேலை பார்த்து ஊதியம் பெறுவது போதும் என்று நினைக்கின்றனர். சொந்தமாகத் தொழில் செய்ய வேண்டும் என்று முனைப்போடு அதற்கான முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் குறைவு. தொழில்

தொடங்கினால் ரிஸ்க் எடுக்க வேண்டும். வேலை பார்த்தால் ரிஸ்க் இல்லை. நிம்மதியாக மகிழ்ச்சியாக இருக்கலாம் என நினைக்கின்றனர். சொந்தமாகத் தொழிலில் ஈடுபட்டவர்கள் ஒரு சிலர் தோல்வியை தழுவுவதைக் கண்டு அச்சப்படுகின்றனர். ஆனால், அதிகம் பேர் வெற்றி பெற்றுள்ளனர். அவர்களை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும். எனவே, முயன்றால் முடியாதது எதுவும் இல்லை. வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. அதற்கான துறையைத் தேர்வு செய்து கடின உழைப்பும் விடாமுயற்சியும் இருந்தால் புதிய தொழில் தொடங்கி வெற்றி பெறலாம்.

நம் முன்னோர்கள் பலர் வேலைக்கு செல்லவில்லை. முதலாளியாக இருந்து பிறருக்கு வேலை வாய்ப்பு கொடுத்தார்கள். ஆட்களை வைத்திருந்தார்கள். சிறுவயதில் இருந்தே தொழில் பழகி முதலாளி ஆனார்கள். இதைப் போல் இக்கால இளைஞர்களும் வேலையைப் பழகிக் கொண்டு வேலை அளிப்பவர்களாக வளர வேண்டுமே தவிர, வேலை பார்ப்பவர்களாக மட்டுமே இருக்கக் கூடாது என்பது எனது எண்ணம்.

**குமரப்பன்:** தங்களுடைய கருத்துக்களை பகிர்ந்து கொண்டமைக்கு நன்றி.

**சுப்பு மெய்யப்பன்:** எனது நிறுவனம் பற்றியும், எனது முயற்சி பற்றியும் செட்டிநாடு இதழுக்காக நேர்காணல் நடத்திய தங்களுக்கும் இதனை வெளியிட உள்ள "நமது செட்டிநாடு" இதழுக்கும் நன்றி. ■

# மணி விழா



ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்சி உரிமையாளர் திரு.பழனியப்ப செட்டியார் – திருமதி வள்ளிக்கண்ணு ஆச்சி அவர்களின் மணிவிழா 13.07.2025 அன்று ராங்கியத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. சாலமன் பாப்பையா தலைமையில் பட்டிமன்றம் மற்றும் நகரத்தார் பிரமுகர்கள் கலந்து கொண்ட வாழ்த்தரங்கம் நடைபெற்றது. திரளாக உறவினர்கள், நண்பர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு மணிவிழா தம்பதியரை வாழ்த்தினர். மணிவிழா தம்பதியரை நமது செட்டிநாடு வாழ்த்தி மகிழ்கிறது.

# சாதனை புத்தகத்திலும்...




சில மாதங்களுக்கு முன்னர் நம் இதழில், கயிலாய வாத்திய இசைக்குழு நடத்தும் மாணவி பிருந்தாவின் பேட்டி வெளிவந்திருந்தது. அவருக்குச் சென்ற மாதம் சர்வதேச தமிழ் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. மேலும், இளம் வயதில் சிவ வாத்தியக் குழு நடத்தி 100-க்கு மேற்பட்ட கோயில்களில் வாசித்துள்ளதாலும், முதல்முறையாக காசி விஸ்வநாதர் கோயிலில் சிவ வாத்திய நிகழ்ச்சி நடத்திய பெருமை பெற்றதாலும், UNIVERSAL ACHIEVERS BOOK OF RECORDS மற்றும் FUTURE KALAMS BOOK OF RECORDS ஆகிய அமைப்புகளின் உலக சாதனைப் புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளார்.

# கரையேரமுடியாத கப்பல்

அரியக்குடி " ஸ்ரீ" – சபாரத்தினம்
(garudasaba@gmail.com)



வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம். கேள்விப்பட்ட பெயர் போல இருக்கிறதா?

நாம் படித்திருப்போம். நேரடியாகப் பாரத்திருக்க வாய்ப்பில்லை. படமாக, திரைப்படமாக பார்த்திருப்போம்.

"வியாபாரம் செய்ய வந்தவர்கள்
அரசியல் செய்தார்கள்
இப்போது
அரசியல் செய்பவர்கள்
வியாபாரம் செய்கிறார்கள்
இரண்டிலும் நஷ்டப்பட்டது
நாம்தானே இந்தியனே"

இது கவிஞர் வைரமுத்துவின் கவிதை. ஆகஸ்டு மாதத்தில் நமக்குக் கொஞ்சம் சுதந்திரத்தைப் பற்றிப் பேச நினைவூட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது தானே.

ஒரு ஆயுள் மட்டுமே கொண்ட மனிதனுக்கு, இரட்டை ஆயுள் தண்டனை தீர்ப்பை வழங்குகிறது ஒரு நீதிமன்றம். அண்ணனின் வழக்கு என்னாகுமோ என்று நீதிமன்றத் தீர்ப்பைக் கேட்க வந்திருந்த தம்பி மீனாட்சி சுந்தரம் பிள்ளை, நீதிமன்ற வளாகத்திலேயே மனம், சித்தம் கலங்கி பிறழ்ந்து புரளுகிறார். அரசை எதிர்த்துப் பேசியதற்கு ஒரு 20 வருட ஆயுள் தண்டனை. சிவா என்கிற சுப்பிரமணிய சிவாவிற்கு தன் வீட்டில் அடைக்கலம் கொடுத்ததற்காக ஒரு 20 வருட ஆயுள் தண்டனை. ஆக 40 வருட கால ஆயுட் தண்டனை.

சீமான் வீட்டுப் பிள்ளைக்கு, சிறைச் சாலை வழங்கியது முரட்டுத் துணியால் கைச்சட்டையும். செந்நிறக் குல்லாவும். வலது காலில் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட வளையம். உணவு உண்ண கையில் ஒரு கலயம். அந்தமான் சிறையில் அதிக எண்ணிக்கையில் கைதிகள் இருப்பதால் கோவைச் சிறையிலடைக்க உத்தரவு.

சிறையில் சணல் நூற்கும் கிழியந்திரம் சுற்ற வேண்டும். கைத்தோல்கள் உரிவதைக் கண்ட சிறையதிகாரி, மாற்றுப் பணியாக மாட்டிற்குப் பதிலாக எண்ணெய் ஆட்டும் செக்கினை இரக்கமின்றி இழுக்க வைத்திருக்கிறான்.

சிறைத் தண்டனையில் தாங்கவொண்ணா துன்பங்களைப் பெற்ற பிரதானப் பிதாமகன் நாமறிந்த அறிஞர், சுதேசி இயக்கத்தின் முன்னோடி, தியாகவேள் வ.உ.சி. அவர்கள் தான். உயர்நீதிமன்றம் குற்றவாளிகளாக அறிவித்த மூவரையும் ஜாமினில் வெளியில் விட உத்திரவிடுகிறது.

வ.உ.சி.–க்கு மட்டுமே பிணை கொடுக்க வணிகர்கள் சிலர் முன் வருகிறார்கள். தான் மட்டும் ஜாமினில் வர மறுக்கிறார் வ.உ.சி. "அப்பீல்" என்கிற வாதத்தை முன்வைக்க லண்டனில் உள்ள "பிரவியூ கவுன்சில்" வரை படியேறி, தண்டனை 6 ஆண்டுகளாக குறைக்கப்படுகிறது. பின்னர் பிள்ளை அவர்களின் நன்னடத்தைகளால் நான்காண்டுகளாக மாற்றப் பெறுகிறது.

இந்த வழக்கின் பின்னணிதான் என்ன?

சுதந்திர ஜோதியை ஏற்ற முனைந்த ஒரு முன்னத்தி ஏர், அந்நியர்களுக்கு எதிரான சுதேசி இயக்கக் குறிக்கோளை கையிலெடுக்கிறது. ஒரு சுதேசிக் கப்பல் நிறுவனத்தை நிறுவத் திட்டம் வகுக்கிறது. பதினைந்து நபர்கள் கொண்ட இயக்குநர் குழு. இதில் வ.உ.சி. செயலாளர். பங்கு ஒன்று ரூ.25 வீதம் நாற்பதாயிரம் பங்குகள். இந்த மூலதனத்தைத் திரட்ட, வ.உ.சி. சென்ற மைல்களின் நீள அகலங்கள் கணக்கிட முடியாதவை. "கப்பலுடன் வருவேன். இல்லையேல் கடலிலேயே விழுந்து மாய்வேன்" என்ற சபதத்தோடு பயணத்தைத் தொடக்கியிருக்கிறார் பிள்ளை. மகன் உலகநாதன் உடல் நலம் குன்றி இறந்தே போனான். மனைவி நிறைமாத கர்ப்பிணி. இந்நிலையில், உறவினர்கள் உடனடியாக ஊருக்கு வரச்சொல்லி வற்புறுத்துகிறார்கள். பதிலுக்கு "இறைவன் துணை நிற்பான்" என்ற ஒரு கடிதம் மட்டுமே பிள்ளையின் பதிலாக வந்தது.

கப்பல்களை விலைக்கு வாங்கும் வரை காத்திருக்கவில்லை. வாடகைக்கு இரண்டு கப்பல்கைள அமர்த்தி, வணிகத்தை தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையில் தொடங்கி இருக்கிறார் பிள்ளை. ஆங்கிலேயர்கள் "நீ தொடங்கியிருக்கும் இந்த நிறுவனம், உன் சுயநலத்திற்காகத்தானே" என்று கேட்டிருக்கிறார்கள். "ஆம், எங்கள் நாட்டை நாங்களே ஆள வேண்டும் என்கிற சுயநலம் தான்" என்று பதிலளித்திருக்கிறார். "கப்பல் சரக்குகளுக்கு மட்டுமா" என்று அடுத்த கேள்வியை கேட்டிருக்கிறார்கள். "பயணிகளுக்கும் தான். நீங்கள் மூட்டை முடிச்சோடு புறப்படுவதென்றால் பயணச் சிலவு இலவசம்" என்ற அடுத்த பதிலை ஆங்கிலேயர்கள் எதிர்பார்க்கவில்லை.

கப்பல்களை வாடகைக்கு கொடுத்த கம்பெனிக்கு தொடர் பயமுறுத்தலைக் கொடுத்து, குத்தகை ஒப்பந்தத்தை ரத்து செய்ய வைக்கிறது பிரிட்டிஷ் நிர்வாகம். மனம் தளராமல் "காலியா", "லாபோ" என்ற இரண்டு கப்பல்களை சொந்தமாக வாங்கி, தூத்துக்குடிக்கு கொணர்ந்து

சேர்த்திருக்கிறார் பிள்ளை. சுதேசிக் கப்பல்களுக்கு மக்களின் ஆதரவு பெருகியதை அடுத்து, பிரிட்டிஷாரின் கப்பலில் பயணிப்பவர்களுக்கு அனுமதி இலவசம் என்கிற அளவிற்கு அறிவித்து அசைத்திருக்கிறது ஆங்கிலேயர்களின் வியாபார யுத்தி. சுதேசிக் கப்பலுக்கு, மக்கள் தரும் ஆதரவு பெருகியதே தவிர குறையவில்லை. இறுதியாக சிதம்பரனாருக்கு ஒரு லட்சம் லஞ்சம் தருவதாகப் பேசி சுதேசி இயக்கத்திலிருந்து விலகச் சொல்லி அழுத்தமும் கொடுத்திருக்கிறார்கள். பிள்ளையின் தீர்க்கமான சிந்தனையின் முன், ஆங்கிலேயர்களின் எந்த முயற்சியும் பலிக்கவில்லை. தந்திரங்கள் ஏதும் செல்லுபடியாகத நிலையில், பிள்ளை மீது வலுவான வழக்கொன்றைத் தொடுத்து, கடுமையான தண்டனை வழங்கி சிறையில் அடைக்க முயற்சிக்கிறது.

சுதேசி இயக்க முனைப்புகளுக்கு முன்னர், தூத்துக்குடியில் நெசவு ஆலையை நடத்தி வந்த கோரல் மில் நிறுவனத் தொழிலாளர்களின் நலனுக்காக ஒரு போராட்டம் நடந்தேறியிருந்தது. மில்லில் பத்து, பன்னிரண்டு வயதுச் சிறுவர்களை பணியில் அமர்த்தியது. காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை. உணவு இடைவேளை கூடக் கொடுக்காது வேலை வாங்கியது. மிகமிகக் குறைந்த ஊதியம். விடுப்பெடுத்தால் சம்பளப் பிடித்தம் என அடுக்கடுக்காய் நடந்த அத்துமீறல்களைத் தட்டிக் கேட்க, வ.உ.சி. அவர்களும், சுப்பிரமணிய சிவாவும் வழிநடத்திய போராட்டம் அது.

வெள்ளமாய் மக்கள் திரண்டிருக்கிறார்கள். சூரைக் காற்றும், பற்றி எரியும் நெருப்புமாக வ.உ.சி.-யும், சிவாவும் பொழிந்த பேச்சுக்கள் பெரும் தாக்கத்தை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக விதைத்திருக்கிறது. தொழிற்சங்கம் பற்றிய அடிப்படை ஞானமில்லாத காலத்தில், வேலைநிறுத்தம் செய்யத் தூண்டி, "வந்தே மாதரம்" என்னும் முழக்கத்துடன் தூத்துக்குடி நகரில் தொழிலாளர்கள் ஊர்வலம் சென்றிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து எட்டு நாட்கள் வேலைநிறுத்தம். இவையனைத்தும் இந்திய அளவில் பேசு பொருளாகிறது. போராட்டக் கோரிக்கைகள் யாவும் நிறைவேறியிருக்கிறது. இதுவே, இந்தியாவின் முதல் பொது அரசியல் வேலை நிறுத்தப் போராட்டம்.

இந்தப் போராட்டங்களின் விளைவுகளை ராஜ துரோகச் செயல்களாக அறிவித்தது பிரிட்டிஷ் அரசு. வ.உ.சி., சுப்பிரமணிய சிவா அவர்களோடு துணை நின்ற பத்மநாப அய்யங்கார் ஆகிய மூவர் மீதும் வழக்குகளாகத் தொடரப்படுகிறது. முன் பகுதியில் சொல்லப்பட்ட நீதிமன்ற தீர்ப்பு இந்த வழக்கிற்குரியதுதான்,

தனது 36-ஆவது வயதில் சிறை புகுந்த சிதம்பரனார் - திருநெல்வேலி, பாளையங்கோட்டை, கடலூர், கோவை-கண்ணனூர் ஆகிய ஊர்களில் சிறைவாசத்திலிருந்திருக்கிறார். சிறைவாசம் முடிந்து விடுதலையாகி பிள்ளை வெளியே வந்த போது - அவரால் தோற்றுவிக்கப் பெற்ற சுதேசிக் கப்பல் கம்பெனி இருக்குமிடம் தெரியாமல் சிதறிப் போயிருந்தது. அதன் பங்குதாரர்கள் அவர்களின் பங்குகளை ஆங்கிலேயக் கம்பெனிக்கே விற்றிருந்தார்கள். வ.உ.சி. போராடி தூத்துக்குடிக்கு வாங்கி வந்த கப்பல்களையும், ஆங்கிலேயக் கம்பெனியே வாங்கியிருந்தது.

அந்நியர் ஆட்சியை அகற்ற, நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுத்தர வேண்டும் என்பதற்காக தன் சொத்தை எல்லாம் சுதேசிக் கப்பலுக்காக இழந்த, வ.உ.சி-யை சிறையிலிருந்து விடுதலை செய்யப் போகும் நாள் வருகிறது. இப்பெரும் தியாகியை வரவேற்க சிறை வாசலில் கூட்டம் அலைமோதும், சட்ட ஒழுங்கு சீரற்றுப் போக வாய்ப்பிருக்கிறது என ஆங்கிலேய அரசு முன்னெச்சரிக்கையாக போலீஸ் பந்தோபஸ்தை பலப்படுத்தியிருக்கிறது. ஆனால், அந்த மகா புருஷரை வரவேற்க அவரது மனைவி, மைத்துனர், பிள்ளைகள் என மிகச் சிலரே வந்திருந்தனர். சற்று தள்ளி உடம்பெல்லாம் போர்வையால் போர்த்தியபடி நின்ற ஒருவர் "பிள்ளைவாழ்" என அழைக்கிறார். பிள்ளைக்கு அடையாளம் தெரியவில்லை. சற்று நொடியில் வ.உ.சி., "சிவா ... சிவா" என அலறிக் கொண்டு கட்டி அணைக்க அருகில் போகிறார். "வேண்டாம் .... வேண்டாம் எனக்குத் தீராத தொழு நோய் .... உங்களுக்கும் வந்து விட வேண்டாம்" என விலகி ஓடுகிறார் சுப்பிரமணிய சிவா..

வ.உ.சி. இதன் பின்னர் 24 ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருக்கிறார். இன்னல்களால் பின்னப்பட்ட வாழ்க்கை. இத்தனை இடிபாடுகளுக்கிடையிலும், நன்றி கெட்ட மனிதர்களுக்கு நன்மை சேர்க்க எத்தனை நூல்களைச் செதுக்கியிருக்கிறார். சிகரம் வைத்தாற்போல திருக்குறள் - அறத்துப் பாலுக்கும், சிவஞானபோதம் நூலுக்கும் உரை எழுதியிருக்கிறார்.

தனது நிறைவு நாட்களில் படுத்த படுக்கையாய் கிடந்த பொழுதிலும், சுத்த சைவரான பிள்ளை அவர்கள், தான் கண் மூடும் தருவாயிலும் திருவாசகம் கேட்கவில்லை. சிவகுரு நாதன் என்கிற காங்கிரஸ் தொண்டரை அழைத்து மகா கவியின் "என்று தணியும் இந்த சுதந்திர தியாகம்" என்ற பாடலைப் பாடச் சொல்லி கேட்டபடியே இந்த உலகை விட்டு விடைபெற்று சென்று இருக்கிறார்.

வ.உ.சி. மறைந்த போது தமிழகப் பத்திரிக்கைகள் ஏதும் அனுதாபத் தலையங்கம் எழுதவில்லை. அவருக்கு ம.பொ.சி. அவர்களின் பெரு முயற்சியில் 1939-ல் ராயப்பேட்டை காங்கிரஸ் மாளிகையில் ஒரு சிலைத் திறப்பு விழா நடந்திருக்கிறது.

கடைசித் தமிழன் இருக்கும் வரைக்கும் கொண்டாடப்பட வேண்டிய, ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் இந்தக் கர்மயோகியை நன்றியோடு நினைவு கூற, இந்தத் தலைமுறையும் அறிந்து கொள்ள - சுதந்திர தினத்தையாவது பயன்படுத்துவோமே....



# நகரத்தார் சிகரத்தார் 117



காரைக்குடி நாராயணன்

ஆச்சியின் வீடு சிறிது நேரம் அமைதியாக இருந்தது. ரத்னசபாபதி நேரடியாக மதுரை விமான நிலையத்திலிருந்து வீட்டிற்கு வராமல் எங்கே போனான்? என்ன செய்தான்? எதற்காக இப்போது வந்தும் வராமல் வாய் திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசாமல் நிற்கிறான் என்று யாருக்குமே புரியவில்லை. செட்டியார் நிலைமையைப் புரிந்து கொள்ளவும், பிரச்சனைகளைத் திசைமாற்றவும் முடிவு செய்து, எல்லோரும் நகரச் சிவன் கோவிலுக்கும், பெருமாள் கோவிலுக்கும் போய் வந்து நடக்கப் போகும் கல்யாணங்களைப் பற்றிப் பேசலாம் என்று கூறினார்.

கோவிலுக்கு எப்போ வேணும்னாலும் போகலாம். நான் குளிச்சிட்டு வர்ரேன். உங்க ரெண்டு பேர்ட்டேயும் நான் நிறையப் பேசணும்.

ரத்னசபாபதி வேகமாக உள்ளே போனான். ஆச்சியும், செட்டியாரும் ஆதங்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ராஜ்மோகன் அங்கு இருப்பதா, போய் விடுவதா என்று மனம் தடுமாறினார்.

பெரியண்ணன் சின்னப்புள்ளை விவரம் புரியாமல், சிவன் கோயில், பெருமாள் கோயில் இரண்டும் ஏன் தனித்தனியாக இருக்கிறது. ஒன்றாக இருந்தால் என்ன என்று கேட்டான். யாரும் பதில் சொல்லாத நிலையில் அவன் திருப்பியும் கேட்கவே, செட்டியார், ரத்னசபாபதி வருவதற்குள் வேகமாகச் சொன்னார்.

பெரியண்ணன், எல்லா ஊர்லேயும் சிவன் கோயில், பெருமாள் கோயில் தனித்தனியாத்தான் இருக்கும் சிவன் கோயில்ன்னா முதலில் வினாயகரைக் கும்பிடணும். பெருமாள் கோயில்ன்னா கருடாழ்வாரைக் கும்பிடணும். முதல்ல கிழக்கு நோக்கி நின்று கொடிமரத்தை வணங்கனும். தீபாராதனையைக் கண்ணுல ஒத்திக்கணும். அது கடவுளுக்கே அர்ப்பணம். கண்களை மூடிக்கிட்டுத் தரிசனம் பண்ணக் கூடாது. எந்தச் சாமி சிலையையும் தொட்டு வணங்கக் கூடாது. மூலவருக்கு அபிஷேகம் நடக்குற போது பிரகாரம் சுற்றக் கூடாது. சனி பகவானை நேருக்கு நேர் நின்று கும்பிடக் கூடாது. கோயில் திருநீறு, குங்குமத்தைக் கைகளால் மாத்தக் கூடாது. கடவுள் முன்னால நின்னு காயத்ரி மந்திரம் சொல்றது ரொம்ப நல்லது. கோயில் பிரசாதத்தைத் தவிர எதையும் வீட்டுக்கு எடுத்துக்கிட்டு வரக்கூடாது.

ராஜ்மோகன் ஒதுங்கி நின்றவர் அவரையும் அறியாமல், “அப்படியா ஏன்” என்று கேட்டுவிட்டார்.

தம்பி. சண்டிகேஸ்வரர்ட்ட ஏன் கை தட்டுறோம் தெரியுமா. தியானத்தில இருக்குற அவர்ட்டே கைதட்டி விபூதியைக் கூட எடுத்துச் செல்லலேங்குறதுதான் அதோட அர்த்தம். சிவன் கோயில்ன்னா காலபைரவரையும், பெருமாள் கோயில்ன்னா சக்கரத்தாழ்வாரையும் வணங்கினால் தோஷங்கள் அணுகாது. முக்கியமா கோயிலுக்குப் போனால் நேரே வீட்டுக்கு வரணும். அப்போத்தான் நமக்கு வர வேண்டிய புண்ணியம் நமக்கு வரும்.

ஆச்சி. ரொம்ப நாளா எனக்கு ஒரு சந்தேகம். ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும்பாங்க. ஆனா, அந்த ஆமை கோயில்லேயே இருக்கே.ஆமை ஒரு அவதாரம். அதைக் காரணமா வச்சு நமக்குள்ள வரக்கூடாதது என்ன தெரியுமா. இல்லாமை, கல்லாமை, பொறாமை, அறியாமை.

ராஜ்மோகன் கை தட்டிப் பாராட்டும் போது ரத்னசபாபதி குளித்து விட்டு வந்து கோபமாகக் கத்தினான்.

இது என்ன தியேட்டரா? வீடா? ஆமை புகுந்த வீடு மட்டுமில்லை. ஜோஸ்யக்காரன் வந்து போற வீடும் அப்படித்தான். எதுக்கு அந்த சோதிடர் வள்ளுவதாசனை இங்கே கூட்டிக்கிட்டு வந்து வம்பு பண்றீங்க. நூறு ரூபாய் கொடுத்தா ஆயிரம் பொய் சொல்லுவாங்க.

ரத்னசபாபதி அப்படி எல்லாம் அவரைக் கேவலமாப் பேசாதே. அவரு சோதிடர் மட்டுமில்லை. ஆயிரம் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லித் தந்த ஆசிரியர்.

செட்டியார் சமாதானம் சொன்னார்.

நான் ஸ்கூல் ஸ்டூடண்டும் இல்லை. அவரு எனக்கு டீச்சரும் இல்லை.

ஆச்சி அவனை மேலே பேச விடாமல் கோபமாகப் பேசினார்.

மாத்ரு நிந்தா மஹாஸ்யாதி
மித்ரு நிந்தா பிசாசத
தைவ நிந்தா தரித்திரயாஸ்து
குரு நிந்தா குலக்ஷயம்

தாயை நிந்தித்தால் கடும் வியாதி. தந்தையை நிந்தித்தால் பிசாசு குணம். தெய்வத்தை நிந்தித்தால் தரித்திரம். குருவை நிந்தித்தால் குலமே அழியும். புரிஞ்சுக்க. இதை மகாப்பெரியவா சொல்லி இருக்கார். கேனப்பய ஊர்ல கிறுக்குப்பய நாட்டாமைன்னு எதையாவது மனசுல வச்சுக்கிட்டு எதையாவது பேசிக்கிட்டிருக்காதே. சீக்கிரம் ட்ரஸ் பண்ணிக்கிட்டு வா. சிவன் கோயில், பெருமாள் கோயிலுக்குப் போய்ட்டு, குலதெய்வம் இலங்குடி ஐயனாரைக் கும்பிட்டு வருவோம், எல்லாம் நல்லபடியா நடக்கணும்னு.

அழகி மக நாச்சா, நாச்சா பெரிய மகன் பெத்தபெருமாள், சின்னவன் செல்லப்பன், காசி, கண்ணப்பன், சேது நாச்சியப்பன், சிவா, சொக்கலிங்கம், பொன்னம்மா, நாகம்மை, விசாலாட்சி எல்லோரும் போய்ட்டு அபிஷேகம், அர்ச்சனை பண்ணிட்டு வரலாம். அப்போத்தான் என் மனசு நிம்மதி அடைஞ்சு மளமளன்னு நடக்க வேண்டிய நல்ல காரியம் நடக்கும்.

எல்லாக் கோயிலுக்கும் ஒரே நாள்ல போக வேண்டிய அவசரம் என்ன.

ரத்னசபாபதி வெறுப்புடன் கேட்டான்.

மழை பெய்யுற போது உப்பு விக்கக் கூடாது. காத்தடிக்குற போது மாவு விக்கக் கூடாது. எதையோ மனசுல வச்சுக்கிட்டு எதையோ பேசாதே.

ஆச்சி குரல் தழுதழுத்தது. இதைப் பார்த்த செட்டியார் ஆச்சியைக் கை காட்டிவிட்டு அவர் பேசினார்.

ரத்னசபாபதி. நீ அயல்நாட்டிலே இருந்ததால நம்ம செட்டிநாட்டோட பெருமை உனக்குத் தெரியலே. நாள் செய்யாததைக் கோள் செய்யும். கோள் செய்யாததைக் குலதெய்வம் செய்யும்.

குலதெய்வத்தை மறக்குறதும் பெத்த தாயைப் பட்டினி போடுறதும் ஒன்னுதான். குருவை மறந்தாக்கூட குலதெய்வத்தை மறக்கக் கூடாது. எமதர்மன் கூடக் குலதெய்வத்தோட அனுமதியில்லேன்னா எந்த உயிரையும் எடுக்கமாட்டான். எதையோ மனசுல வச்சுக்கிட்டு நடக்க வேண்டிய நாலு கல்யாணத்தில பிரச்சனை பண்ணாதே.

ஆச்சி பெருமூச்சு விட்டபடி சொன்னார்.

ஆமாப்பா. BIRTH IS PARENT'S GIFT. EDUCATION IS TEACHER'S GIFT. JOB IS COMPANY'S GIFT. WIFE IS LIFE'S GIFT. நாங்க பாத்திருக்குற ஜானகி ஆச்சி மகள் பரிபூர்ணத்தைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, அவளையும் உன்னோட அமெரிக்காவுக்குக் கூட்டிக்கிட்டுப் போயிப் புள்ளையும் குட்டியுமா நல்லாருங்கப்பா.

ரத்னசபாபதி இதற்கும் பதில் பேசாமல் நின்றான்.

இதபாரு, கல்யாணம்ங்குறது ரயில் பயணம் இல்லை. ஏறுற எடத்தில ஏறி இறங்குற எடத்தில இறங்கிப் போறதுக்கு. ஆயிரம் காலத்துப் பயிரு. தேரோடு போச்சு திருநாள். தாயோடு போச்சு பிறந்த வீடுன்னு. ஒவ்வொரு பொண்ணும் கல்யாணத்துக்கப்புறம் காலமெல்லாம் அவனோட சேந்து வர்ர பயணம். சின்னப் புள்ளைங்க சேந்து விளையாடுற பொம்மைக் கல்யாணம் இல்லை. உன் மனசுல உள்ளதை மறைக்காமச் சொல்லிடு.

சொல்லத்தான் போறேன். என் தாயார் உண்ணாமலை எந்தப் பரம்பரையில பொறந்தவங்கன்னு கேள்விப்பட்டேன். பெருமையா இருந்துது. 1910-ஆம் ஆண்டு ஆங்கில ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த புதுவைக்கு ஸ்ரீ அரவிந்தர் வந்த போது என் முப்பாட்டனார் சங்கரன் செட்டியார் இல்லத்திலதான் அவரு சகாக்களோட தங்கி இருக்காரு. அங்கே அரவிந்தரைப் பார்க்க பாரதியார், சீனுவாச்சாரியார் போன்றவங்கள்லாம் வந்திருக்காங்க.

ஆமா. அது உண்மைதான்.

அந்தச் சங்கரன் செட்டியார் வீட்டுலதானே என் அம்மாவை உங்க தம்பியா இருந்த என் அப்பா பொண்ணு பாத்தாரு.

ஆமா. அந்த வீட்டு ராசிக்காகப் பொண்ணு பாத்தோம்.

அந்த ராசி என் அம்மாவுக்கு ஒர்க்அவுட் ஆகலையே ஏன்?

உன் கல்யாணத்துக்கும் இந்தப் பிரச்சனைக்கும் என்ன சம்பந்தம்?

இருக்கு. ஆனா ஒன்னும் இல்லாது மாதிரிப் பேசுறீங்க. அவன் வேகமாக உள்ளே சென்று அன்றைய செய்தித்தாளைக் கொண்டு வந்து எல்லோரிடமும் படித்துக் காட்டினான்.

நகரத்தார் மாப்பிள்ளை 400 பேர்களுக்கு சைவப் பிள்ளைமார் மணமகள் தேவை. விவரங்களுக்கு நகரத்தார் திருமணத் தகவல் மையம். இப்படி ஒரு விளம்பரம் வரக் காரணம் என்ன?

ஆச்சியும், செட்டியாரும் ஒன்னும் புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அங்கு நின்ற அத்தனை பேர்களும் எந்த விவரமும் புரியாமல் எதிர்பாராத பிரச்சனையில் தவித்தார்கள்.

ரத்னசபாபதி கேட்டான்.

ஆச்சி தயங்கித் தயங்கி அவனைச் சமாதானப்படுத்த நினைத்துப் பேசினார்.

ரத்னசபாபதி, நகரத்தார்கள் குடும்பத்தில இந்தப் பிரச்சனை வெடிச்சுப் பூதாகரமாகிப் பல வருடங்களாக நடந்துக்கிட்டிருக்கு, இதுக்கெல்லாம் முக்கியமான காரணம் கல்யாணம் பண்ணிக்க வேண்டிய பையன்கள் பெண்களை விட அதிகமா இருக்குறாங்க. நகரத்தார்கள் சங்கங்களும், ஏன் கோவிலூர் மடமெல்லாம் கூடப் பேசிப் பேசி ஓய்ஞ்சு போனாங்க. எல்லாத்தையும் விட விவாகரத்துக்கள் விளையாட்டுப் பொம்மைகளாயிடுச்சு. காலம் கடந்து சம்பாதிச்சுக் கல்யாணம் பண்ணிக்குறது. பொண்ணு B.E.-ன்னா மாப்பிள்ளை M.E.-யா இருக்கணும்ங்குறது. பொண்ணு மாசம் லட்ச ரூபாய் சம்பாதிச்சா மாப்பிள்ளை ரெண்டு லட்சம் சம்பாதிக்கணும்ங்குறது. சொந்தமா வீடு இருக்கணும். கல்யாணம் ஆன அடுத்த நாளே பையனோட ஆத்தா பையை எடுத்துக்கிட்டு அவ வீட்டுக்குப் போயிடணும். 23 வயசுல வர வேண்டிய வாழ்க்கையை 30 வயசுக்கும் மேலேயும் தள்ளிக் கொடுத்து நிபந்தனை போடுறது. இந்தக் காரணங்களால தான் திருமணங்கள் விரைவில் நடைபெற தடையாக இருக்குது.

ஒருவேளை நீங்க எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்குற பொண்ணை எனக்குப் புடிக்காம, இல்லே அவளுக்கு என்னைப் புடிக்காம விவாகரத்து ஆயிடுச்சுன்னா...

வாயை மூடு. ஆரம்பமே அபசகுனமாப் பேசாதே. ஆச்சி சத்தம் போட்டுக் கத்தினார்.

சில நொடிகள் அமைதிக்குப் பிறகு செட்டியார் அவனிடம் ஆறுதலாகப் பேசினார். அவர் பேசியதைக் கேட்டு விட்டு ரத்னசபாபதி அமைதியாகப் பேசினான்.

மாமா. பார்ன்சுவாலோங்குற சின்னப் பறவை இனம் இனப்பெருக்கத்துக்காக 8300 கிலோ மீட்டர் கடல் மேல பயணம் செய்யுது தெரியுமா? அர்ஜெண்டினாவிலேருந்து கலிபோர்னியாவுக்கு வந்து போக அது பறக்குற தூரம் 16600 கி.மீ. இந்த இடைவெளியில நிலப்பரப்போ மலைப் பிரதேசமோ கிடையாது. அதோட அலகில சிறு குச்சி ஒன்னைக் கவ்விக்கிட்டுப் பறக்குது. அதுக்கு எப்போ களைப்பு ஏற்படுதோ அப்போ அந்தக் குச்சியைக் கடல் மேல போட்டு அதுமேல நின்னு ஓய்வெடுத்துக்கிட்டு மறுபடியும் பறந்து இரை தேடி வேறொரு நாட்டுல தன் இனத்தை விருத்தி செஞ்சு, மீண்டும் அதோ குஞ்சுகளோட பயணம் செஞ்சு தன் நாட்டுக்கு வர்ர நெருக்கம், பிணைப்பு ஒரு காலத்தில நகரத்தார் பெண்களுக்கும் பெருமையா இருந்துது. அந்தப் பெருமை அருமை எல்லாம் இலை உதிர் காலத்து மரம் போல ஆச்சு. என் கல்யாணத்துக்கு முன்னால சினேகவல்லிக்கு கல்யாணம் ஆனப்புறம்தான் என் கல்யாணம்னு முடிவு பண்ணியிருக்கேன்.

சினேகவல்லியா, யாரது?

எல்லோரும் அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றார்கள்.

(தொடரும்)

சென்ற இதழ் தொடர்ச்சி

சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்





# பக்.. பக்.. பக்கும்

### புகழ் மங்கிய காலம்:

ஆனால் கொஞ்ச நாளிலேயே புறாக்களின் புகழ் மங்கும் காலம் ஒன்று வந்தது. அதுதான் டெலிஃபோனும், ரேடியோவும் உதயமான காலம். இப்போது செய்திகளை அனுப்ப, புறாக்களின் தயவு தேவையில்லை என்ற நிலை உருவாகியது. புறாக்களும் மனிதர்களுக்குத் தேவை இல்லாத சுமைகளாகத் தெரிந்தன. ஆகவே, புறாக்கள் விசுவாசம் கெட்ட மனிதர்களால் அலட்சியப்படுத்தப்பட்டு, விரட்டி அடிக்கப்பட்டன.

வேறு வழி இன்றிப் புறாக்களும் புதிதாக முளைத்திருந்த நகர்ப்புறங்களில் வாழ வழி தேடித் தஞ்சம் அடைந்தன.

### ஒருவனுக்கு ஒருத்தி:

புறாக்களின் வாழ்க்கை முறை உன்னதமானது. நம்மோடு பழகியதாலோ என்னவோ, நம் பண்பாடுகள் சிலவற்றைப் புறாக்கள் கற்றுக் கொண்டு கடைப்பிடிக்கின்றன. ‘ஒருவனுக்கு ஒருத்தி’ என்ற உயர்ந்த பண்பை அவை வாழ்நாள் முழுதும் ஒழுக்கத்துடன் பின்பற்றுகின்றன. நம்மவர்களில் கூடச் சிலர் அதை ஓரம்கட்டி விட்டனர். அதனால்தான் சிலப்பதிகாரக் காவியம் எல்லாம் தோன்றியது என்பதெல்லாம் நமக்கு மட்டும்தான் தெரியும். புறாக்களுக்குத் தெரியாது.



### காதல் அரங்கேற்றம்:

ஓர் ஆண் புறா, பெண் புறா ஒன்றை விரும்பி விட்டால் அதைக் கவர்வதற்காக ஆயிரம் சேட்டைகள் செய்யும். அருகே சென்று ‘பக்கும்..பக்கும்..’ என்று பாட்டுப் பாடி நடனமாடும். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ‘கொண்டை உள்ள புறா’ (Crested pigeon) காதலி முன்னால் நடனமாடும் காட்சியை அருகில் உள்ள புகைப்படத்தில் காணலாம்.

இரு மனம் கலந்து விட்டால் தலையைக் குனிந்து குனிந்து ஒன்று மற்றதன் கழுத்து முடியைக் கோதும். அலகோடு அலகை உரசி விளையாடும்.



### இல்லம் உருவாக்கும் இணை:

காதல் வளர்ந்து இரண்டும் இணக்கமானால், முதல் வேலையாக, இரண்டும் சேர்ந்து தங்களுக்கென்று ஒரு வீடு (கூடு) கட்டிக் கொள்ளும். தூக்கணாங்குருவி மாதிரி அழகான கூடெல்லாம் அவற்றுக்குக் கட்டத் தெரியாது. மரக் குச்சிகளைக் குறுக்கும் நெடுக்குமாக அடுக்கி வைத்துக் கரடு முரடாக ஒரு கூடு, அவ்வளவுதான்.



## நான்கு வண்ணக் காட்சி:

நான்கு வண்ணங்கள் தெரியும் tetrachromatic தன்மையால் புறாக்களின் பார்வை மனிதர்களின் பார்வையை விட விரிவானது. கூர்மையானது. ஒரு பொருளின் சின்னச்சின்ன உருவ அமைப்பையும் தெளிவாகப் பார்க்க முடியும். அதனால் மேலே பறந்து கொண்டிருக்கும் போதே தனக்கான உணவை, சிறு சிறு விதைகளை, பூச்சி, புழுக்களை இனம் கண்டு கொள்ள முடியும்.

## இணை தேடும் பார்வை:

இந்தக் கூர்மையான பார்வைதான் வெகு தூரத்தில் இருக்கும் புறாக்களை இனம் கண்டு தனக்குப் பொருத்தமான வாழ்நாள் இணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்குத் துணைபுரிகிறது. அதுமட்டுமல்ல, "ஓராயிரம் பார்வையிலே உன் பார்வையை நான் அறிவேன்" என்று திருவிழாக் கூட்டத்தில் கூடக் கண்ணோடு கண் பேசிக் கொள்ளும் காதலர்கள் போல, வெகு தொலைவில் இருந்தே தன் இறகுகளில் குறிப்பிட்ட புறஊதா வண்ணங்களைக் காட்டித் தன் இணைப் புறாவைச் சைகையால் அழைக்கும் காட்சி காவியத்தில் அணி செய்யப்பட வேண்டிய மாட்சி.

## வாரிசு உருவாக்கம்:

அந்தக் கூட்டில் இரண்டு முட்டைகள் இட்டுக் கொண்ட பிறகு, அடைகாக்கும் வேலையைக் கூடச் சமமாகப் பகிர்ந்து கொண்டு இரண்டுமே மாற்றி மாற்றி அமர்ந்து அடை காக்கும்.

## பயிர்ப்பால்:

குஞ்சுகள் பொரித்த பின் அவற்றிற்குக் கொடுக்கும் முதல் உணவு புரதச் சத்து மிகுந்த "பயிர்ப் பால் (Crop milk)". இது ஆண், பெண் இரண்டு புறாக்களின் உணவுக் குழாய்களில் சுரக்கும் ஒரு விதமான பால் போன்ற திரவம். கொஞ்ச நாள் கழித்துத்தான் புழு பூச்சிகள், தானியங்கள், விதைகள் போன்ற உணவுகள் ஊட்டப்படும்.

## சமூக உறவு:

நான்கு வார காலத்தில் குஞ்சுகள் பெரிதாகிப் பறக்கத் தொடங்கும். அது மட்டுமல்ல, தங்கள் இனத்தைச் சேர்ந்த மற்ற புறாக்களுடன் பழகி, தன் சமூகத்தில் ஓர் அங்கமாகிவிடும். அதன் பிறகு தந்தைக்கும், தாய்ப் பறவைக்கும் கொண்டாட்டந்தான். மீண்டும் தங்களுக்குள் காதல் வேட்டைதான்.

## இல்லக் கடமைகள்:

இது ஆண் வேலை, இது பெண் வேலை என்று பாகுபாடு பார்க்காமல், இது நம் குடும்ப வேலை என்று இரண்டும் மிகுந்த ஈடுபாட்டோடு செய்வதைக் கவனித்துப் பார்த்தால், நாம் புறாக்களை வணங்கி வாழ்த்துப் பெற வேண்டும் என்பது புரியும்.

## மனிதர்களை மிஞ்சிய பார்வைக் கூர்மை:

மனிதர்களின் கண்களுக்கு மஞ்சள், பச்சை, சிவப்பு என்ற மூன்று அடிப்படை வண்ணங்கள்தான் தெளிவாகத் தெரியும் (trichromats). ஆனால், பொதுவாகப் பறவைகளுக்கும், குறிப்பாகப் புறாக்களுக்கும் மூன்று வண்ணங்களோடு, புற ஊதா வண்ணமும் (ultra violet colour) தெளிவாகத் தெரியும் (tetrachromats). புற ஊதா வண்ணம் நம் கண்களுக்குத் தெரியவே தெரியாது.

## வாழ்க்கையின் தனித்துவம்:

புறாக்களின் சராசரி வாழ்நாள் 35 வருடங்கள். நகர்ப்புறமானாலும், நாட்டுப்புறமானாலும், காடு, மலை என்றாலும், தோட்டந்துரவென்றாலும் சூழலுக்குத் தக்கபடி தங்களை மாற்றிக் கொண்டு நிறைவான வாழ்க்கை வாழ்ந்து முடிப்பதைப் புறாக்கள் தங்கள் வாழ்நாள் கொள்கையாகக் கடைப்பிடிக்கின்றன.

நாய்கள் காட்டும் விசுவாசம், கழுகுகளின் வலிமை, டால்ஃபின்களின் புத்திசாலித்தனம் இவற்றை நாம் மதிக்கிறோம். ஏனென்றால், இதுபோன்ற நற்பண்புகள் மனிதர்களிடம் இருந்தால் சிறந்தது என்று நினைக்கிறோம்.

## வாழ்க்கையின் மீது கொண்ட பற்று:

அதுபோல் புறாக்களிடம் கொண்டாட வேண்டிய குணம் ஒன்று இருக்கிறது. அதுதான், தன் வாழ்க்கையின் மீது அவை கொண்ட பற்றுதலும் வாழ வேண்டும் என்ற தீவிரமும் (passion and ardour).






Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan

# கம்பன் அடிப்பொடி பழ.பழனியப்பன் மற்றும் எஸ்பி. முத்துராமன் ஆகியோருக்கு கம்பன் கழக விருது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் (8.8.2025) அன்று சென்னையில் நடைபெற்ற சென்னை கம்பன் கழகத்தின் பொலிவுமிகு பொன்விழா நிறைவு விழாவில், ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் கவிச்சக்கரவர்த்தி கம்பர் விருதினை கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கும், இயற்றமிழ் அறிஞர் விருதுகளை பேராசிரியர் ஞானசுந்தரம், கம்பன் அடிப்பொடி பழ. பழனியப்பன், பேராசிரியர் சாரதா நம்பிஆரூரன், திரு. சுகி சிவம், திரு. இலங்கை ஜெயராஜ் ஆகியோருக்கும், கம்பன் கலைநயச் செல்வர் விருதினை திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமன் அவர்களுக்கும், வழங்கி சிறப்பித்தார். விழாவில், மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் அறிஞர்கள் மற்றும் சான்றோர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

# ஆறு. அழகப்பனார் 89ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா




கலைமாமணி முனைவர் ஆறு. அழகப்பன் அவர்களின் 89-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா சென்னை சேத்துபட்டில் அமைந்துள்ள World University Service Centre அரங்கில் 10-08-2025 அன்று காலை நடைபெற்றது. விழாவில் ஆறு. அழகப்பன் அவர்கள் எழுதி, தமிழ்ச்சுரங்கம் பதிப்பகம் வெளியிட்ட எட்டு நூல்களைப் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் வெளியிட, 'தமிழ்க்கடல்' தேவகோட்டை இராமநாதன் பெற்றுக் கொண்டார். 89 ஆம் அகவை விழா கண்ட கலைமாமணி முனைவர் ஆறு. அழகப்பன் அவர்களை வாசகர்கள் சார்பாக "நமது செட்டிநாடு" வாழ்த்தி மகிழ்கிறது.

Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 August - 2025
Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2025-2027
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2025-2027 and published on first week of every month.

